பக்கங்கள்-16 மாசி,07.2016 விலை-30.00

தினப்புயலில் சிறப்பு விளம்பரம்
விசேட விலைக் கழிவுடன் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க...
0778195947, 0776473692

நடுநிலை இதழ்

# தினப்புயல்

news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -153



## தமிழீழ இலட்சியத்தில் இருந்து நான் பின்வாங்கினால், என்னுடைய பாதுகாவலரே என்னைச் சுட்டுக்கொல்லலாம் - பிரபாகரன்

## அன்று தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்தியிருந்தால், தமிழீழம் கிடைத்திருக்கும் - சுதந்திரப் போராட்டம் பற்றிய பார்வை

## சர்வதேச விசாரணை தொடர்பில் அரசின் இரட்டை வேடம்




-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ இலட்சியத்தில் இருந்து நான் பின்வாங்கினால், எனது பாதுகாவலரே என்னைச் சுட்டுக்கொல்லலாம் - பிரபாகரன்



தமிழீழப்போராட்ட வரலாறு மூன்று தசாப்தங்களைக் கடந்துள்ள நிலையிலும் விடுதலைப்புலிகளின் தலைவரான பிரபாகரனது போராட்ட உத்திகள் காலத்திற்குக்காலம் மாற்றப்பட்டு போராட்டம் பெரும் வளர்ச்சி கண்டது. இவ்வாறான சூழ்நிலையில் தான் விடுதலைப்புலிகளின் போராட்டத்தை அழித்தொழிக்கவேண்டும் என சர்வதேச நாடுகள் கங்கணம்கட்டி, போராட்டத்திற்கு முற்றுப்புள்ளியினை வைத்தன. பிரபாகரனது போராட்டத்தின் ஆழத்தை அறிந்துகொண்ட சர்வதேசம், நாளடைவில் வல்லரசு நாடுகளுக்கு இப்போராட்டம் சவாலாக அமைந்துவிடும் என்கின்ற காரணத்தினால் பிரபாகரனது போராட்டத்தை இலங்கையில் இருந்து முற்றாக அழித்தொழிக்கத் தீர்மானித்தன. யுத்தத்தின் தந்திரோபாயங்கள் மாற்றப்பட்ட நிலையில் விடுதலைப்புலிகளுடைய கடல், வான், தரை என்ற மும்முனைகளையும் சர்வதேச நாடுகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தன.

போராட்ட வரலாற்றில் ஆரம்ப கட்டங்கள் காட்டிக்கொடுப்புக்கு மத்தியில் அமைந்தபோதும், தொடர்ச்சியான வெற்றிகளைக் கண்டுவந்தனர் விடுதலைப்புலிகள். ஒரு பலம்வாய்ந்த இயக்கமாக இருந்ததன் காரணமாக அவ்வப்போது இடம்பெற்றதேசத்துரோகப் பிரச்சினைகளையெல்லாம் பிரபாகரன் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்திருந்தார். டொமினிக்- விடுதலைப்புலிகளின் நிதிப்பொறுப்பாளர், யோகி - விடுதலைப்புலிகளின் அரசியற் துறைப்பொறுப்பாளர், மாத்தையா- வன்னி மாவட்ட கட்டளைத்தளபதி, கிட்டு - விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட கட்டளைத்தளபதி, விக்ரர்-மன்னார் மாவட்ட கட்டளைத்தளபதி ஆகியோர் விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளாக இருந்த காலகட்டத்தில் இவர்களுக்கிடையில் பிரிவினைவாதங்கள் தோற்றுவிக்கப்பட்டது. இதன் காரணமாக இவர்களுக்கு பிரபாகரனால் தண்டனை வழங்கப்பட்டு அவர்களது பதவிகளும் பறிக்கப்பட்டது. தேசத்துரோக நடவடிக்கைகளின் காரணமாக இந்தியாவிற்குப் பேச்சுவார்த்தைக்காகச் சென்ற குமரப்பா புலேந்திரன் உட்பட 12 போராளிகள் தமது உயிரை நீத்தனர். சர்வதேச கடற்பரப்பின் ஊடாக வந்த கிட்டுவை இந்தியாவின் ரோவிற்கு மாத்தையா காட்டிக்கொடுத்தார். அன்பழகன், ரெஜினோல்ட், பழனி போன்றவர்கள் கடற்தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். இதில் தளபதி கிட்டு கப்பலைத்தகர்த்து தன்னைத்தானே தற்கொலை செய்துகொண்டார். அதனால் விடுதலைப்புலிகளின் ஆயுத விநியோகங்கள் முற்றாகத் தடைப்பட்டன. 2000ம் ஆண்டிற்குப் பின்னர் போராட்டம் வளர்ச்சிபெற்று விமானப்படையினைக் கொண்டிருக்கும் அளவிற்கு பரிணாமமடைந்தது. இது சர்வதேசத்திற்கு சவாலாக விளங்கியபோதும் விடுதலைப்புலிகளின் போராட்டத்தை சீர்குலைப்பதற்காக நோர்வே அரசாங்கம் இலங்கையில் தனது மூக்கினை நுழைத்துக்கொண்டது. நோர்வே அரசாங்கம் இதுவரையில் எந்தவொரு நாட்டிலும் தனது சமாதானப்பேச்சுக்களை முன்னெடுத்து அந்நாடு முழுமையான சமாதானத்தினை அடைந்த வரலாறுகள் இல்லை. சமாதானப்புறாவாக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு ஒரு நாட்டிற்குள் நுழைகின்ற நோர்வேயரசு போராட்டத்தின். களநிலைகளை மழுங்கடிப்பதற்காக செயற்படும் அமெரிக்கரசின் ஒரு முகவராகும்.

இவ்வாறு சமாதானப் பேச்சுக்கள் ஏற்படுத்தப்பட்டு இடைக்கால நிர்வாகம் விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டபோது அந்த இடைவெளிக்குள் நோர்வே அரசானது தனது இராஜதந்திர ரீதியிலான அணுகுமுறைகளை விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டது. பலம்வாய்ந்த ஒரு இராணுவ அமைப்பாகவிருந்த விடுதலைப்புலிகள் திடீரென அவர்களின் கட்டமைப்புக்கள் அனைத்தும் மழுங்கடிக்கப்படுவதற்கான காரணம் என்னவென்று பார்க்கும்போது, விடுதலைப்புலிகளின் ஒட்டுமொத்த இராணுவப் படையணிகளுக்கும் கருணா அம்மான் அவர்களே பொறுப்பு வகித்தார். அவரது போராட்ட நிலைமைகளை பார்க்கும்போது அதிகமாக வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் வெற்றி கண்டுள்ளார்.

இலங்கையரசும், நோர்வேயும் இவரை விடுதலைப்புலிகளிடமிருந்து பிளவுபடுத்துவதன் ஊடாக வெற்றிகாண இயலும் என்பதை தீர்மானித்துக்கொண்டன. 2003,2004,2005ஆம் ஆண்டுகளில் ஒஸ்லோ - டோக்கியோவில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது கருணாவைப் பலவீனப்படுத்தும் நோக்கோடு அவர் தங்கியிருந்த விடுதி அறைக்கு வெளிநாட்டிலே பாலியல்தொழில் புரியும் பெண்கள் அனுப்பிவைக்கப்பட்டனர். பேச்சுவார்த்தைகளின்போது தனியாக கவனித்துக்கொள்வதற்கும் ஒரு பெண் நியமிக்கப்பட்டார். அவர் இன்றுவரையும் கருணாவுடன் இருக்கின்றார். இராணுவ வீரராக, ஒரு பலமிக்க போராளியாகத் திகழ்ந்த கருணாவை விபச்சார விடுதி மற்றும் ஆடல் நிலையங்களில் பங்குபெறவைத்து ; அவரது மனம் திசைதிருப்பப்பட்டது.

இதன் விளைவாக போராட்டத்தினுடைய கட்டுக்கோப்பிலிருந்து கருணா அவர்கள் விலகிச்செல்ல ஆரம்பித்தார். இதன்போது தேசியத்தலைவர் பிரபாகரனுக்கும் இவர். தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றபோதும் கருணாவின் போராட்டத்தின் மீது நம்பிக்கை கொண்ட அவர் ஏனையவர்கள் கருணா தொடர்பாகக்கூறும் அவதூறானப் பேச்சுக்களைக கண்டுகொள்ளவில்லை. இக்காலகட்டத்தில் இலங்கை இராணுவத்தின் ஆழஊடுருவும் படையினர் விடுதலைப்புலிகளின் பிரதேசங்களில் உள்ள தளபதிகளை தாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் இதனால் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்களான போர்முனைத் தளபதி சுடர், விடுதலைப்புலிகளின் வான் படைத்தளபதியாகவிருந்த சங்கர், விடுதலைப்புலிகளின் உளவுப் புலனாய்வுப்பொறுப்பாளர் [illegible], போர்முனைத்தளபதி மதன், அரசியற் துறைப்பொறுப்பாளர் [illegible], இராணுவப் புலனாய்வு கிழக்கு மாகாணத் தளபதி ரமணன் [illegible] கொல்லப்பட்டனர்.

அதன் பின்னர் பிரபாகரன் கருணாவை கிழக்கு மாகாணத்தில் இருந்து வரும்படி அழைத்திருந்தார். ஆனால் கருணா வரவில்லை. இதனிடையே ஊடகங்களிலும், இராணுவ வட்டாரங்களில் இருந்தும் பிரபா- கருணாவின் பிளவு தொடர்பாக செய்திகள் வெளிவரத்தொடங்கின. நாளடைவில் இப்பிளவு உண்மையென நிரூபிக்கப்பட்டது. விடுதலைப்புலிகளுக்கும், கிழக்கு மாகாணப்போராளிகளுக்கும் இடையில் கடுமையான யுத்தம் இடம்பெற்றது. இதன்போது இலங்கையரசு எந்தவொரு செயற்பாட்டையும் வெளிப்படுத்தாது வேடிக்கை பார்த்து நின்றது. விடுதலைப்புலிகள் தமக்கிடையே யுத்தங்களை மேற்கொண்டு அதன் ஊடாக அழிந்துபோகட்டும் என்பதை எதிர்பார்த்த சர்வதேசமும், சிங்கள அரசும் ஒருகட்டத்தில் அவர்களின் எதிர்பார்ப்பு பொய்த்துப்போனது. விடுதலைப்புலிகள் அவர்களைத் தோற்கடித்து அவ்வணியினரை தமது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவந்தனர். நிரந்தரப் பிரிவினை ஏற்படுத்திவிட்டோம் எனக்கூறி கருணா அணியினரை அரசு தம்பக்கமாக இணைத்துக்கொண்டது. இங்கேதான் தமிழினத் துரோகியாக கருணா சித்தரிக்கப்படுகின்றார்.

தமிழ் மக்களது மூன்று தசாப்த போராட்டத்தினை காட்டிக் கொடுத்ததுடன் அவர்களை அழித்தொழிப்பதை நோக்காகக் கொண்டும் சிங்களக் கூலிப்படைகளுடன் செயற்பட்டார். இதற்கு முன்னரும் இவ்வாறான காட்டிக்கொடுப்புச் சம்பவங்கள் இடம்பெற்றபோதும் அவை பலனளிக்கவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் தேசியத்தலைவர் தமது சகாக்களுடன் மீண்டும் காட்டிற்குள் பிரவேசித்தார். இறுதிவரை எதிரிகளுடன் போரிட்டார். 2005 ஆரம்பித்த யுத்தம் 2009 வரை நீடித்தது. விடுதலைப்புலிகளின் ஒவ்வொரு தளங்களையும் அழித்தொழிப்பதற்கு சர்வதேசமும், இலங்கை இராணுவத்தினரும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர். விடுதலைப்புலிகளுக்கு உக்ரைன், ரஷ்யா, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து வந்த ஆயுதக்கப்பல்கள் காட்டிக்கொடுக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டன. இதில் 08 ஆயுதக்கப்பல்கள் அடங்கும்.

இவ்வாறான சூழ்நிலையில் சர்வதேசத்தில் ஆயுதக்கொள்வனவிற்குப் பொறுப்பாகவிருந்த குமரன் பத்மநாதன் என்றழைக்கப்படும் கேபி போராட்டத்தை காட்டிக்கொடுக்கும் சூத்திரதாரியாக மாறினார். சர்வதேசத்திலும், உள்ளூரிலும் மிக முக்கிய புள்ளிகளாகவிருந்தவர்கள் கருணாவும், கேபியும் தான். • இவர்களினால் சர்வதேச மட்டத்திலான விடுதலைப்புலிகளின் வர்த்தகம், ஆயுதக்கொள்வனவு போன்ற செயற்பாடுகள் காட்டிக் கொடுக்கப்பட்டது. முப்பரிமாணங்களையும் கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் போராட்டம் மழுங்கடிக்கப்பட்டது. கொத்துக்கொத்தாக வன்னியில் சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை கொலைசெய்யப்பட்டபோதும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தான் கொண்ட இலட்சியத்தில் இருந்து சிறிதளவேனும் மாறவில்லை. அங்கு ஒரு விடயத்தை அவர் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். அதாவது தமிழீழ இலட்சியத்தில் இருந்து நான் பின்வாங்கினால், என்னுடைய பாதுகாவலரே என்னைச் சுட்டுக்கொள்வான் என்பதாகும். அது மட்டுமல்லாது நான் சாகலாம், நாம் சாகக்கூடாது என்பதே அவரது கருப்பொருளாகும். 30 ஆண்டுகால போராட்ட வரலாற்றில் 15 ஆட்சியாளர்களுடன் போரிட்டு வரலாறு படைத்த ஒரு தலைவராக பிரபாகரன் அவர்கள் திகழ்கின்றார். அதிலும் குறிப்பாக D.S.சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, ஜோன் கொத்தலாவல, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, விஜயானந்த திசாநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க, வில்லியம் கொபல்லாவ, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச, டி.பி.விஜேதுங்க, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ரட்ணசிறி விக்கிரமநாயக்க, தி.மு.ஜெயரட்ண, மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, 2009 காலப்பகுதிகளில் சிறிதுகாலம் பாதுகாப்பு அமைச்சராகவிருந்தவரும், தற்போதைய ஜனாதிபதியும் அதில் உள்ளடக்கப்படுவார். 1948-2009வரை இலங்கை வரலாற்றில் தடம்பதித்த ஒரு தலைவராக பிரபாகரன் திகழ்கின்றார். கட்டம் கட்டமாக சிங்கள பேரினவாத அரசு தமிழ் மக்களுடைய உரிமைகளை மறுத்துவந்த நிலையில் இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இன்றும் கூட சமாதானம் என்ற போர்வையில் தமிழ் மக்களிடையே பிரிவினைவாதத்தினை தோற்றுவிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் மிகத்தீவிரமாக இறங்கியுள்ளது. மீண்டும் ஒரு பிரிவாக த.தே.கூட்டமைப்பு மற்றும் வடமாகாண சபையின் உறுப்பினர்கள் என தற்போதும் பிரித்தாளப்படுகின்றது. எதிர்க்கட்சித் தலைவரும், த.தே.கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும், வடமாகாணசபையின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்கும் இடையில் நல்லுறவு காணப்படவில்லை. இவ்விடயம் அரசிற்கு ஒரு சாதகத்தன்மையினை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலைமைகள் தோற்றம் பெறும் போதெல்லாம் த.தே. கூட்டமைப்பின் சிலர் தேசியத்தலைவர் பிரபாகரனின் கொள்கைகளை மக்கள் மத்தியில் எடுத்துரைக்கின்றனர். தேர்தல் காலங்கள் வருகின்றபோது பிரபாகரன் தான் தேசியத்தலைவர் எனவும் தமிழ் மக்களது விடுதலைக்கான ஆரம்பம் இவர்தான் என்றெல்லாம் கூறுகின்றனர். பதவிகளைப் பெற்றவுடன் தங்களை மறந்து, மக்கள் நலனில் அக்கறை கொள்ளாது, தேசியத்தலைவரின் அறிவுரைகள், சிந்தனைகளில் இருந்து விலகி, த.தே.கூட்டமைப்புதமிழ்மக்களைதவறான பாதையில் திசைதிருப்ப முயற்சிக்கின்றது என்கின்ற குற்றச்சாட்டுக்களும் தமிழ் மக்களால் முன்வைக்கப்படுகின்றது.

கொள்கை என்பது ஒ[illegible] இலக்கினை நோக்கியது. இவ்விலக்கிலிருந்து தவறினால் தமிழ் மக்களுக்கான தீர்வுகளை எக்காலத்திலும் பெற்றுக்கொள்ளமுடியாது என தீர்க்கதரிசனமாக பிரபாகரன் அவர்கள் அன்றே கூறியிருக்கிறார். அதுவே இன்று நடைபெறுகின்றது. மாற்றுவழிகள் என்கின்றபோது எதனைக்கையாண்டு தமிழ் மக்களுக்கான விடுதலையை த.தே.கூட்டமைப்பு பெற்றுக்கொடுக்கப் போகின்றது. தமிழ் மக்களின் விடுதலைக்காகப்போராடி உயிர்நீத்த மக்களுக்கும், மாவீரர்களுக்கும் த.தே.கூட்டமைப்பினர் எதனைப்பெற்றுக் கொடுக்கப்போகின்றார்கள். தமிழ் மக்களது பாரம்பரியங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்படுகின்றன. இனப்படுகொலைகள் மூடிமறைக்கப்பட்டு போர்க்குற்றங்கள் என தற்போது பேசப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகள் இருக்கின்ற நிலையில் தமிழ் மக்களுக்கான தீர்வுகள் கிடைக்கப்பெறுமா? சமஷ்டியை கேட்கின்றோம் என்கிறது த.தே.கூட்டமைப்பு. அவ்வாறு வழங்க முடியாது என்கிறது இலங்கையரசு. உள்ளக விசாரணை வேண்டாம் சர்வதேச விசாரணையே இலங்கைக்குப் பொருத்தம் என்கிறது த.தே.கூட்டமைப்பு. இதனிடையே சர்வதேச நீதிபதிகளை இலங்கைக்கு வரவழைக்கப்போவதில்லை என்கிறது அரசு. இந்நிலையில் மீண்டும் தமிழ் மக்களை ஆயுதமேந்திப்போராடும் நிலைக்கு அரசு கொண்டுசெல்கின்றதா? என்ற கேள்வியும் எழுகின்றது. அடக்குமுறையே போராட்டம் ஆரம்பிக்க காரணமாகவிருந்தது. இன்று சிங்ஹலே என்ற இனவாதத்தைத்தூண்டும் விதமான ஒரு வார்த்தை நாடளாவிய ரீதியில் பரப்பப்படுகின்றது. 12ஆம் பக்கம் பார்க்க...

**இரணியன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## மீண்டும் தமிழினம் ஏமாற்றப்படப்போகின்றதா?

இலங்கை சுதந்திரமடைந்து 68வது ஆண்டு நிறைவைக்கொண்டாடியுள்ள இத்தருணத்தில் 42வருடங்கள் லிபிய நாட்டினை ஆண்ட கடாபியின் சர்வாதிகார ஆட்சி அழிக்கப்பட்டதைப்போன்று இலங்கையிலும் மஹிந்தவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு மைத்திரி-ரணிலின் தலைமையில் கூட்டரசாங்கம் என உருவாக்கப்பட்டு இம்முறை சுதந்திரதினம் கொண்டாடப்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருக்க, சர்வதேசத்தின் பார்வைக்காக ஒருசில மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளது. மஹிந்தவின் ஆட்சியில் அபிவிருத்திகள் பலவாறாக முன்னெடுக்கப்பட்டது. கூட்டரசாங்கம் அபிவிருத்திப் பணிகளை ஒருபுறம் வைத்துவிட்டு வடகிழக்குப் பகுதியின் மக்கள் சனத்தொகையினை கணக்கெடுப்பதும், மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாத வகையில் தமிழினத்திற்கு போலியான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கும் நடவடிக்கையையே மேற்கொள்கின்றது எனலாம். த.தே.கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி, பாராளுமன்ற குழுக்களின் தலைவர், பிரதம நீதியரசர் போன்ற பதவிகளை வழங்கியதன் ஊடாகவும், 68வது சுத்திரதின வைபவத்தில் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டமையின் ஊடாக கடந்த அரசைவிட நாம் தமிழ் மக்களுக்கான உரிமைகளை நாட்டில் வழங்கியிருக்கின்றோம் என்பதை எடுத்துக்காட்டுவதே அரசின் நோக்கமாகும். இதற்கு சிங்கள இனவாதிகள் எதிர்ப்பலைகளை வெளியிட்டதன் ஊடாக அதுவொரு தனிப்பட்ட அரசியலாகவும் 68வது சுதந்திர தினத்திற்கு முன்னரே மஹிந்தவின் புதல்வர் கைதுசெய்யப்பட்டதுடன், அவரது குடும்பத்தினர் சுதந்திர தின வைபவங்களில் பங்குகொள்ளமுடியாத நிலைமைக்கு சட்ட ஒழுங்குகளை இலங்கையில் நிலைநிறுத்தியிருக்கின்றோம் என்பதை வெளிக்காட்டி, தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்திலும் அவ்வாறானதொரு முறையே பேணப்படும் என்பதே அவர்களது மறைமுக செயற்பாடாக அமைந்துள்ளது. இந்தியாவை மையமாகக்கொண்டே இம்முறை தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டிருக்கின்றது எனலாம்.

சுதந்திரதினம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து இந்திய வெளியுறவுச் செயலர் சுஸ்மா அவர்களது வருகையுடன் தமிழ் மக்களின் இன நல்லுறவுக்கான பேச்சுக்களும் இடம்பெற்றுள்ளது. தற்போதைய அரசின் அரசியல் அணுகுமுறை என்பது தமிழினத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட சலுகைகளை வழங்குவதன் ஊடாக அவர்களை போதும் என்ற நிலைக்குத் தள்ளி அரசியலில் அதிகாரத்தொணியோடு வருபவர்களுக்கு பணத்தினை வழங்கி அவர்களின் அரசியல் நடவடிக்கைகளை நசுக்குவதையே நோக்காகக்கொண்டது.


ஆரம்பகால த.தே.கூட்டமைப்புக்கும், தற்போதைய த.தே.கூட்டமைப்புக்கும் வித்தியாசங்கள் நிறையவே உள்ளது. பணத்திற்கு விலைபோனது த.தே.கூட்டமைப்பு என்பதே தற்போதைய பலரின் கருத்து. அதனைப் பிரதிபலிக்கும் வகையில் த.தே.கூட்டமைப்பின் தலைமைக்கு எதிராக த.தே.கூட்டமைப்பின் உறுப்பினர்களே சுதந்திரதினத்தின்போது வடகிழக்கில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். இதில் முக்கியமாக "சுதந்திரம் இல்லாத மக்களின் பிரதிநிதி சுதந்திரதின நிகழ்வில்" என்றவாறான பதாதைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இது கட்சிகளுக்குள் பிளவுத்தன்மையினை ஏற்படுத்தும் ஒரு செயலாகும். ஏற்கனவே த.தே.கூட்டமைப்பின் தலைமைக்கும், வடமாகாணசபையின் முதல்வருக்கும் இடையில் பிரிவினைகளை தோற்றுவித்துள்ள கூட்டரசு, தமிழினத் தலைவர்களுக்குள்ளும் பிரிவினைகளை உருவாக்குவதன் ஊடாக, தமது அரசியல் திட்டங்களில் வெற்றிகாணலாம் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். தமிழ் மக்களது அரசியல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இவ்வாறே பயணிக்குமாகவிருந்தால் இதுவே தமிழ் மக்களது பலவீனம் என்பதை இவ்வரசாங்கம் உணர்ந்து, தமிழ் மக்களது எதிர்கால அரசியல் அபிலாசைகளை நாட்டில் இருந்து முற்றிலுமாக அப்புறப்படுத்தும் எனலாம்.

---

**77**

கப்டன் மனைமதியின் PK LMGயையும் அழைத்துக் கொண்டு, உள்ளே நின்ற எறிகணை செலுத்திகளின் இணைப்பையும் ஏற்படுத்தியவாறு நகரும்படி கட்டளையிட்டார். அப்போது அரசியின் பகுதியைநோக்கி முன்னேறிய இராணுவம் தாக்குதலைச் செய்தது. அவ்விடத்தைவிட்டு விலகாது இரும்புக் கவசமென நின்று படையினரைத் தடுத்துக்கொண்டிருந்த அந்தப் போராளிகள் அனைவரும் வீரச்சாவடைந்திருந்தனர். அங்கு நின்ற குறியாக இருந்தனர். உண்மையைச் சொல்லப்போனால் இத்தாவில் பகுதியில் உள்ள எந்தக் காப்பரணும் முழுமைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. போதிய நேரமில்லை என்பதுடன் படையினரின் தொடர்ச்சியான எறிகணை வீச்சு இன்னும் பாதகமாய்ப் போனது. 2அடி ஆழத்துக்கு நிலத்தைக் கிண்டிவிடும் எறிகணையிலிருந்து பாதுகாக்க வீட்டுக் கூரைகளின் உடைந்த சலாகைகளும், தீராந்திகளுமே கிடைத்தன. எனினும் இவைகளைப் பயன்படுத்தி L வடிவில் அமைக்கப்பட்டிருந்த அகழிகளை கவனித்துக்கொண்டனர். எமது விநியோகப் பாதையைத் துண்டிக்கவேண்டும் என்பதே படைத்தரப்பின் நோக்கமாக இருந்ததால் நீரேரிக்கரையை அண்டியதாகவே அவர்களது முன்னேற்ற முயற்சி இருந்தது. இங்கு எவ்வெவ்விடங்களில் இராணுவம் நிற்கின்றது என்பது துல்லியமாகத் தெரியாவிட்டாலும், இடையிடையே கேட்கும் சூட்டுச் சத்தங்கள் மூலம் ஓரளவு ஊகிக்க முடிந்தது. எனவே தாக்குதலைத் தொடுத்தபடி எறிகணையுதவியுடன் முன்னேறினார் தர்ஷா.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி



போராளிகள் தம் ஆயுதத்தை எதிர்த்தரப்பு எடுக்கக்கூடாது என்பதற்காக இறுக அணைத்தபடியே உயிர்விட்டிருந்தனர்.

இப்போது விதுஷாவின் கட்டளை மையத்திலிருந்து 150மீற்றரில் ராங்கிகள் கடந்து உள்ளே சென்றதுடன் ரவைகள் சீறத்தொடங்கின. தொடர்ந்து நீரேரிக் கரைக்கு அண்மையாக இருந்த கேணல் பால்ராஜின் கட்டளை மையத்தையும் தாண்டி மறுமுனைக்குச்சென்ற ராங்கிகளைத் தொடர்ந்து துருப்புகளும் நகர்ந்தன. பின்னணிப் பணிகளில் ஈடுபட்டிருந்த போராளிகளுக்கும் தாக்குதல் வாய்ப்பு உருவானது. அவர்களின் ஆயுதங்கள் நீரேரிக் கரையைநோக்கிப் பொழிந்தன. RPGயாளர்கள் பற்றைகளுள் ஊடுருவி ராங்கிகளைத் தேடினார்கள். தனது PK LMG உடன் உதவியாளர் கூட இல்லாமல் தனியே ஓடிச்சென்ற தமிழ்மதி நகரும் துருப்புகளுக்குத் தாக்கமான சூட்டை வழங்கிக்கொண்டிருந்தார். அங்கே நின்ற ஆண் போராளி ஒருவர் வேகமாக ரவைப்பட்டியில் ரவையேற்றம் செய்துகொடுக்க இவர் சுட்டுக்கொண்டிருந்தார். ஏனையோர் துப்பாக்கியால் தாக்கினர். அதனால் மேலே இராணுவத்தினரது நகர்வு ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டது.

முன்னணி நிலையின் நிலைமையை அறியக்கூடிய வகையில் யாருடைய தொடர்புமே இல்லை. உடைந்து நொருங்கிப்போன தொலைத்தொடர்புக் கருவியுடன் போராளிகளும், இன்னும் நிறுத்தப்படாமல் தனியே கிடந்து கட்டளைகளை ஒலித்துக்கொண்டிருந்த கருவிகளுமாய் நிலைமை மாறியிருந்தது. ஆனாலும் முன்னரங்கில் இன்னும் விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்த துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் மட்டும் நம்பிக்கையைத் தருவதாய் இருந்தது. முழுமையாக வேலைசெய்து முடிக்கப்படாத அகழிகள் போதிய பாதுகாப்பைத் தராதபோதிலும், சுற்றிவர வீழ்ந்து வெடிக்கும் எறிகணை மழையைப் பொருட்படுத்தாது, முன்னேயிருந்து வரும் இராணுவத்தைத் தடுத்து நிறுத்துவதிலேயே அனைவரும் மூழ்குவதற்குப் படைத்தரப்பு விட்டு வைக்கவில்லை. போட்டவை போட்டபடி இருக்க நாங்களும் எமது துப்பாக்கிகளுமாய்த் தாக்குதலை எதிர்கொண்டவாறிருந்தோம்.

திரும்பும் இடமெங்கும் இராணுவத்தினரின் இரத்தம் தோய்ந்த உடல்களே சிதறிக்கிடந்தன. முன்னரங்க நிலைகளை ஒருவாறு கடந்து உள்ளே சென்றவர்களும் தப்பவில்லை. எறிகணை செலுத்திகளும், உள்ளே நின்ற போராளிகளும் கொடுத்த எதிர்பாராத அடி மீண்டும் பகைவரை நிலைகுலையச் செய்தது. சாதாரணமாகவே எமது எறிகணை ஏவுதளங்கள் இராணுவத்தைநோக்கித் தாக்குதலைச் செய்தால், உடனேயே அந்த இடத்துக்குப் படைத்தரப்பின் எறிகணைகள் வந்து வீழ்வதே வழமை. கிட்டத்தட்ட 2 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள அந்தக் களத்தினுள் சிங்களப்படை தொடுத்த வலிச்சக்கரவுக்கெதிராக சண்டையிடுவதென்பது தீக்குளிப்பதற்குச் சமனானது. ஏனெனில் இத்தாவில் முழுவதுமே எறிகணை செலுத்திகளைக் கவனிக்கவென சிறப்பாகவே தமது எறிகணை செலுத்திகளை ஒழுங்குசெய்திருந்தது இராணுவத் தரப்பு. அன்புச்செல்வி, தேவிகா ஆகியோரின் 82மி.மீ. எறிகணை செலுத்திகள், கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் 120மி.மீ. எறிகணை செலுத்திகள் மற்றும் ஆட்லறிகள் என்பன தாக்குதலின் வெற்றிக்குக் கணிசமான பங்காற்றின. ஒரு கட்டத்தில் உள்ளேயிருந்த எறிகணை ஏவுதளங்கள் செயற்பட முடியாமற்போக, குடாரப்புப் பகுதியிலிருந்து ஆட்லறிகள், பல்குழல் பீரங்கிகள் என்பன அப்பணியை விரைவாக, நிறைவாகச் செய்தன.

இப்போது முன்னேறிய இராணுவத்தைத் தடுத்து நிறுத்தும் படலம் முடிந்து, உள்ளே வைத்துத் தாக்கும் படலம் ஆரம்பமானது. எழுதுமட்டுவாளைநோக்கிய பகுதியில் நின்ற விடுதலையின் அணி பற்றைகளையெல்லாம் தாண்டி விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்து தர்சாவின் அணியுடன் இணைந்து தாக்குதலுக்குத் தயாரானது. இவர்கள் நின்ற பகுதியை ஏனைய வீரர்கள்

இப்போது இராணுவம் எமது பகுதியைநோக்கி ஓட்டம் பிடிக்கத் தொடங்கியது. எமது பகுதிக்குள் நுழைந்து துரத்தப்பட்ட இரு படையினர் முன்னணி நிலைக்கு ஓடிவர, அவ்விடத்தில் எறிகணைகள் வீழ்ந்தன. இருவரும் பாதுகாப்புக்காகப் பற்றைக்கரையிலிருந்த பதுங்ககழியினுள் குதித்தனர். அதற்குள் ஏற்கனவே இரு பேராளிகள் ரவை முடிந்த ஆயுதத்துடன் நின்றனர். உருமறைக்கப்பட்ட அந்நிலையினுள் அவர்கள் இருந்ததை அச்சமயம் இவர்கள் கவனிக்க வாய்ப்பில்லைத்தான். பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போலாயிற்று. கிட்டவந்த இராணுவத்தைத் தப்பவிடலாமா? எப்போதும் எதிரியிடமிருந்து எடுத்து எதிரிக்கே அடிப்பவர்கள் தானே விடுதலைப்புலிகள். குழியினுள் குதித்தவர்களிடம் இழுத்துப் பறித்தனர் ஆயுதத்தை. போராடவேண்டித்தான் இருந்தது. தலைவர் அனுப்பியது சாக அல்ல, சாதிக்க. ஓர்மம் மனதில் எழ, இறுதியில் ஆயுதம் இவர்களது கையில். பறித்ததும் விசையில் அசைய பகையுயிர்கள் பறந்துபோயின. அவையே ஆயுதத்தின் இறுதி ரவைகளுமாகின.

முன்னரங்க நிலைகளை மீளக் கைப்பற்றிக்கொண்டு வந்த தர்ஷாவின் அணி இப்போது மேஜர் அரசி வீரச்சாவடைந்த நிலையருகே வந்தது. அவர்களிடமிருந்த LKGயை பெரும் முயற்சிசெய்து பிரித்தெடுத்து, சுற்றிவர வீழ்ந்திருந்த இராணுவத்தினது வெடிபொருட்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டன. எமது 82மி.மீ. எறிகணை செலுத்திகள் தேவையான இடங்களுக்கெல்லாம் துல்லியமாக எறிகணைத் தாக்குதல்களைச் செய்தன. இருபுறமும் காப்புச்சூட்டை வழங்கிபடியே அணியை நகர்த்தும்படி கட்டளை வழங்கினார் விதுஷா. எந்தப் பகுதியுமே பாதுகாப்பற்றதாகத்தான் இருந்தது. கைப்பற்றப்பட்ட நிலைகளில் விடப்படுவதற்காக இடதுபுறமாக அணிகள் நகர்த்தப்பட்டன. ஒவ்வொரு நிலையாகக் கைப்பற்றப்பட பின்னாலே வந்த போராளிகள் அதனைத் தக்கவைத்துக்கொண்டனர். அடிக்கடி விதுஷாவின் கட்டளைகள் தர்சாவுக்குக் கிடைத்துக்கொண்டிருந்தன. "நீங்கள் போற பக்கத்தில எங்கடையாக்களின்ர தொடர்புகள் எப்படியும் இருக்கும். அதுக்குரிய மாதிரி ரீமை நகர்த்து" என தேவையான இடங்களுக்குக்கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்தார். முன்னேறிய தர்சாவின் அணி இப்போது 52க்குச் சென்றது. சூடுகளை வழங்கியபடி நகர முற்படுகையில் முன்னாலே ஒரு குரல் கேட்பதுபோல இருக்கவே, தாக்குதலை நிறுத்தச்சொல்லிவிட்டு உற்றுக்கேட்டார். "தர்சாக்கா தர்சாக்கா..." எனக்கேட்கவே ஆச்சரியத்துடன் மெதுவாக அவ்விடத்தைநோக்கி நகர்ந்தனர்.

தொடர்வான்...

**தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்**

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 490. | 2ஆம்.லெப்.நிதர்சனா | சர்மினி இந்திரகுமார் | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 491. | 2ஆம்.லெப்.கயல்நிலா | அம்கேஸ்வரி விவேகானந்தா | மன்னார் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 492. | 2ஆம்.லெப்.சுசிலா | திருச்செல்வி இராமநாதன் | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 493. | 2ஆம்.லெப்.மனைமயில் | வசந்தகுமார் கறுப்பையா | கிளிநொச்சி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 494. | 2ஆம்.லெப்.தகைமகள் | வனிதா முருகேசு | மன்னார்(யாழ்) | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 495. | 2ஆம்.[illegible] | [illegible] | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 496. | 2ஆம்.[illegible] | [illegible] | வன்னி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணை தொடர்பில் அரசின் இரட்டைவேடம்

இலங்கைத்தீவின் பண்டைய வரலாற்றினை எடுத்துக்கொண்டால் யுத்தம் - சமாதானம், யுத்தம் - சமாதானம் என்ற நிலைப்பாடுகளே காணப்பட்டன. இனவாதம் எப்போது இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டதோ அன்றிலிருந்து இன்றுவரை தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தில் அரசாங்கம் இரட்டை வேடம் காட்டிவந்ததே வரலாறு. யுத்தத்திற்கு முன்னர் பின்னரான காலங்களில் சமாதானம் எனக்கூறிக்கொள்ளும் அரசாங்கம் நிபந்தனைகளோடு தமிழ் மக்களுக்கான ஒருசில தீர்வுத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. திருத்தச்சட்டங்களின் மூலம் தீர்வுகளைப் பெற்றுத்தருவதாக பேச்சளவில் மாத்திரம் கூறிக்கொண்டு, இனவழிப்புக்கான எந்தவொரு பரிகாரத்தினையும் தேடாமல் மௌனித்திருந்த நிலையிலேயே சர்வதேச மட்டத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட யுத்தக்குற்றங்கள் மீதான விசாரணை ஆரம்பித்தது.

ஐ.நா சபையினது அமர்வுகள் பல ஏற்கனவே நடைபெற்று முடிந்திருக்கின்ற நிலையில் எதிர்வரும் ஜூன் மாதம் போர்க்குற்ற விசாரணைகள் முறையே நடைபெறவிருக்கின்றன. இதில் சர்வதேச, உள்ளூர் விசாரணைகள், போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள், சிறுவர் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்றவைகள் உள்ளடக்கப்படுகின்றன. காலத்தின் தேவைக்கேற்ப அரசாங்கம் தனது நிலைகளை மாற்றிவருகின்றது என்றே கூறவேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஒரு கருத்தினை தெரிவிக்கின்றபோது அதற்குமாறான கருத்தினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தெரிவிக்கின்றார். இவ்விடயம் அரசியலில் சர்வசாதாரணமாக அமைந்தாலும் இதுவரைகாலமும் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் அல்லது அவர்களுக்கான சுயநிர்ணய உரிமைகள் வழங்கப்படவில்லை.

காலத்துக்குக்காலம் வந்த அரசாங்கங்கள் என்ன செய்தன? என்ன செய்யவில்லை என்று கேட்டுக்கொள்ள முடியும். இதற்குப்பல முன்னுதாரணங்கள் இருக்கின்றன. பண்டா-செல்வா, டட்லி சேனாநாயக்கா, சிறிமாவோ ஒப்பந்தம், சந்திரிக்கா-பிரபாகரன், ரணில்-பிரபாகரன் போன்ற ஒப்பந்தங்கள் அனைத்தும் கிழித்தெறியப்பட்டன. 1987ம் ஆண்டுகளில் செய்யப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தமும் இதில் அடங்கும். வடமாகாண சபையில் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனினும் இனப்படுகொலை இடம்பெறவில்லை என அரசாங்கம் கூறுகின்றது. வெறுமனே இலங்கையில் இடம்பெற்றதுபோர்க்குற்றம் என்றும். நாட்டைக்காப்பதற்கான நடவடிக்கையே தவிர வேறொன்றுமில்லை எனக்கூறுகின்றது. இதற்கு உடந்தையாக சிங்கள இனவாதக்கட்சிகளும் தமிழ் மக்களுக்கான எந்தவொரு தீர்வுத்திட்டங்களையும் விரும்பவில்லை என்பது புலனாகின்றது.

தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் பலன்களை அடைகின்ற பொழுது ஏதோவொரு வகையில் இனவாதிகளால் முற்றுப்புள்ளியிடப்படும். தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பதற்கு இந்த நாட்டில் இடமில்லை என்பது அரசின் நிலைப்பாடு. மஹிந்தவின் ஆட்சியை குறைகூறிக்கொண்டு ஆட்சி பீடமேறிய மைத்திரிபால சிறிசேன அவர்கள் கூட்டாட்சி என்ற போர்வையில் தமிழினத்தை ஒட்டுமொத்தமாக ஏமாற்றி வருகின்றார்.

இது தமிழ்த்தலைமைகளுக்குத் தெரியாத விடயம் என்று கூறமுடியாது. 03 தசாப்தகாலம் போராடிய இனத்தை பயங்கரவாதம் என முத்திரைகுத்தி தனது இனவெறிப்போராட்டத்தை தமிழ மக்கள் மீது இலங்கையரசு நடாத்தி முடித்தது. இவ்விடயம் தொடர்பாக உலக நாடுகளுக்குத் தெரியாதிருக்க முடியாது. தமிழ் மக்களுடைய போராட்டத்தை மழுங்கடிக்கும் விதத்தில் அமெரிக்கா, இந்தியா, பாக்கிஸ்தான், இஸ்ரேல், ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இதில் பங்குபற்றின. இறுதி யுத்தத்தின்போது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வந்த 08 ஆயுதக்கப்பல்கள் சர்வதேச கடற்பரப்பிலேயே மூழ்கடிக்கப்பட்டது. இதனைக் காட்டிக்கொடுத்தது இந்தியாவின் புலனாய்வு அமைப்பான ரோவாகும். அதுமட்டுமல்லாது இறுதி நேர யுத்தத்தின்போது வவுனியாவின் ஜோசப் இராணுவ முகாமில் இந்திய விமானப்படையின் உயர் அதிகாரிகள் தங்கியிருந்து செயற்பட்டமைக்கான அனைத்து ஆதாரங்களும் இருக்கின்றன. ஆனால் இன்று இவர்கள் அனைவரும் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை அல்ல போர்க்குற்றமே என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்களைத்தேடும் முயற்சியில் கடுமையாக ஈடுபட்டுள்ளனர். சர்வதேச நாடுகள் அனைத்தும் தமது பூகோள அரசியலை மையப்படுத்தியே இலங்கையுடன் நட்புறவினைக் பேணுகின்றன.

இலங்கையில் இடம்பெற்றதான யுத்தம் என்பது அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூறிக்கொள்ள முடியும். பன்னாட்டுப் படைகளும் ஒரு இனச்சுத்திகரிப்பிலே ஈடுபட்டது என்பது இலங்கையில் பயங்கரவாதம் தலைதூக்குகின்றது அதனைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதனாலாகும். குறிப்பாக திம்பு முதல் டோக்கியோ வரையிலான பேச்சுவார்த்தைகளை எடுத்துக்கொண்டால் யாரோடு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றது. பயங்கரவாதிகளுடனா? 2004ம் ஆண்டு விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் கையளிக்கப்பட்டபோது விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் இலங்கையில் தமது காரியாலயங்களை ஆரம்பித்து சிவில் நிர்வாகத்தினை ஏற்படுத்தினர். இதனை சீர்குலைத்தது யார்? எதற்காக சீர்குலைத்தார்கள்? சர்வதேச மட்டத்தில் 07 பேச்சுக்களும், உள்ளூர் மட்டத்தில் 13 பேச்சுக்களும் இடம்பெற்றது. அப்போது ஜப்பானின் தூதுவர் யசூசி அகாசி, எரிக்சொல்ஹெய்ம் போன்றோர் பிரபாகரனைச் சந்தித்தனர். இது ஒரு பயங்கரவாதப் போராட்டம் என்றால் இத்தலைவர்கள் அனைவரும் பிரபாகரனைச் சந்திக்கவேண்டியதன் அவசியம் என்ன? இதிலிருந்து இந்நாட்டுப் பிரதிநிதிகளினதும், நாடுகளினதும் சுயநல அரசியலை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். இது மட்டுமல்லாது யுத்தம் உச்சக்கட்டத்தை நோக்கிச்சென்றுகொண்டிருக்கும்போது விடுதலைப்புலிகளின் தலைவரை சரணடையுமாறு பணித்தவேளை அதற்கு அவர் முடியாது என்ற பதிலையே கூறியிருந்தார். விடுதலைப்புலிகள் அமைப்பில் 52 கட்டமைப்புக்களுக்கு மேல் இருந்ததாகக் கூறப்படுகின்றது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழீழ வைப்பகம் உட்பட தனி சிவில் நிர்வாகம் அங்கு நடத்தப்பட்டது. விடுதலைப்புலிகளையும், தமிழினத்தையும் பயங்கரவாதிகள் என முத்திரைகுத்தியே இந்த இன அழிப்பினை இலங்கையரசு மேற்கொண்டது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகமாகிவிடும் என்கின்ற காரணத்தினால் விடுதலைப்புலிகளின் போராட்டத்தை வேரோடு அழித்துவிட திட்டம் தீட்டப்பட்டது. அதேநேரம் விடுதலைப்புலிகளின் போராட்டத்தை வளர்த்ததும் இந்தியரசுதான். காலத்தின் தேவைக்கேற்ப நாடுகள் அனைத்தும் வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டன. தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ் மக்களது ஏகபிரதிநிதிகள். பன்னாட்டுப் படைகளின் உள்நுழைவால் தமிழினம் பல இன்னல்களை அனுபவித்தது. போர்க்குற்றம் என்பதற்கப்பால் மிக மோசமான முறையில் தமிழ் மக்கள் நடத்தப்பட்டனர். பல பெண்கள் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டனர். பெண் போராளிகளது உடல்கள் மிருகங்கள் போல வீதிகளில் வீசப்பட்டது. இசைப்பிரியா என்கின்ற ஊடகப்போராளி இராணுவத்தினரால் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டார். இவையனைத்தும் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதற்கான ஆதாரங்களாக [illegible] சர்வதேச விசாரணைகள் தொடர்பில்



அரசாங்கம் தமது நிலைப்பாட்டை பச்சோந்திகள் போல மாற்றிவருவது கவலைக்கிடமே.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது போராட்டத்தை நடத்திச்சென்ற அதே நேரம் சிங்கள இனத்திற்கெதிராக இவ்வாறான மோசமான செயற்பாடுகளில் ஈடுபட்டார்களா? இல்லை. தமது இனத்தை காப்பாற்றவேண்டும்என்றுபோராட்டத்தை முன்னெடுத்தார்கள். ஐ.நா சபையினுடைய இனப்படுகொலை என்ற வரையறையில் ஒரு இனத்தை பகுதியாகவோ அல்லது தொகுதியாகவோ அழித்தொழிப்பது இனப்படுகொலை என்றும், கர்ப்பத்தடை அப்பிரதேசங்களில் இடம்பெற்றால் அதுவும் இனப்படுகொலையாகும். யுத்தப் பகுதிகளில் இராணுவத்தினர் பெண்களுக்கு பணம் வழங்கி கருத்தடைகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டனர். பின்னர் வடமாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அவர்களது செயற்பாடுகள் அனைத்தும் முடக்கப்பட்டது. யுத்தத்திற்குப் பின்னர் ஒரு சிவில் நிர்வாகம் வட பகுதியில் ஏற்பட்டதன் காரணமாக தமிழினம் காக்கப்பட்டது எனலாம். வன்னிப்பிராந்தியத்தில் கருக்கலைப்பு தொடர்பாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்கள் முக்கிய கவனம் செலுத்தியிருந்தார். குறிப்பாகச் சொல்லப்போனால் அரசு தமது நிகழ்ச்சிநிரலை இதுவரை மாற்றியமைக்கவில்லை. தற்போது த.தே.கூட்டமைப்பு ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்காததன் காரணத்தினால் த.தே.கூட்டமைப்பு பதிவுசெய்யப்படாமையின் காரணத்தைக்கொண்டும், வடமாகாணசபைக்கும் த.தே.கூட்டமைப்புக்குமிடையில் அரசு முறுகல் நிலையினை ஏற்படுத்திவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்திற்கான வரைபுகள் அரசிடம் கையளிக்கப்பட்டிருக்குமாகவிருந்தால் இவ்வாறான முரண்பாடுகள் ஏற்பட்டிருக்காது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட இலங்கையரசு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும், சம்பந்தனுக்கும் இடையில் முறுகல் நிலையினை ஏற்படுத்துவதற்காக தனித்தனியாக இவ்விருவரைச் சந்திக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் சர்வதேச நாடுகளோ சமஷ்டி அடிப்படையில் ஒரு தீர்வினை வழங்கக்கோருகின்றது. மறுபக்கத்தில் மீண்டும் ஒரு போராட்டத்தினை இலங்கையில் ஏற்படுத்த அமெரிக்கா முயற்சிகளை மேற்கொள்கின்றது. இனக்கலவரங்கள் உருவாகுவதற்கான சமிக்ஞைகளும் தென்படுகின்றன. மைத்திரி-ரணிலின் கூட்டாட்சியினை கவிழ்ப்பதற்கான திட்டங்களும் மறைமுகமாக தீட்டப்படுகின்றன. நேரடியாக தமிழ்நாட்டினது உதவிபோ[illegible] தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொள்ள வாய்ப்பில்லை. வடகிழக்கு தமிழ் மக்களுக்கு பிரித்துக் கொடுக்கப்படுமாகவிருந்தால் சிங்களப் பிரதேசத்தினை விட அபிவிருத்தி மற்றும் கல்வியில் முன்னேற்றத்தை அடைந்துவிடும். வடகிழக்கு பிரதேசமானது அபிவிருத்தியடைந்த ஒரு மாகாணங்களாக மாற்றப்பட்டு உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களது பங்களிப்பினால் வளர்ச்சியடைந்துவிடும் [illegible] சிங்கள அரசு சமஷ்டி முறையிலான தீர்வுகளை வழங்க மறுக்கிறது.

தமிழ் மக்களுடைய ஏகோபித்த கருத்துக்களை உள்வாங்கி அதியுயர் சமஷ்டி முறையிலான தீர்வுகள் எட்டப்படும் என கடந்தவாரம் த.தே.கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித்தலைவருமாகிய இரா.சம்பந்தன் தமது கட்சி மாநாட்டில் தெரிவித்திருக்கின்றார். சமஷ்டி ஆட்சி பற்றியே பேசாத இலங்கையரசு அதியுயர் சமஷ்டி பற்றிச் சிந்திக்குமா? என்ற கேள்வியும் எழுகின்றது. சமஷ்டி பற்றிப் பேசுவதற்காக சம்பந்தன், சுமந்திரன், சித்தார்த்தன் போன்றோர் லண்டன் பயணமாகியிருந்தனர்.

த.தே.கூட்டமைப்பின் அரசியலில் ஒரு மாற்றம் ஏற்படவேண்டும். அதாவது கட்சியில் ஒற்றுமை இல்லாத வரையில் எந்தவொரு பயனும் ஏற்படப்போவதில்லை. ஒற்றுமை என்பது அவசியம். ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ் என்கின்ற தோற்றப்பாடுகள் மறைக்கப்பட்டு த.தே.கூட்டமைப்பு என்கின்ற ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்தால் மட்டுமன்றி அதியுயர் சமஷ்டியைத்தான் இல்லையென்றாலும் சாதாரண சமஷ்டியையாவது பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. கட்சியின் பதிவு விடயத்தில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனே சகுனியாகச் செயற்படுகின்றார் எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது எந்தளவில் உண்மை என்பதற்கப்பால் ஏனைய கட்சியில் இருப்பவர்களுக்கும் தமிழரசுக்கட்சியினால் சலுகைகள் வழங்கப்படுகின்றபோது அவர்கள் வாயைத்திறந்து அதனைப்பெற்றுக் கொள்கின்றார்கள். கட்சிப் பதிவு விடயம் நீண்டகாலமாக இழுபறி நிலையில் இருக்கின்றது. இதிலொரு ஒற்றுமையினைக்காணாவிட்டால் எவ்வாறு சமஷ்டி பற்றிப் பேசி ஒற்றுமையினைக் காணமுடியும். சமஷ்டி என்றால் என்ன? என்பது பற்றிகூட கட்சியில் தெரியாதவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் அவர்களுடைய நிலைப்பாட்டில் இருந்து இதுவரையில் மாறியிருக்கின்றதா? என்றால் இல்லை. குறிப்பாக வடகிழக்குப் பகுதிகளில் தமது புலனாய்வுகளை அரசு வளர்த்துவருகின்றது. அரசினால் உள்வாங்கப்பட்ட பலர் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்த நிலையில் அவர்களின் ஒவ்வொரு அசைவுகளும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களுக்கான நல்லிணக்க முயற்சிகளை மேற்கொள்கின்றபோது அங்கெல்லாம் இராணுவ பொலிஸ், புலனாய்வாளர்கள் தோன்றி அதனைச் சீர்குலைக்கும் நோக்கில் செயற்படுகின்றனர். [illegible] போல சிங்கள பொதுநிகழ்வுகள். [illegible] நிகழ்வுகளில் தமிழ் புலனாய்வாளர்கள் சென்று தமது செயற்பாடுகளை மேற்கொள்கின்றார்களா? இல்லை. ஆகவே தமிழ் மக்களுடைய செயற்பாடுகளை முடக்கும் நோக்கத்தோடு [illegible] மைத்திரி-ரணிலின் கூட்டாட்சி[illegible] செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. த.தே. கூட்டமைப்பினது பேச்சினைக்கேட்டு தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கான ஆர்ப்பாட்டங்களை நிறுத்துவதன் ஊடாக மீண்டும் தமிழினம் பாதாளத்தினை நோக்கியே பயணிக்கும். சர்வதேச விசாரணைக்கு அனுமதியில்லை.

12ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிப்பொறியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இவர்கள்? யாருடைய வழிகாட்டலில் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள் – சுகுனா






இலங்கை அரசியலில் குறிப்பாக தமிழ் அரசியலில் அண்மைக்காலமாக மிகவும் பரபரப்பாக பேசப்படும் சிலர் பற்றி ஆழமாக ஆராயவேண்டியிருக்கிறது. அதற்கு முன்னதாக தமிழ்மக்களின் அரசியல் தலைவிதியை மாற்றிப்போட்ட விடுதலைப்புலிகள் மீதான இறுதிக்கட்ட யுத்தம் பற்றியும் அதன் பின்னரான புலிகளின் தலைமை குறித்தும் பார்க்க வேண்டியிருக்கின்றது. இரண்டாயிரத்து ஒன்பது. மே பதினெட்டாம் திகதி யுத்தம் நிறைவுக்கு வந்ததாக அரசாங்கம் அறிவித்தபோது. கே.பி என்று அறியப்பட்ட குமரன் பத்மநாதனோ. புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று அறிவித்தார். ஆனால் அவ்வாறு அறிவித்த அவர் மறுநாளே அவர் இறந்துவிட்டதாகவும். புலிகள் இயக்கத்திற்கு தானே தலைமை ஏற்கப்போவதாகவும் அறிவித்தார்.

**யார் இந்த கேபி?**

கேபி என்று நன்கு அறியப்பட்ட குமரன் பத்மநாதன் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத் தேவையான அனைத்து ஆயுதங்களையும் வெளிநாடுகளில் இருந்துகொண்டு மிகத் தந்திரமாக வன்னிக்கு அனுப்பிவைத்துக் கொண்டிருந்த முக்கிய போராளி. ஒருகாலத்தில் பத்துக்கும் மேற்பட்ட கடவுச்சீட்டுக்களுடன் பல்வேறு பெயர்களில் உலகம் முழுவதும் சுற்றி வந்துகொண்டிருந்த கேபியை பிடிக்க சிறிலங்கா மாத்திரமல்ல, இந்தியாவும் தீவிரமாக முயன்று கொண்டிருந்தது. அனைவருக்கும் தண்ணீர் காட்டிக்கொண்டு உலகம் முழுவதும் சுற்றிவந்த கேபி. பிரபாகரனின் மிக நம்பிக்கைக்கு உரியவராகவும். மிக நெருக்கமான நண்பராகவும் இருந்தார்.

புலிகளின் அனைத்துவிவகாரங்களையும் இலங்கைக்கு வெளியே கையாண்டவர் இவரே. புலிகளின் பல ஆயிரம் கோடி சொத்துக்களையும் வர்த்தக நடவடிக்கைகளையும் இந்த கேபியே நிர்வகித்தும் வந்தார். ஆனால் புலிகளின் சர்வதேச அலுவலகங்களை நிர்வகிக்க வன்னியில் தலைமையால் நியமிக்கப்பட்ட கஸ்ரோ என்ற அவர். தனது நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக தனது உறவினரான நெடியவனை நோர்வேக்கு அனுப்பி அவரிடம் பொறுப்புக்களை ஒப்படைக்க. கேபியின் முக்கியத்துவம் திட்டமிட்டபடி குறைக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் கேபி இயக்கத்தின் அனைத்து நடவடிக்கையிலிருந்தும் ஓரம் கட்டப்பட்டார். இரண்டாயிரமாம் ஆண்டிலிருந்து புலிகளின் அனைத்து வர்த்தக நடவடிக்கைளும் கஸ்ரோவினதும் நெடியவனினதும் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

ஆனால் யுத்தம் தீவிரமடைந்தபோது. புலிகளின் சொத்துக்களை தனிப்பட்ட வகையில் உரிமையாளர்களாக இருந்தவர்களிடமிருந்து பாதுகாக்க கேபியே சரியான ஆள் என்பதைப் புரிந்துகொண்ட பிரபாகரன். கேபியிடம் மீண்டும் பொறுப்புக்களை ஒப்படைத்தார். இறுதிக்கட்ட யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது இயக்கத்தையும் தலைமையையும் காப்பாற்றுவதற்காக கொழும்புடன் நேரடித்தொடர்பை ஏற்படுத்திய கேபி. கோத்தபாயவுடனும் பசில் ராஜபக்சவுடனும் தொடர்பை ஏற்படுத்தினார். அவருடைய நோக்கம் எல்லாம் தலைமையைக் காப்பாற்றுவதாகத்தான் இருந்தது.

ஆனால், அது முடியாமல்போன பின்னர். முள்ளிவாய்க்கால் அவலம் நடந்து முடிந்த பின்னர். இயக்கத்தின் தலைமைப்பதவியை கேபி தானே ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. ஆனால் தான் முன்னர் தலைமையைக் காப்பாற்றுவதற்காக தொடர்புகொண்ட தொலைபேசி இலக்கத்தை வைத்து தன்னை சிறிலங்கா உளவுத்துறை பின்தொடர்வதை கேபி எப்படி கவனிக்காமல் இருந்தார் என்பது இன்றுவரை தெரியவரவில்லை.

வன்னியில் புலிகள் முற்றாக மௌனமாக்கப்பட்ட பின்னர். சிறிலங்காவின் முழுக்கவனமும் கேபி மீது திரும்பியது. புலிகள் இயக்கத்தை வேரோடு பிடுங்கவேண்டுமெனில் கேபியையும் கைதுசெய்யவேண்டும் என்ற நிலை. அந்த முயற்சியிலும் சிறிலங்கா வெற்றி கொண்டது என்றே சொல்லலாம். கேபி மட்டும் கைதுசெய்யப்படாமல் இருந்திருந்தால், இன்றும் புலிகள் இயக்கம் கேபியின் தலைமையில் இன்னமும் உத்வேகத்துடன் வெளிநாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கும்.

கேபியை சிறிலங்கா கைது செய்யவில்லை என்றும் அவரே தானாக சரணடைந்தார் என்றும் இப்போதும் வாதிடும் சிலர் இருக்கிறார்கள். புலிகளின் பலகோடி சொத்துக்களை நிர்வகித்துக்கொண்டு. உலகத் தலைவராக வலம்வரக்கூடிய நிலையில் இருந்த கேபி தானாக சரணடைந்து ஒரு சிறைக் கைதிபோல வாழவேண்டிய தேவை அவருக்கு ஏன் ஏற்படவேண்டும்? இன்றும் கூட செஞ்சோலை சிறுவர் இல்லத்தை பராமரிக்கின்ற கேபி அந்த இல்லத்திலிருந்து சிறுநீர்கழிப்பதற்கு செல்கின்றபோதும் அவரைப் பின்தொடர்ந்து பாதுகாவலர்கள் அவரை கண்காணிக்க செல்கின்ற அவலம் அவர் விரும்பி ஏற்றுக்கொண்டதாக இருக்க முடியாது.

கேபி கைதுசெய்யப்பட்டு சிறிலங்கா கொண்டுவரப்பட, புலிகளின் அனைத்துச் சொத்துக்களையும் தொடர்ந்து நிர்வகிக்கின்ற பொறுப்பு நெடியவனைத் தொடர்ந்தது. நெடியவனின் கட்டுப்பாட்டின்கீழ். புலிகளின் அனைத்து செயலகங்களும் இன்றுவரை இயங்கிவருகின்றன. அவை அனைத்துல செயலகம் என்ற பெயரிலும் சில நாடுகளில் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு என்ற பெயரிலும் இவை இயங்கி வருகின்றன.

**யார் இந்த விநாயகம்?**

முள்ளிவாய்க்காலில் புலிகள் முழுமையாக மௌனிக்கவைக்கப்பட்ட பின்னர். உயிரோடு தப்பிய போராளிகள் பலர் வெளிநாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கினர். பலர் செட்டிகுளம் முகாமில் இருந்து பணம்கொடுத்து வெளியேறியதாகவும் அப்போது கூறப்பட்டதுண்டு. இவ்வாறு புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்த போராளிகள் அப்போதுதான் ஒரு உண்மையை உணர்ந்தார்கள். தாங்கள் போராட்டம் என்ற பெயரில் வன்னிக் காடுகளுக்குள் காலில் செருப்புக்கூட இல்லாமல் போராடிக்கொண்டிருக்க, அந்தப் போராட்டத்தை பயன்படுத்திக்கொண்டு. புலம்பெயர் மண்ணில் ஒரு கூட்டம் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

அவ்வாறு போருக்குப் பின்னர் புலம்பெயர்ந்த போராளிகள் அங்கு இயக்கத்தை [illegible] முயல்வதாகவே கூறிக்கொண்டார்கள்.

அவ்வாறு புலம்பெயர்ந்த போராளிகளில், முக்கியமானவர் விநாயகம் ஏன்ற சேகரப்பிள்ளைவிநாயகமூர்த்தி.புலிகளின் புலனாய்வுத்துறையில் பொறுப்பாளராக இருந்த பொட்டு அம்மானின் உதவியாளராக இருந்த இந்த விநாயகம், யுத்தம் நடைபெற்ற காலத்தில் இந்தியாவில் இருந்ததாகக் கூறப்பட்டது. பின்னர் பிரான்ஸ் நாட்டிற்கு புலம்பெயர்ந்த அவர் புதிதாக புலம்பெயர்ந்த போராளிகளை ஒன்றிணைத்து அமைப்புக்கு புத்துயிர் ஊட்டப்பேவதாகக் கூறினார். அமைப்பின் சொத்துக்களை தனது பொறுப்பில் எடுக்க அவர் முயன்றபோது நெடியவன் தரப்பிற்கும் அவருக்குமிடையே கருத்து மோதல்கள் ஏற்பட்டன. பல இடங்களில் துப்பாக்கி மோதல்கள் கூட ஏற்பட்டன.

புலம்பெயர் நாடுகளில் மாவீரர் தின வைபவங்கள் இரண்டு தரப்பாலும் தனித்தனியாக நடாத்தப்பட்டன. விநாயகம் தனது அணிக்கு தலைமைச் செயலக அணி என்று பெயரிட, நெடியவன் தரப்பினர் அனைத்துலக செயலகம் என்ற பெயரிலும், விநாயகம் தரப்பினர் தலைமைச் செயலகம் என்ற பெயரிலும் இயங்கத் தொடங்கினர்.

புலம்பெயர் நாடுகளில் ஏற்கனவே இயங்கிவந்த அனைத்துலக செயலக செயற்பாடுகள் நெடியவன் தலைமையில் எதுவித இடையூறும் இன்றி தொடர்ந்துகொண்டிருக்க, மிகச்சொற்ப போராளிகளைக்கொண்டு விநாயகம் தனது தலைமைச்செயலக அணியை நடாத்திவருகிறார். இந்த இரண்டு அணியினருக்குமான மோதல்களை சாத்திரி என்ற முன்னாள் போராளி தனது கட்டுரை ஒன்றில் விலாவாரியாக விபரித்திருந்தார். இந்த விநாயகம் யார் என்பது பற்றிய சந்தேகங்களை அவர தனது கட்டுரையில் எழுப்பியிருந்தார்.

**யார் இந்த அனந்தி எழிலன்?**

புலிகளின் திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்தவர் எழிலன் என்ற சசிதரன். யுத்தம் முடிந்த பின்னர் எழிலன் இலங்கை இராணுவத்துடன் பணியாற்றுவதாக பரவலாக கதைப்பதுண்டு. விமான நிலையத்தில் இலங்கைப் படையினருடன் இருந்துகொண்டு தப்பிச் செல்லும் புலிகளை காட்டிக்கொடுக்கும் பணியை எழிலன் செய்து வருவதாகவும் அப்போது கூறப்பட்டது. அதே எழிலனின் மனைவியான அனந்தி, கடந்த மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட வேட்பாளராக அறிவிக்கப்படும் வரை அவர் யாராலும் அறியப்படாதவராகவே இருந்தார்.

இறுதி யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது. புலிகள் மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக புகார்கள் உண்டு. பலவந்தமாக ஆட்களை கடைசிக்கட்டத்திலும் இணைத்தார்கள். அவ்வாறு பலவந்தமாக இணைக்கப்பட்டவர்கள்தான் பின்னர் சரணடைந்த பன்னிரண்டாயிரம் போராளிகளில் கணிசமானவர்கள். அவ்வாறு பலவந்தமாக ஆட்களைச் சேர்த்தவர்களில் எழிலன் முக்கியமானவர் என்று கூறப்படுகின்றது. அத்தகைய ஒரு போராளியின் மனைவியான அனந்தி திடீரென்று தேர்தல் களத்தில் இறக்கப்பட்டார்.

அந்தச் சம்பவம் நடக்காமல் இருந்திருந்தால் இந்த அனந்தி யார் என்பதே மக்களுக்கு. அதுதான் [illegible] தெரியாமலே போயிருக்கும். தேர்தல் நெருங்கிவந்த நேரத்தில் அனந்தியின் வீட்டை முற்றுகையிட்ட இராணுவத்தினர். அனந்தியை பிரபல்யமாக்கினர். அவர் ஊடகங்களில் தலைப்புச் செய்தியானார். கிராமங்கள் எங்கும் அனந்தியின் பெயர் உச்சரிக்கப்பட அனந்தி எண்பதாயிரம் வாக்குகளை அள்ளிக்குவித்தார். அனந்திக்கு இத்தனை பெரிய வெற்றியைத் தேடிக்கொடுத்தவர்கள் வேறு யாருமல்ல. இராணுவத்தினரேதான். தாம் இவ்வாறு அனந்தி மீது தாக்குதல் நடாத்தினால் அது அவருக்கு சாதகமாகவே போகும் என்பது இராணுவத்தினருக்குத் தெரியாததல்ல. எந்தக் குழந்தையாலும் புரிந்துகொள்ளக்கூடிய அந்த விடயத்தை இராணுவத்தினர் புரிந்துகொள்ளவில்லை என்று யாராவது வாதிட்டால் அதற்கு நாம் ஒன்றும் செய்யமுடியாது.

அனந்தி வெற்றி பெற்று மாகாண சபைக்கு உறுப்பினரானதும் தனக்கு அமைச்சர் பதவி தரப்படவேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அவரது நடவடிக்கைகளில் சந்தேகம்கொண்ட தமிழரசுக்கட்சித் தலைமை அவரை தூர வைக்கவே விரும்பியது. ஆனால் அனந்தி. கட்சியின் எந்தக்கட்டுப்பாட்டையும் கருத்தில் கொள்ளவில்லை. தன்னிச்சையாக ஜெனீவா போனார். தன்னிச்சையாக அறிக்கைகளை விடுத்தார். அவரின் ஒவ்வொரு நகர்வுகளையும் புலம்பெயர் மண்ணில் இருந்த சிலர் ஆதரவளித்தனர். அவ்வாறு ஆதரவளித்தவர்கள் வேறு யாருமல்ல. தலைமைச் செயலகம் என்ற பெயரில் இயங்கும் விநாயகம் குழுவினரே என்பது பின்னரே தெரியவந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தலைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று பகிரங்கமாகவே அனந்தி கோரிக்கையை முன்வைத்தார். தான் சார்ந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிக்க முடிவெடுத்த பின்னர், அதற்கு எதிராக முடிவெடுத்ததுடன். தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு பரப்புரை செய்தார். தேர்தல் பகிஷ்கரிப்பால் மகிந்த ராஜபக்ச தான் பயன்பெறுவார் என்பதை சின்னக்குழந்தை கூட அறிந்திருந்தபோது அனந்தி அறியாமல் இருந்திருக்க முடியாது. அவரது விருப்பம் அதுவாக இருந்ததோ தெரியவில்லை.

**யார் இந்த சிவாஜிலிங்கம்?**

அனந்தி எழிலனின் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் அவருக்கு துணையாக இருப்பவர் இந்த சிவாஜிலிங்கம். தன்னை மிக தீவிர தேசியப் பற்றாளராகவும். புலி ஆதரவாளராகவும் காட்டிக்கொள்ள விரும்புபவர். யுத்தம் முடிவடைந்த பின்னர் சுகவீனமடைந்த பிரபாகரனின் பெற்றோரின் நலன்களைக் கவனித்த சிவாஜிலிங்கம். அதற்காக அரசாங்கத்துடன், குறிப்பாக அப்போதைய பாதுகாப்பு செயலாளருடன் நெருக்கமாகவே செயற்படவேண்டியிருந்தது. எந்த நேரத்திலும் பாதுகாப்பு செயலாளருடன் தொடர்புகொள்ளக்கூடிய அளவிற்கு அவரின் நட்பு வட்டாரத்திலிருந்தவர் இந்த சிவாஜிலிங்கம். புலிகளுக்கு ஆதரவாக அல்லது தமிழ்த்தேசியத்திற்கு ஆதரவாக எந்தக் கருத்தையும் துணிந்து சொல்லக்கூடிய துணிச்சலுள்ளவர். இப்படித்தான் தமிழ்மக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தத் துணிச்சல அவருக்கு எப்படி வந்தது என்று யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. யுத்தம் முடிவடைந்த பின்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தலில். மகிந்த ராஜபக்சவை எதிர்த்து போட்டியிட்ட சரத்பொன்சேகாவுக்கு ஆதரவளிக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்தது.

அப்போது அதற்கு எதிராக களத்தில் குதித்த சிவாஜிலிங்கம் ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்கினார். அதனால் பயனடைந்தது வேறுயாருமல்ல. மகிந்த ராஜபக்ச மட்டும்தான்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபச்சாரத் தொழிலை நடாத்தும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்



தமிழ்க்கட்சிகளைக்கொண்டு விபச்சாரத் தொழிலை நடாத்தும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்கின்ற நோக்கத்தோடு, வடமாகாண சபைக்கான தேர்தலில் வடகிழக்கில் தமிழ் மக்களைப் பிரதிபலிக்கும் கட்சியான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு சார்பில் முதல்வர் வேட்பாளராக சி.வி. விக்னேஸ்வரன் அவர்களை நியமித்து, தமிழ் மக்களின் முழு ஆதரவோடு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அதில் அமோக வெற்றியும் பெற்றது. த.தே.கூட்டமைப்பினால் முதன்முதலாக ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசரான விக்னேஸ்வரன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் படிப்படியாக தனது அரசியல் நகர்வினை நகர்த்திவந்த முதலமைச்சர் தமிழ் மக்களின் மீது அக்கறையுடன் செயற்படுவதைப்போன்று தமிழ் மக்களைக் காட்டிக்கொடுக்கும் செயற்பாடுகளிலும், பிளவுபடுத்தும் நடவடிக்கைகளிலும் உள்ளே மிருகம் வெளியே கடவுள் என்ற ரீதியில் தனது அரசியல் முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றார்.

த.தே.கூட்டமைப்பை ஏற்றுக். கொள்ளாதவர்களையும். தேர்தலில் தோல்வியுற்றவர்களையும் தனது பக்கம் வைத்துக்கொண்டுள்ளார் முதலமைச்சர். தனது அரசியல் பலத்தினை வளர்த்துக்கொள்வதற்காக அவர் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் அருவருக்கத்தக்ககது. குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவுடன் கீரியும் பாம்புமாகவிருந்த முதலமைச்சர், யாழில் இடம்பெற்ற தேசிய பொங்கல் தின வைபவத்தின்போது மைத்திரிபாலவும், ரணிலும் கலந்துகொள்வதாகக் கூறப்பட்டது. எனினும் ரணில் அவர்களே கலந்துகொண்டார். இங்கேதான் முதலமைச்சரின் இயலாமை வெளிப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து புது மாப்பிள்ளையை வரவேற்கும் ஒரு சம்பவம் போல அந்த நரியை இந்த நரி தந்திரோபாயமாக இவ்வைபவம் நடந்தேறியது. விக்னேஸ்வரனது இந்த செயற்பாடுகள் குறித்து வலம்புரி பத்திரிகையினைத் தவிர, வேறெந்த பத்திரிகைகளுமே இதனைப்போற்றி எழுதவில்லை மாறாக தமிழினத்தின் துரோகியாகவே பார்த்தனர். வடமாகாணத்தின் அமைச்சர்கள் தமது பதவிகள் பறிக்கப்பட்டுவிடுமோ என்கின்ற காரணத்தினால் முதலமைச்சருடன் கைகோர்த்துள்ளார்கள். வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடமாகாண சபையின் உறுப்பினர்களான அர்னோல்ட், சுகிர்தரன், சயந்தன் போன்றவர்கள் உட்பட 26 மாகாணசபை உறுப்பினர்கள் முதலமைச்சருக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகின்றார்கள். இவரது செயற்பாடுகள் சரியானது என்பதே அவர்களது கருத்து. முதலமைச்சரை பலவீனப்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளை இரகசியமாக மேற்கொள்கின்றது அரசு. ஒன்று மாகாண சபையினைக் கலைப்பதன் ஊடாகவும், முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை வடமாகாணசபையில் ஏற்படுத்தும் நோக்கில் அங்கு இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கிடையே இவ்விடயம் தொடர்பாக முறுகல் நிலையினைத் தோற்றுவித்து, முதலமைச்சரை ஓரங்கட்டுதல், ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், வடமாகாணசபைக்கும் இடையில் பகைமைகளை உருவாக்கும் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் அவையனைத்திற்கும் முதல்வர் சாவுமணி அடித்திருக்கின்றார். ஏற்கனவே இவர் பாலியல் சம்பந்தமான பிரச்சினைகளுடன் தொடர்புடைய பிரேமானந்தா சுவாமியாரின் மாணவனாகவிருந்ததும், த.தே. கூட்டமைப்பிற்கு பாடம் கற்பிக்க முனைந்திருப்பதும், அவரை அரசியலுக்குள் த.தே.கூட்டமைப்பு அழைத்து வந்ததும் ஒரு வேடிக்கையான செயலே.

பாலியல் சம்பவம் தொடர்பாக இரட்டைக்கொலை புரிந்தவர்தான் இந்த சுவாமியார். இன்று தமிழ்க்கட்சிகள் மத்தியில் பாலியல் தொழிலை உருவாக்கியுள்ளார் முதலமைச்சர். இவர் நீதியரசராகவிருந்த காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பினைச்சேர்ந்தஉறுப்பினர்களுக்கு 15வருட சிறைத்தண்டனை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. மேலோட்டத்தில் நடைபெறுகின்ற அரசியலை வைத்து நான்போகும் பாதைதான் சிறந்தது. காக்கைவன்னியன்பரம்பரையில் வந்த மற்றொரு காக்கை வன்னியன் தான் இந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எதிர்க்கட்சிப் பதவியைப் பெறுவதற்கும், தேர்தல் காலங்களில் த.தே.கூட்டமைப்பிற்கும், தமிழினத்திற்கும் செய்த பாரிய துரோகச்செயலாகவே இவரது செயற்பாடுகள் அமைந்துள்ளது. தான் கடந்துவந்த பாதையினையும், யாரால் இந்தப்பதவியும் அந்தஸ்தும் கிடைத்தது என்பதை சிந்திப்பவராகவிருந்தால் சிறப்பாகவிருக்கும். இவரது பின்புலத்தில் உள்ளவர்களும் அரசியலில் விபச்சாரம் செய்தவர்களே. கருணாவும், டக்ளஸ் தேவானந்தாவும் துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்ட நிலையில் இவரது செயற்பாடுகளும் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஆவேசத்தினையே தோற்றுவித்துள்ளது.

அது மாத்திரமல்லாது இவர் வரலாற்றைத் தெரிந்துதான் இவ்வாறு செயற்படுகின்றாரா? தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்களை நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கும் போது தமிழ்த்தேசியக்கூட்டமைபபிடம் தமிழ் மக்களுக்கான வரைபு இல்லை. உண்மையில் இவ்வாறு இல்லையெனில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமைகள் தமது பதவியிலிருந்து விலகிக்கொள்ளவேண்டும். புதிதாக உருவாக்கம் பெற்றுள்ள தமிழர் பேரவை என்ற அமைப்பில் இருந்து முதலமைச்சர் அவர்கள் அதனது கொள்கைகளில் இருந்து விலகும் எண்ணம் தனக்கு இல்லை என்பதை தெளிவாகக் கூறியிருக்கின்றார். தனக்கு முட்டுக்கட்டையாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அமைந்துவிடுவாரோ? என்ற காரணத்தினால் தேசியப்பொங்கல் தினத்தில் அவரை இருகரம் கூப்பி வரவேற்று, தமது உறவினை மீண்டும் வலுப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

முதலமைச்சரின் பயணத்திற்கு முட்டுக்கடையாக இருந்தவர் பிரதமர் ரணில் அவர்களே. தற்போது இவர் அவருடன்' கள்ளத்தொடர்பினைப் பேணவேண்டிய அவசியமில்லை. யாழில் இடம்பெற்ற வைபவத்தின் மூலம் நேரடியாகவே அனைத்து விடயங்களையும் பேசிக்கொள்ளும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனோடு தனது மக்கள் பேரவையினையும் வளர்த்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பும் உள்ளது. த.தே.கூட்டமைப்பு அரசிற்கு எதிராக செயற்படுமாகவிருந்தால் முதலமைச்சர் விக்னேஸ்வரனை வைத்தே தனது காய்நகர்த்தல்களை அரசாங்கம் செயற்படுத்திக்கொள்ளும். இலங்கையை ஆண்ட 11 ஆட்சியாளர்களும் தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் செயற்படவில்லை. தமிழினத்திற்கு விடுதலையினைப் பெற்றுத்தருவோம் என்ற ரீதியில் அவர்களது செயற்பாடுகள் ஆரம்பத்தில் அமைந்திருந்தது. தொடர்ந்தும் தமிழினம் ஏமாற்றப்படுவதற்குச் சகுனியாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் செயற்படுவது என்பது தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு சாபக்கேடு எனலாம்.

விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் 2002-2004 ஆண்டுகளில் இடைக்கால நிர்வாகம் கொண்டுவரப்பட்டது. இதன்போது விடுதலைப்புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் மேற்கொண்டிருந்தனர். இக்கால கட்டத்தில் படிப்படியாக விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையிலான முறுகல் நிலை உருவாக ஆரம்பித்தது. சமாதான காலத்தில் மாத்திரம் இராணுவப்புலனாய்வாளர்கள் 29பேர் அளவில் விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதில் முக்கியமாக வன்னிப் பிராந்தியத்தைச் சேர்ந்த முத்தலீப். கொழும்பினைச் சேர்ந்த புளொட் மோகன் ஆகிய இருவரது கொலையும் அரசிற்குப் பாரிய இழப்பாகவே காணப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளினால் விடுதலைப்புலிகள் மீண்டும் தமக்கு தலையிடி கொடுக்கிறார்கள் என எண்ணிய அரசாங்கம் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தை மாவிலாறில் ஆரம்பித்தது. இதற்கிடையில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், விடுதலைப்புலிகளின் புலனாய்வுப்பொறுப்பாளர் நீலன், ஜோசப் பரராசசிங்கம், ரவிராஜ் இதுபோன்ற பல விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதன் காரணமாக விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தரப்பினருக்கும் இடையிலான முறுகல் நிலை உச்சமடைந்தது.

சமாதான காலகட்டத்தில் 57 சர்வதேச நாடுகளும், 22 சர்வதேச அமைப்புக்களும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஆதரவு வழங்கின. இதில் உலக வங்கியும், அமெரிக்காவும் தனது பெருவாரியான ஆதரவினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. சமாதானத்தை வலியுறுத்தி தீர்வுத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டுமாகவிருந்தால் அன்றே அதனை மேற்கொண்டிருந்திருக்கலாம். இறுதியில் சர்வதேச நாடுகளது தலையீடுகளும் தோல்வியடைந்த நிலையில் அவர்களது வஞ்சகத்தனத்தினால் எமது போராட்டம் பின்னடைவைக் காணவேண்டிய சூழ்நிலை உருவாகியது. ஜனநாயக நாடு எனக்கூறிக்கொள்ளும் அதேநேரம் கடந்த ஆட்சியாளர்களை ஒப்பிடும் வகையில் மைத்திரிபால சிறிசேனவினது ஆட்சி ஓரளவு சிறந்தது என்று கூறலாம். தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தினை முன்னெடுத்து அதனைச் சீர்செய்யும் நோக்கில் தென்னிலங்கை அரசியல்வாதிகளில் ஒருசிலர் செயற்பட எத்தனிக்கும்போது அதனை சீர்குலைக்கும் நோக்கில் தமிழ் மக்களுக்கிடையில் இருக்கக்கூடிய கட்சிகள் தமக்கிடையில் பிரிவினையைத் தோற்றுவிப்பது ஏற்றுக் கொள்ளப்படமுடியாததொன்று. தமிழ் மக்களுடைய உரிமைகள் இதுவரையில் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

ஆகவே எமது ஒற்றுமை என்பது அத்தியாவசியமானது. ஆரம்பகாலப் போராட்டத்தை எடுத்துக்கொண்டால் தமிழினத்திற்காக ஆயுதமேந்திய இயக்கக் கட்சிகள் பதவிக்காக ஆசைப்பட்டு போராடவில்லை. மாறாக தமிழ் மக்களது விடுதலையினை வேண்டியே. இன ஒடுக்குமுறைக்கு எதிராகவே அவர்களது போராட்டம் இடம்பெற்றது. இதில் இந்தியாவின் தலையீடும் இருந்து வந்தது. விடுதலைப்புலிகளது யுத்த தந்திரோபாயங்கள், அவர்களது வளர்ச்சியைக்கண்ட சர்வதேச நாடுகள் 'வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தது' என்பதற்கமைய, இவ்வாயுதக்குழுக்கள் தமக்குதுரோகமிழைத்துவிட்டதுஎனக்கூறி இவ்வாயுதக்குழுக்களிடையே பிரிவினைகளை ஏற்படுத்தியது. இதன் காரணமாக ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்கள் விடுதலைப்புலிகளை எதிர்த்துப்போராடும் இயக்கங்களாக மாறின. இதனைச்சாதுரியமாகப் பயன்படுத்திக்கொண்ட இந்தியரசு தமிழ் மக்களிடையேஒற்றுமையில்லை, இவர்கள் பயங்கரவாதிகள் என உலகளவில் சித்தரித்து பாரியதொரு நாடகத்தினையே அரங்கேற்றியது.

இந்திய இராணுவம் 1987களில் அமைதிப்படை என்கின்ற போர்வையில் இலங்கைக்குள் காலடி எடுத்துவைத்ததன் விளைவு அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையுடன் பகைமையில் நிறைவடைந்தது. இதில் ஒருவிடயம் குறிப்பிடவேண்டும், என்னவெனில் ராஜீவ்காந்தியை இலங்கைக்கு வரவேற்று இடம்பெற்ற இராணுவ மரியாதை அணிவரிசையின்போது அவரை ஆயுதத்தின் பின்பாகத்தினால் பிடரியில் தாக்கினார்கள். இவ்வாறு தாக்கப்பட்ட சம்பவம் என்பது அவரைக் கொலை செய்யும் நோக்கிலேயே ஆகும். காரணம் என்னவெனில் ஆயுதங்களிலே ரவைகள் முடிவடைந்த பின்னர் கையில் இருக்கக்கூடிய ஆயுதத்தினால் அடித்துக்கொள்ளும் முறை பயிற்சிகளில் கற்பிக்கப்படுகின்றது. அந்த முறைதான் துப்பாக்கியின் பின்பாகத்தினால் தாக்குவதாகும். இந்த சிப்பாய் தாக்கியதைக் கருத்திற்கொள்ளாத இந்திய அரசாங்கம் மீண்டும் இலங்கையரசுடன் நட்புறவினைப் பேணியது. துப்பாக்கியால் தாக்கியவர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு மனநோயாளி என்ற பெயருடன் பின்னர் அவர் கௌரவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். இதில் ஒருவிடயம் இந்தியாவோ அல்லது ஏனைய சர்வதேச நாடுகளோ தமிழ் மக்களுக்கான சரியான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கப்போவதில்லை. மாறாக தமது சுயநல, ஏகாதிபத்திய அரசியலை அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவினது ஆட்சி கவிழ்க்கப்படுவதற்கும் இந்த பிராந்திய வல்லரசுகளே காரணம். தமிழ் மக்களது இனப்பிரச்சினை என்றோ தீர்த்துவைக்கப்படவேண்டியது.

சுழியோடி

11ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்தியிருந்தால் தமிழீழம் கிடைத்திருக்கும் - சுதந்திரப்போராட்டம் பற்றிய பார்வை.

வெள்ளையர் ஆட்சியில் இருந்து இந்தியா 1947 ஒகஸ்ட் 15ஆம் திகதி விடுதலை அடைந்தது. அதற்கு 5 1/2 மாதம் கழித்து. 1948 பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை சுதந்திரம் பெற்றது.

### சுதந்திரப் போராட்டம்

இரண்டு நாடுகளும் சுதந்திரம் அடைந்ததில் பெரிய வித்தியாசம் உண்டு. இந்தியாவிற்கு சுதந்திரம் பெறுவதற்காக. மகாத்மா காந்தி 30 ஆண்டுகளுக்கு மேலாக அஹிம்சை வழியில் உண்ணாவிரதம், உப்பு சத்தியாகிரகம் போன்ற போராட்டங்களை நடத்தினார். வேறு வழி இல்லாமல், சுதந்திரம் கொடுக்க இங்கிலாந்து முடிவு செய்தது. இலங்கையில் அத்தகைய போராட்டம் எதுவும் நடக்கவில்லை. வெள்ளையர்கள் தாங்களாகவே முன்வந்து சுதந்திரம் கொடுத்தனர். இன்னொரு முக்கிய வித்தியாசம். "முஸ்லிம்களுக்கு தனி நாடு வேண்டும்" என்று ஜின்னா போராடி வெற்றியும் பெற்றார். அதனால் இந்தியா துண்டாடப்பட்டு. "பாக்கிஸ்தான்" அமைக்கப்பட்டது. ஆனால். "தமிழீழம்" வேண்டும் என்று போராடுவதற்கு அந்த நேரத்தில் இலங்கையில் யாரும் இல்லை. அதன் காரணமாக, முழு இலங்கையையும் சிங்களவர்களின் கையில் வெள்ளையர்கள் ஒப்படைத்துவிட்டனர். அப்போது தமிழர் தலைவர்கள் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தியிருந்தால். "தமிழ் ஈழம்" கிடைத்திருக்கும்.

### சிங்கக்கொடி

1948 பெப்ரவரி 4ஆம் திகதி. இலங்கையில் பறந்து கொண்டிருந்த இங்கிலாந்து நாட்டுக்கொடியான "யூனியன் ஜாக்" இறக்கப்பட்டது. இலங்கையின் தேசியக் கொடி (சிங்கக்கொடி) ஏற்றப்பட்டது. இக்கொடியை வடிவமைக்கும்போது. "இலங்கை. சிங்களர் தேசம் என்று குறிக்கும் விதத்தில் சிங்கத்தை இடம் பெறச் செய்திருக்கிறீர்கள். இலங்கையின் மற்றொரு தேசிய இனமான தமிழர்களைக் குறிக்கும் வகையில், கொடியில் மாறுதல் செய்யவேண்டும்" என்று தமிழர்களால் வற்புறுத்தப்பட்டது. இக்கோரிக்கை ஏற்கப்படவில்லை.

### தமிழர்களின் உரிமை பறிப்பு

சுதந்திரத்திற்கு முன்னதாக நடந்த தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராக இருந்த டி.எஸ்.சேனநாயக, தொடர்ந்து பிரதமராக நீடித்தார். இலங்கை சுதந்திரம் அடைந்ததால், தமிழர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வெள்ளையர் ஆட்சியின்போது ஓரளவுக்கு இருந்த உரிமைகளும் பறிபோயின. தேயிலைத்தோட்டங்களிலும், ரப்பர் தோட்டங்களிலும் ஓயாது உழைத்த மலையகத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. 10 லட்சம் மலையகத் தமிழர்கள் வாக்குரிமை இழந்து. "நாடற்றவர்கள்" என்று அறிவிக்கப்பட்டனர். அதாவது 1931, 1936, 1941, 1947 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் வாக்களித்த 10 லட்சம் தமிழர்கள், அந்த உரிமையை இழந்தனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்து ஒரு ஆண்டு ஆவதற்குள் இந்த அநியாயம் நடந்தது. இந்தச்சட்டம் நடைமுறைக்கு வந்ததால். இலங்கையில் தமிழர்களால் குழப்பம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும். இந்திய அரசாங்கத்தின் எதிர்ப்போ. இங்கிலாந்து அரசின் எதிர்ப்போ வந்தால் அதை சமாளிக்கவும் பிரதமர் சேனநாயக ஒரு ராஜதந்திர யுக்தியைக் கையாண்டார். அப்போது "அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்" தலைவராக இருந்த ஜி.ஜி. பொன்னம்பலத்தை அரசாங்கத்துக்கு ஆதரவாக இழுக்கத் தீர்மானித்தார். பொன்னம்பலத்தை சந்தித்துப்பேச தன் நம்பிக்கைக்கு பாத்திரமான ஆலிவர் குணதிலகாவை தூது அனுப்பினார். அவர். பொன்னம்பலத்தை சந்தித்தார். "எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு என்ன சாதிக்கப்போகிறீர்கள்? அரசாங்கத்தில் இடம் பெற்று, தமிழ் மக்களுக்கு நன்மை செய்யலாமே!" என்று ஆசை காட்டினார். இதுபற்றி. கட்சியின் செயற்குழுவில் கலந்துபேசி. அதன்பின் தன் முடிவைத் தெரிவிப்பதாக பொன்னம்பலம் கூறினார்.

அதன்படி செயற்குழு கூடியது. மந்திரிசபையில் சேரலாமா. வேண்டாமா என்று காரசாரமாக விவாதம் நடந்தது. "மந்திரிசபையில் சேருவது நல்லது" என்று பாராளுமன்ற தமிழ் உறுப்பினர் குமாரசாமி கூறினார். கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான நாகநாதன் அதை கடுமையாக எதிர்த்தார். "டி.எஸ். சேனாநாயகவை வகுப்புவாதி என்று சில நாட்களுக்கு முன் ஏசினீர்களே! எந்த முகத்தோடு அவருடைய மந்திரிசபையில் போய் சேருவீர்கள்?" என்று பொன்னம்பலத்தை நேருக்குநேராகப் பார்த்துக்கேட்டார். "எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு உணர்ச்சிகரமாகப் பேசலாமே தவிர. தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் செய்யமுடியாது" என்று பொன்னம்பலம் பதில் அளித்தார்.

### செல்வநாயகம் எச்சரிக்கை

பிற்காலத்தில் "இலங்கை தமிழர்களின் தந்தை" என்று புகழ்பெற்ற எஸ்.ஜே. வி.செல்வநாயகம் அப்போது "இலங்கை தமிழ்க் காங்கிரஸ்" கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கினார். "தமிழ் மக்களை பலவீனப்படுத்தவே, சேனாநாயக உங்கள் ஆதரவைக் கோரியுள்ளார். அவருடைய வலையில் சிக்க வேண்டாம்" என்று அவர் பொன்னம்பலத்தை எச்சரித்தார். அவருடைய கருத்தை இன்னொரு முக்கிய தலைவரான வன்னியசிங்கம் ஆதரித்தார். முடிவில், இரு தரப்பினரையும் சமரசம் செய்யும் நோக்கத்துடன் ஒரு தீர்மானத்தை செயற்குழு நிறைவேற்றியது. "மலையகத் தமிழர்களுக்கு பிரஜா உரிமை கிடைப்பதற்கு. பிரஜா உரிமைச் சட்டத்தில் தேவையான திருத்தங்களை செய்ய சேனாநாயக சம்மதித்தால். மந்திரிசபையில் இலங்கை தமிழ்க்காங்கிரஸ் சேரலாம்" என்பதே அந்த தீர்மானத்தின் சாரமாகும். இந்த தீர்மானத்தை குணதிலகாவிடம் பொன்னம்பலம் தெரிவித்தார். "பிரஜா உரிமை சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வருவதில் சிரமம் ஏதும் இல்லை. நீங்கள் முதலில் மந்திரியாகிவிடுங்கள். அதன் மூலமாக, சட்டம் திருத்தம் செய்வது எளிதாகி விடும்" என்று பசப்பு வார்த்தைகள் கூறினார், குணதிலகா. அவர் கூறியதை அப்படியே நம்பினார் பொன்னம்பலம். மந்திரி பதவி ஏற்க சம்மதம் தெரிவித்தார். 1948 டிசம்பர் மாதத்தில். அவரை மந்திரியாக சேனாநாயக நியமித்தார். பொன்னம்பலம் விரும்பியபடியே கைத்தொழில், கடல் சார்ந்த தொழில் ஆகிய இலாகாக்கள் அவருக்கு ஒதுக்கப்பட்டன். அவருடைய ஆதரவாளரான கனகரத்தினத்துக்கு துணை மந்திரி பதவி கொடுக்கப்பட்டது.

### கட்சி உடைந்தது

இதைத்தொடர்ந்து "இலங்கை தமிழ்க் காங்கிரஸ்" இரண்டாக உடைந்தது. பொன்னம்பலத்தை எதிர்த்தவர்கள் செல்வநாயகம் தலைமையில் ஒன்று திரண்டனர். பொன்னம்பலம் கோஷ்டியும். செல்வநாயகம் கோஷ்டியும் தனித்தனியாக செயற்குழு கூட்டங்களை கூட்டி. ஒருவரை நீக்கி தீர்மானம் நிறைவேற்றினர். செல்வநாயகம். தமிழர் வாழும் பகுதிகளை ஒன்று சேர்த்து தனி மாகாணம் ஆக்கி. "சுயாட்சி" வழங்கவேண்டும் என்று வலியுறுத்தினார். "தமிழர் பகுதிகளை ஒருங்கிணைத்து ஒரே மாகாணமாக அமைக்கவேண்டும். இதுபோல். சிங்களப் பகுதிகளை ஒன்றுசேர்த்து மற்றொரு மாகாணம். இரண்டுக்கும் பொதுவான ஒரு மத்திய அரசு. மாநிலங்களில் சுயாட்சி. மத்தியில் கூட்டாட்சி. இதன் மூலமாகத்தான் தமிழர்களின் நலனை காப்பாற்றமுடியும்" என்று அவர் கூறினார். இதற்காக புதிய கட்சி தொடங்க தீர்மானிக்கப்பட்டது.

### "தமிழரசு கட்சி" உதயம் செல்வநாயகம் தொடங்கினார்.

இலங்கைத் தமிழர்களுக்கு சுயாட்சி பெற்றுத்தரும் நோக்கத்துடன் "தமிழரசு கட்சி" யை செல்வநாயகம் தொடங்கினார். அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த ஜி.ஜி. பொன்னம்பலம், பிரதமர் சேனாநாயகவின் அழைப்பை ஏற்று மந்திரியாகிவிட்டதால். கட்சி இரண்டாக உடைந்தது. கட்சியின் முக்கிய [illegible] விளங்கிய [illegible] தன் ஆதரவாளர்களுடன் சேர்ந்து புதிய கட்சி தொடங்க முடிவு செய்தார்.

### வழக்கறிஞர்

செல்வநாயகத்தின் முழுப்பெயர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம். இவர் 1898 மார்ச் 31ஆம் திகதி. மலாயாவில் உள்ள ஈப்போ நகரில் பிறந்தார். பிராடஸ்டன்ட் கிறிஸ்துவர். இளம் வயதிலேயே இலங்கையில் குடியேறி. தெல்லிப்பளை என்ற கிராமத்தில் ஆரம்பக்கல்வி பயின்றார். பின்னர் யாழ்ப்பாணம் செயின்ட் ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்றார். பிறகு அதே கல்லூரியில் ஆசிரியராக வேலை பார்த்தார். பின்னர் சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார். பிற்காலத்தில் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவின் தந்தை ஈஸ்மன்ட் விக்கிரமசிங்கே. பிரதம நீதிபதியான நெவில் சமரக்கோன் உட்பட பல முக்கிய புள்ளிகள் இவரிடம் ஜூனியர்களாகப் பணியாற்றினார்கள். பிரிட்டிஷ் ராணியின் வழக்கறிஞர் என்றும் புகழ் பெற்றவர். செல்வநாயகம். நீதி நேர்மை. தூய வாழ்க்கை முதலான உயர் பண்புகளைக்கொண்டிருந்த இவரை, அரசியலுக்கு வருமாறு பொன்னம்பலம் அழைத்தார். 1945ஆம் ஆண்டிலேயே வழக்கறிஞர் தொழிலில் மாதம் 10 ஆயிரம் ரூபாய் சம்பாதித்தார் செல்வா. அரசியலில் நுழைந்து பணம் சம்பாதித்தவர்களுக்கு மத்தியில், கட்சிக்காக தன் பணத்தை செலவிட்டவர் இவர். இதனால். இறுதிக் காலத்தில் பொருளாதார ரீதியில் சிரமப்பட்டார்.

### தமிழரசுக் கட்சி

செல்வநாயகத்தின் "தமிழரசு கட்சி"யின் (ஆங்கிலத்தில் "பெடரல் கட்சி) தொடக்கக்கூட்டம். 1949ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாவது வாரத்தில் கொள்ளுப்பிட்டியில் உள்ள அவர் வீட்டில் நடந்தது. தமிழர்களுக்கு மாநில சுயாட்சி பெற்றுத்தருவதற்கு தமிழரசு கட்சி போராடும் என்று அவர் அறிவித்தார். தன் கட்சியின் நோக்கங்களை விளக்க, பல்வேறு இடங்களில் நடந்த கூட்டங்களில் செல்வநாயகம் பேசினார். இந்தக் கூட்டங்களில் நட்சத்திர பேச்சாளராக அமிர்தலிங்கம் (செல்வநாயகம் மறைவுக்கு பின்னர் இலங்கைத் தமிழர்களின் தலைவராக விளங்கியர்) அறிமுகப்படுத்தப்பட்டார். கட்சி பணிகளில் வன்னியசிங்கம் முக்கியப் பங்கெடுத்துக்கொண்டார்.

### கண்துடைப்பு மசோதா

இதற்கிடையே. பொன்னம்பலத்துக்கு கொடுத்த வாக்குறுதிக்காக பிரஜா உரிமை சட்டத்தில் திருத்தங்கள் செய்யும் ஒரு மசோதாவை. பாராளுமன்றத்தில் பிரதமர் சேனாநாயக கொண்டுவந்தார். இது வெறும் கண்துடைப்பாகவே நடந்தது. "பிரஜா உரிமை பெறாதவர்கள் அந்த உரிமையைப்பெற. திருமணம் ஆனவராக இருந்தால் இலங்கையில் தொடர்ந்து 7 ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும். திருமணம் ஆகாதவராக இருந்தால். 10 ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும்" என்று இந்த திருத்தங்களில் கூறப்பட்டிருந்தது. தன்னுடைய பாட்டன், முப்பாட்டன் எல்லாம் இலங்கையில் வசித்தவர்கள் என்பதற்கெல்லாம் ஆதாரங்கள் காட்டவேண்டியிருந்தது. பாராளுமன்றத்தில் இந்த திருத்தத்தின் மீது விவாதம் நடைபெற்றபோது, செல்வநாயகம் அதை கடுமையாக எதிர்த்தார். "பிரஜா உரிமையை இழந்தவர்கள் அதை பெறுவதற்கு உதவும் வகையில் திருத்த மசோதா அமைய வேண்டும். இப்போது பிரதமர் தாக்கல் செய்துள்ள மசோதா. பிரஜா உரிமை பெற உதவுவதற்கு பதிலாக. பல தடைகளை ஏற்படுத்தியுள்ளது. பல தோட்டத் தொழிலாளர்கள். அடிக்கடி தங்கள் இருப்பிடங்களை மாற்றி இருக்கிறார்கள். அப்படியிருக்க. அவர்கள் எப்படி தாங்கள் தொடர்ந்து இலங்கையில் இருந்ததை நிரூபிக்க முடியும்?' என்று அவர் கேட்டார். காரசாரமான விவகாரத்துக்கு பிறகு, திருத்த மசோதா மீது ஓட்டெடுப்பு நடந்தது. பொன்னம்பலமும் அவர் ஆதரவாளர்களும் மசோதாவை ஆதரித்து ஓட்டுப்போட்டனர். செல்வநாயகமும் அவர் ஆதரவாளர்களும் எதிர்த்து வாக்களித்தனர். [illegible] நிறைவேறியது. எனினும், செல்வநாயகம் கூறியது போலவே இந்த மசோதாவினால் எந்த பலனும் இல்லை. 10 லட்சம் தமிழர்கள் "நாடற்றவர்கள்" என்ற நிலையில் நீடித்தனர்.

### தேர்தலில் இழப்பு

மலையகத் தமிழர்களின் தலைவராக சி.தொண்டமான் விளங்கினார். 1947 தேர்தலின்போது. மலையகத் தமிழர்கள் ஓட்டுரிமை பெற்றிருந்ததால், பாராளுமன்றத்தில் 7 இடங்களை அவர்கள் பெற்றனர். ஆனால். 10 லட்சம் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதால் 1952ஆம் ஆண்டு தேர்தலில் அவர்கள் போட்டியிடுவதற்கான தகுதியை கூட இழக்க நேரிட்டது.

### சேனாநாயக மரணம்

1952 தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன், பிரதமர் டி.எஸ்.சேனாநாயக மரணம் அடைந்தார். அவருக்குப்பின். அவர் மகன் டட்லி சேனநாயக பிரதமர் ஆனார். 1952 தேர்தலில் பொன்னம்பலத்தின் "இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி" 4 இடங்களில் வெற்றி பெற்றதுடன், தொடர்ந்து டட்லி சேனாநாயக அரசுக்கு ஆதரவு தர முன்வந்தது. அதனால் பொன்னம்பலம் மீண்டும் மந்திரி ஆனார். டட்லி சேனாநாயகவுக்கும். அவருடைய உறவினரான ஜோன் கொத்தலாவலவுக்கும் மோதல் ஏற்பட்டது. இதனால் டட்லி ராஜினாமா செய்ய நேர்ந்தது. புதிய பிரதமராக கொத்தலாவல பதவி ஏற்றார். அவர் பதவிக்கு வந்ததும், மந்திரி பதவியைவிட்டு பொன்னம்பலத்தை நீக்கினார். இதன்பின். பொன்னம்பலத்தின் அரசியல் வாழ்க்கை வீழ்ச்சி அடைந்தது. 1956 தேர்தலில் வென்று பண்டாரநாயகா பிரதமர் ஆனார். செல்வநாயகத்துடன் செய்த ஒப்பந்தத்தை கிழித்து எறிந்தார். 1956இல் இலங்கை பிரதமராக பதவி ஏற்ற பண்டாரநாயகா, இலங்கைத் தமிழர் தலைவர் செல்வநாயகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை. சிங்களவருக்கு பயந்து கிழித்து எறிந்தார். சிங்களத் தலைவர்கள் எந்தக் கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும், தமிழர்களுக்கு எதிரான திட்டங்களையும். சட்டங்களையும் கொண்டு வருவதில் ஒன்றுபடுவார்கள். சில சமயம் தமிழர்களுக்கு பரிந்து பேசுவது போலத் தோன்றினாலும், திடீரென்று தங்கள் போக்கை மாற்றிக்கொண்டு 'பல்டி' அடிப்பார்கள்.

### பண்டாரநாயகா

சிறிமாவோ பண்டாரநாயகாவின் கணவரும், சந்திரிகாவின் தந்தையுமான பண்டாரநாயகாவின் கதையும் இதுதான். ஆரம்பத்தில். தமிழர்களுக்கு ஓரளவு சாதகமாகப் பேசிவந்த பண்டாரநாயகா. 1956 தேர்தலில் வெற்றிபெற்று. ஏப்ரல் 12ஆம் திகதி பிரதமராகப் பதவி ஏற்றார். சிங்களத்தை மட்டும் ஆட்சிமொழி ஆக்க வேண்டும் என்றும். அரசு அலுவல்கள் சிங்களத்திலேயே நடைபெறவேண்டும் என்றும் சட்டம் இயற்ற ஏற்கனவே இலங்கை அரசு திட்டமிட்டு இருந்தது. சட்ட அமைச்சரை பண்டாரநாயகா அழைத்து "சிங்களமக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் அதேசமயத்தில் தமிழர்களின் நலனையும் கவனிக்க வேண்டும். அதற்கேற்றபடி சட்டத்தை தயாரியுங்கள். இலங்கையில் வாழும் எல்லா மக்களும், அரசாங்கத்துடன் தங்கள் தாய்மொழியில் தொடர்பு கொள்ள வசதி செய்து தரவேண்டும்" என்று கூறினார்.

### சிங்களவர்கள் ஆவேசம்

மொழி விஷயத்தில், பண்டாரநாயகா தமிழர்களுக்கு சாதகமாக இருக்கிறார் என்று வெளியே செய்தி பரவியது. சிங்களவர்கள் ஆவேசம் அடைந்தனர். சிங்களவர் கட்சியின் முக்கிய தலைவரான ஜெயசூரியா, பாராளுமன்றத்தின் முன் அமர்ந்தது. "சாகும்வரை உண்ணாவிரதம்" தொடங்கினார். "சிங்களம் மட்டுமே ஆட்சிமொழியாக இருக்கவேண்டும். தமிழுக்கு எந்தவித இடமும் தரக்கூடாது" என்பது அவருடைய கோரிக்கை. சிங்கள தீவிரவாதிகளின் ஆதரவில் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயகா. சிங்களவருக்கு அடிபணிந்தார். சிங்களத்தைமட்டும் ஆட்சி மொழியாக்க வகை செய்யும் சட்டத்தை 1956 ஜூன் 5ஆம் திகதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

தொடரும்...

**மறவன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிராந்தியச் செய்திகள்

## 12 இலக்கங்களை கொண்ட தேசிய அடையாள அட்டை அறிமுகம்

பன்னிரண்டு இலக்கங்களைக்கொண்ட புதிய தேசிய அடையாள அட்டை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக. ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது. 16 வயதை பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரஜைகள் அனைவரும் ஆட்பதிவு திணைக்களத்தில் தம்மை பதிவு செய்து, அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளவேண்டும். இதுவரையில் 9 இலக்கங்களும். ஆங்கில எழுத்தும் கொண்ட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வந்தன. இந்த அடையாள அட்டைகளில் உள்ள 9 இலக்கங்கள். நான்கு பாகங்களாக பிரிக்கப்படும். இதன்படி முதல் பாகத்தில் உள்ள இரண்டு எண்கள், நபரின் பிறந்த ஆண்டை குறிக்கும்.

இரண்டாம் பாகத்தில் உள்ள 3 இலக்கங்கள் குறித்த நபர் பிறந்த ஆண்டின் ஜனவரி மாதம் 1ம் திகதி முதல், அவரது பிறந்த தினம் வரையில் உள்ள நாட்களின் எண்ணிக்கையை குறிக்கும். அத்துடன் மூன்றாம் பாகத்தில் உள்ள 3 இலக்கங்கள் குறித்த நபரின் பால்நிலை குறித்த தகவலை கொண்டிருக்கும்.

எனினும் 12 இலக்கங்களை கொண்ட புதிய அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதற்கு ஆங்கில எழுத்து சேர்க்கப்பட மாட்டாது. பழைய 9 எண்களைக் கொண்ட நடைமுறை பின்பற்றப்படும் போது, 1916ம் ஆண்டு பிறந்த ஒருவருக்கும், 2016ம் ஆண்டு பிறந்த ஒருவருக்கும் ஒரே அடையாள அட்டை வழங்கப்படும் நிலை காணப்படுகிறது. இதனை தவிர்ப்பதற்காகவே இந்த 12 இலக்கங்களைக்கொண்ட அடையாள அட்டைகள் அறிமுகப படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், புதிய எண்தொடர்கொண்ட அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளும் வரையில், தற்போதுள்ள அடையாள அட்டை செல்லுபடியாகும் என்றும் ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.



## பணிபகிஷ்கரிப்பால் 5 இலட்சம் ரூபாய் நஷ்டம்

கிளிநொச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களால் கடந்த 3ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட பணி பகிஷ்கரிப்பால் 5 இலட்சம்ரூபாய் நட்டம்ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான இழப்பீடு வழங்கவேண்டும் எனக்கோரி கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள் இணைந்து கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தில் மோசடிகள். முறைகேடுகள் இடம்பெற்றதாக வடமாகாணசபையின் உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்த கருத்துக்கு. எதிர்ப்புத்தெரிவித்து கிளிநொச்சி கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் 3ஆம் திகதி பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். முன்னறிவித்தல் இன்றி முன்னெடுக்கப்பட்ட இந்த பணி பகிஷ்கரிப்பால், மாவட்ட பனை. தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தில் இருந்த பெருமளவான கள் பழுதடைந்துள்ளதாகவும் இதனால் பெருமளவு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறி அங்கத்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னை வள கூட்டுறவுச்சங்கத்தில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும், பொதுக்கூட்டத்தை நடத்தவேண்டும் எனவும் அங்கத்தவர்கள் இதன்போது கோரினர். அவர்களைச் சந்தித்த கூட்டுறவு உதவி ஆணையாளர் கு.ரவீந்திரன், இது தொடர்பில் அமைச்சின் ஊடாகவே முடிவு எடுக்க முடியும். அமைச்சுடன் பேசி முடிவைக் கூறுவதாகக் கூறினார்.

## ஆட்சி மாறினாலும் அபிவிருத்தி வரவில்லை

நாட்டின் ஆட்சி மாறினாலும் மக்களுக்கான அபிவிருத்தி வரவில்லை என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார். கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கதிரவெளி விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் (6)சனிக்கிழமை நடைபெற்ற இல்ல விளையாட்டுப்போட்டி இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில்,மத்திய அரசின் எதிர்க்கட்சியாக இருக்கின்றோம், மாகாண சபையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆட்சியாளர்களாக இருக்கின்றோம். கல்வி அமைச்சும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கையில் தான் இருக்கின்றது. அவ்வாறு இருந்தும் கூட பெருவாரியாக இருக்கும் எமது தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியை வழங்கமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலையில் இருந்துவருவதையிட்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பாகிய நாங்கள் வேதனையடைகின்றோம். இன்று நீங்கள் அன்றாடம் கண்டுகொள்ளலாம் வளங்கள் நிறைய இருந்தும் சில அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்குச் சேவை செய்யாமல் இருக்கின்றார்கள். அவ்வாறு தமிழ் மக்களுக்கான சேவையை செய்பவர்களாகமாறினால்மக்களுக்கான வாழ்வாதாரத்தை வெகுவிரைவாக கட்டியெழுப்பலாம். ஆனால் தங்களிடம் அதிகாரம்இருந்தும்மககளுக்கானசேவையைச் செய்வதாக இல்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி 01.02.2016 அன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும். முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கலந்து கொண்டு சிறப்பித்தார். முன்னதாக விருந்தினர்கள் மாணவர்களின் இனிய இசை வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. தொடர்ந்து மாணவர்களின் அணிநடை. விளையாட்டுப்போட்டிகள் என பல்வேறுபட்ட போட்டிகள் நடைபெற்றன.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் சிறப்புரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் இன்று இப்பாடசாலையின் மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டேன் என்பதனை விட ஒரு பழைய மாணவனாக கலந்துகொண்டேன் என்பதுதான் மனமகிழ்வை தருகின்றது. நான் இப்பாடசாலையில் கற்றுத்தான் ஒரு வைத்தியனாக வரமுடிந்தது. ஒவ்வொரு மாணவர்களின் முயற்சியினால் தான் வெற்றி பெற முடியும். இங்கு அனைத்து மாணவர்களும் பல துறைகளிலும் முன்னேறி வரவேண்டும். எனக்கு கல்வி கற்பித்த ஆசான்களும் இங்கு ஒன்றாக வீற்றிருக்கின்றனர். அதைவிட நான் கல்வி கற்பித்த மாணவன் இன்று ஒரு ஆசிரியராக வீற்றிருப்பது மிகவும் மகிழ்வான விடயம். ஒவ்வொருவரும் படிப்படியாகத்தான் முன்னேறி வருகின்றனர். நான் கல்வி கற்று முதல் ஒரு ஆசிரியராக கற்பித்து வந்தேன். பின்னர் எனது முயற்சியாலும் பெற்றோரின் ஆதரவோடும் நான் ஒரு வைத்தியராக வர முடிந்தது. நான் ஒரு வைத்தியராக வந்ததும் எனது தாய் மண்ணில். எனது மாவட்டத்தில் மக்களுக்காக பணி செய்தேன். ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் எதுவித அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மாவட்ட வைத்தியசாலையில் மக்களுக்காக பணி செய்து வந்தேன். அதுபோன்று இன்றும் மக்கள் பணி செய்து வருகின்றேன் என்றும் பணி தொடர்வேன். அதுபோன்று இம் மாணவர்களும் பல துறைகளிலும் முன்னேறி எமது தாய் மண்ணுக்கும் எமது பிரதேச மக்களுக்கும் பணி செய்ய முன்வர வேண்டும் என்றார்.



## யாழ். இளைஞரை துரத்தித்துரத்தி வெட்டிய கும்பல்

யாழ்ப்பாணம் கட்டப்பிராய் பகுதியில் இடம்பெற்ற குழு மோதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த தாக்குதலில் புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த க.பிரதீபன் (வயது 27) என்பவரே படுகாயமடைந்தவராவார். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, குறித்த பகுதியில் இரவு 8.30 மணியளவில் இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல் இடம்பெற்றுள்ளது. இதன்போது வீதியில் தனது முச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த குறித்த நபர் மீது மோதலில் ஈடுபட்ட குழுக்களில் ஒரு தரப்பினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன் அவரது முச்சக்கரவண்டியையும் சேதமாக்கியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த நபர் அவர்களிடமிருந்து தப்பியோட முற்பட்டபோதும் அவரை துரத்தி துரத்தி வெட்டியுள்ளனர். இதனால் கை மற்றும் கால் பகுதிகளில் காயத்திற்குள்ளான நபர் அருகில் இருந்த வீடு ஒன்றுக்குள் சென்று மறைந்து அவர்களிடமிருந்து தப்பிக்கொண்டார். இதனையடுத்து படுகாயமடைந்த குறித்த நபர் அவ்வீட்டுக்காரருடைய உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். மேலும் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயற்கை. நீர்வீழ்ச்சி அமைந்துள்ள டெவோன் வனப்பகுதியில் 03.02.2016 அன்று திடீரென ஏற்பட்ட தீப்பரவலில் சுமார் 10 ஏக்கர் வரை முற்றாக எரிந்து சேதமாகியுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

03.02.2016 அன்று மதியம் 2 மணியளவில் குறித்த தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தீப்பரவல் ஏற்பட்டுள்ள பகுதியில் இயற்கை நீர்வீழ்ச்சியான டெவோன் நீர்வீழ்ச்சி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. திம்புள்ள பத்தனை பொலிஸாரும். பொதுமக்களும் பெரும் சிரமத்திற்கு மத்தியில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இந்த தீ விபத்து சம்பந்தமான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க.கிஷாந்தன்)



## மூன்று பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு

புத்தளம் மாவட்டத்தில் வுனுவில, சிரிகம்பல-கொலனிய பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் இருந்து நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 40 வயதுடைய மூன்று குழந்தைகளின் தந்தையாவார். இவர் மூன்று நாட்களுக்கு முன்னரே உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு சில நாட்களுக்கு முன் உயிரிழந்தவரின் மனைவி. அவர்களின் குழந்தைகள் மூவரோடு தனிப்பட்ட தகராறு காரணமாக வீட்டை விட்டு சென்றுள்ள நிலையிலேயே குறித்த வீட்டில் கடந்த சில நாட்களாக உயிரிழந்த நபர் தனியாக இருந்துள்ளதாகவும் அயல்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் கொலை செய்யப்பட்டாரா? அல்லது தற்கொலை செய்து கொண்டாரா? என்பது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வுனுவில பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் 68வது சுதந்திரதினத்தை முன்னிட்டு வவனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து 14பேர் பொது மன்னிப்பில் விடுதலைசெய்யப்பட்டபோது...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆஸ்கர் நாயகன் ஏ.ஆர்.ரகுமானின் புதிய சாதனை



இசை என்று எடுத்தால் இளையராஜாவிற்கு அடுத்து கூறப்படுபவர் ஏ.ஆர்.ரகுமான். இவர் எப்போதும் தன்னுடைய வலைப்பகுதிகளில் இசையை பற்றியும், தன்னுடைய அடுத்த பயணம் பற்றியும் எப்போதுமே பகிர்ந்து வருவார். இவரின் பேஸ்புக்கை பின் தொடர்வோரின் எண்ணிக்கை எற்கெனவே ஒரு கோடியை தாண்டிவிட்டது.

தற்போது டுவிட்டரிலும் ஒரு கோடியை தாண்டிவிட்டார். இது இவரின் புதிய சாதனை யாகும். 27லட்சம் பாலோயர்களுடன் சமீபத்தில் டுவிட்டரில் இணைந்த ரஜனி 2வது இடத்திலும், முன்றாவது இடத்தில் தனுஷ் இருக்கிறார். அதோட நடிகைகளில் த்ரிஷா முதலிடத்தில் இருக்கிறார்.

## போதை மருந்து விவகாரத்தில் நயன்தாரா



தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகை நயன்தாரா. இவர் தற்போது இருகன் படத்திற்காக மலேசியா சென்றுள்ளார். இந்நிலையில் மலேசியா விமான நிலையம் இவர் சென்றபோது, நயன்தாராவிடம் போதை மருந்து இருப்பதாக யாரோ கூற, அவரிடம் சோதனை நடந்ததாக தமிழகத்தின் முன்னணி தொலைக்காட்சி ஒன்றில் கூறினர். ஆனால், இந்த செய்தி எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை, ஆனால், சமூக வலைதளங்களில் இச்செய்தி வைரசாக பரவி வருகின்றது.

## எங்கே போனது அந்த மாதர் சங்கம் – டி.ராஜேந்தர்



நடிகர் டி.ராஜேந்தர் பத்திரிகையாளர்களை சந்தித்து தனது இரண்டாவது மகன் குறள ரசனை இசையமைப்பாளராக அறிமுகப்படுத்தி வைத்தார். இது நம்ம ஆளு பாடல்கள் அனைத்தும் சிறப்பாக வந்துள்ளது, மேலும் எனது மகனுக்கு உங்களது ஆதரவை தாருங்கள் என்று கேட்டுக்கொண்டார். இதனிடையே பத்திரிகையாளர் ஒருவர் சிம்பு ஏன் இன்னும் வெளிய வரவில்லை,அவர்தப்புசெய்யவில்லை என்றால் சுதந்திரமாக இருக்கலாமே என்று கேட்டார், அதற்கு "இது சட்டப்படி சென்றுள்ளது, ஆதலால் சட்டப்படி எப்போ வரவேண்டும் என்று எங்களுக்குத் தெரியும்.

மேலும் ஏன் மகன் எந்த குற்றமும் செய்யாதவன், இப்போது தான் பிரச்சினை ஓரளவு ஓய்ந்துள்ளது. இருந்தும் சில வழக்குகளை சந்தித்து வருகிறோம். சமீபத்தில் இறந்த மூன்று பெண்களுக்காக மாதர் சங்கம் வெளியே வந்ததா, எங்கே போனது அந்த மாதர் சங்கம் என்று கேள்வி எழுப்பினார்.

## தமிழக மக்களுக்கு நன்றி தெரிவித்த சிவகார்த்திகேயன்



சிவகார்த்திகேயன் தற்போது தமிழ் சினிமா வில் தவிர்க்க முடியாத நடிகராகிவிட்டார். விஜய், அஜித் போன்ற பொக்ஸ் ஒபிஸ் நாயகர்களுக்கு அடுத்த இடத்திற்கு வந்து விட்டார்.இந்நிலையில் இவர் வெள்ளித்திரையில் காலடி எடுத்து வைத்து 4 வருடங்கள் முடிகின்றது. இதற்காக தமிழக மக்களுக்கு நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த 4 வருடத்தில் இவர் நடித்த மெரினா, மனம் கொத்தி பறவை, எதிர் நீச்சல், கேடி பில்லா கில்லாடி ரங்கா, வருத்தப்படாத வாலிபர் சங்கம், மான் கராத்தே, காக்கி சட்டை, ரஜினி முருகன் என அனைத்தும் ஹிட் வரிசை தான் என்பது குறிப்பிடத்தக்கது. வாழ்த்துக்கள் சிவகார்த்திகேயன்.

## விஜய் சேதுபதி தெரிந்து தான் செய்கிறாரா? – ரசிகர்கள் வருத்தம்



விஜய் சேதுபதி மீண்டும் தான் இழந்த இடத்தை நானும் ரவுடி தான் படத்தின் மூலம் பிடித்து விட்டார். இதனால், இதே வேகத்தோடு தன் அடுத்தடுத்த படங்களை வெளியிடவுள்ளார். அதில் எந்த தவறும் இல்லை, ஆனால், வாரத்திற்கு ஒரு படம் வெளியிட்டால் என்ன ஆவது, இவர் நடித்த சேதுபதி படம் யு சான்றிதழ் பெற்றுள்ளது.

இப்படம் பெப்ரவரி 19ம் திகதி திரைக்கு வருகின்றது. இந்நிலையில் நலன் குமாரசாமி இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்த காதலும் கடந்து போகும் படம் பெப்ரவரி 12ம் திகதி வர, இதனால், ஏதோ ஒரு படத்திற்கு வசூல் கண்டிப்பாக பாதிக்கும் என பொக்ஸ் ஒபிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றது. இதில் எந்த படம் தள்ளிப்போகும், சொன்ன திகதியிலேயே வருமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## மீண்டும் மருதநாயகம் பிரமாண்ட தொடக்கம்




கமல்ஹாசனின் கனவுப்படம் என்றால் மருதநாயகம் தான். இப்படத்தின் படப்பிடிப்பு பாதி முடிய, பட்ஜெட் காரணமாக அப்படியே நிறுத்தப்பட்டது.

பின் பலமுறை முயற்சித்தும் இந்த படம் மீண்டும் தொடங்கவே இல்லை, இந்நிலையில் இப்படத்தை லைகா நிறுவனம் தயாரிக்க முன்வந்துள்ளது. இதுகுறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கெத்து பட வழக்கில் புதிய திருப்பம்



கெத்து படத்திற்கு யூ சான்றிதழ் கிடைத்தும் வரிவிலக்கு கிடைக்கவில்லை. இதனால் சென்னை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் உதயநிதி. தற்போது விசாரணைக்கு வந்த இந்த வழக்கில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

உதயநிதி ஸ்டாலின் நடிப்பில் வெளிவந்துள்ள கெத்து படத்திற்கு வரிவிலக்குவழங்கமறுத்த அரசாணையை ரத்து செய்யவேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த தகவலை உதயநிதியே தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## விஜய்யின் தெறி டீசர் ஒரு பார்வை



இளைய தளபதி ரசிகர்கள் அனை வரும் தெறி படத்தின் டீசர் வெளியீட்டிற்காக காத்திருந்தனர். அதற்கேற்பபடத்தின் டீசரும் வந்துள்ளது. "Twingle Twingle Little Star" இதுதான் விஜய் படத்தின் டீசரின் Dialogue. விஜய் அவருக்கேற்ற Action, Comedy கலாட்டா போன்றவையும் வைத்து தெரிக்கவிட்டிருக்கிறார்.

மேலும் அட்லீ இயக்கத்தில் ஜி.வி. பிரகாஷ்குமாரின் வலுவூட்டும் இசை. பொலிஸ் கெட்டப்பில் விஜயின் துப்பாக்கி விளையாடியிருக்கிறது. மாசாக வெளியாகியிருக்கும் தெறி படத்தின் டீசர் ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது. கலைப்புலி எஸ்.தாணு பிரமாண்டமாக தயாரித்து வரும் இப்படத்தில் விஜய், சமந்தா, எமிஜாக்சன், பிரபு, ராதிகா சரத்குமார், இயக்குனர் மகேந்திரன், சத்யராஜ், மொட்டை ராஜேந்திரன், அழகம் பெருமாள், காளி வெங்கட் உட்பட பலர் நடித்து வருவது குறிப்பிடத்தக்கது

## அதர்வா குறித்து ரஜனி நம்பிக்கை



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தனக்கு யாரை யும் பிடித்துவிட்டால் மனம் திறந்து பாராட்டுவார். அந்த வகையில் சமீபத்தில் அதர்வா நடித்த கணிதன் படத்தை பார்த்துள்ளார்.

படத்தை பார்த்த பிறகு ரஜனி 'இப்படம் வெளியானதும் அதர்வா மாஸ் ஹீரோ லெவலுக்கு சென்று விடுவார்' என பாராட்டியுள்ளார். கணிதன் படத்தில் முதலில் தனுஷ் நடிப்பதாக இருந்து பின் வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

## பிரமாண்டமாக அரங்கேறுகிறது எடிசன் விருதுகள்




தமிழ் சினிமாவை கௌரவிக்கும் பொருட்டு வருடா வருடம் எடிசன் விருது கள் வழங்கப்பட்டு வருகின்றது. இதுநாள் வரை இவ்விருதுகளை தனுஷ், சிவகார்த்திகேயன் போன்ற முன்னணி நடிகர்கள் பலரும் வாங்கியுள்ளனர். கடந்த வருடம் கூட தனுஷ், கேத்ரின் ஆகியோர் சிறந்த நடிகர், நடிகைக்கான விருதை வென்றனர். இந்த ஆண்டு சென்னையில் இவ்விருது பெப்ரவரி 14ம் திகதி நடக்கவுள்ளது.

இதில் கடந்த ஆண்டு தமிழ் சினிமா வில் சாதித்தநடிகர், நடிகை, தயாரிப்பாளர், இயக்குனர், இசையமைப்பாளர், எடிட்டர், ஒளிப்பதிவாளர், சண்டைப்பயிற்சியாளர், பின்னனி பாடகர் என பல பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படுகின்றது. எந்த கலைஞர்கள் இந்த வருடம் வெற்றி பெறுவார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## மதுரை முத்துவின் மனைவி விபத்தில் பலி



பல மேடைகளில் தன் நகைச்சுவை பேச்சால் மக்களை சிரிக்க வைத்தவர் மதுரை முத்து. இதைத்தொடர்ந்து ஒரு சில படங்களில் கூட தலையை காட்டினார். இந்நிலையில் சிவகங்கை பிள்ளையார்பட்டி கோவிலுக்கு இவருடைய மனைவி வையம்மாள் சென்றுள்ளார். அப்போது திருப்பத்தூர் கோட்டையிருள் பகுதியில் கார், ட்ரைவரின் கட்டுப்பாட்டை இழந்து ஒரு மரத்தில் மோதியுள்ளது. இதில் சம்பவ இடத்திலேயே முத்துவின் மனைவி வையம்மாள் இறந்துள்ளார்.

இச்சம்பவம் சின்னத்திரை கலைஞர்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நம்மை விழுந்து விழுந்து சிரிக்க வைத்த முத்துவின் வாழ்க்கையில் இப்படி ஒரு துயரம் தாங்க முடியாதவை தான். முத்துவின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாதவன் இறுதிச்சுற்று வெற்றியால் மிகவும் சந்தோஷத்தில் உள்ளார். இந்த வெற்றியை கொண்டாடும் விதத்தில் சமூக வலைதளத்தில் ரசிகர்களுடன் கலந்துரையாடினார். இதில் வழக்கம் போல் ஒரு ரசிகர் விஜய், அஜித்தை பற்றி என்ன நினைக்கிறீர்கள், என்று கேட்டார். அதற்கு அவர், இருவருமே சிறந்த நடிகர்கள், தமிழக மக்கள் அவர்கள் மீது அதிக அன்பு வைத்துள்ளார்கள் என கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பூங்கா

## ஓ...என் நீதி தேவதையே...!

ஓ...என் நீதி தேவதையே
பெண்கள் நாட்டின் கண்கள் என
இருந்த இந்நாட்டில்
இன்று அப்பெண்களின்
கண்கள் மட்டுமல்ல
உயிரினும் மேலான கற்பும்
அவர்களின் உயிர்களுமல்லவா
பறிக்கப்படுகிறது?

நீதியில் பாரபட்சம் கூடாது
பந்த பாசத்திற்கு இடம் தரக்கூடாது
என்றுதான் நீதிதேவனை நிறுத்தாமல்
நீதி தேவதையான உன்னை
நீதியை நிலைநாட்ட
நிறுத்தியிருக்கிறார்கள்...!
உன் இனத்திற்கு நேரும் கதியைப்பார்...!

தில்லியில் அன்று நிர்பயா
சேலத்தில் நேற்று 5 வயது சிறுமி
சென்னையில் இன்று உமா
எங்கே சென்று கொண்டிருக்கிறது
இந்தச் சமூகம்...?
ஆணினம் அழிவினதின்
உச்சமாகிக் கொண்டல்லவா போகிறது...?
அதை அடக்காமல் விடலாமா?

உன்னிடமுள்ள நீதியெனும் வாளை
கூர் தீட்டிக்கொள்
காம வெறி பிடித்த கயவர்களை
கண்டிலேற்றிக் கொல்
அவன் ஆண்டியாக இருந்தாலும்
ஆதிமுதல் பணக்காரனாக இருந்தாலும்
விடாதே விடாதே கொல்...!

சிறுமியென்றும் பாராமல்
துவம்சம் செய்த அரக்கர்களை அழி
பெண்ணை ஒரு மனுஷியாகக்கூட பார்க்காத
அந்த பாதகர்களை ஒழி
எவனையும் எக்காரணம்
கொண்டும் மன்னிக்காதே
உன்னினத்தை
நீயே காப்பாற்றவில்லையெனில்
இனத்துரோகி ஆகிவிடுவாய்...!

காம வெறி பிடித்து
கற்பழிப்பில் ஈடுபட்ட நாய்களின்
கழுத்தில் மாட்டு சுருக்கு
இல்லையேல்
அவன் பிறப்புறுப்பை நறுக்கு
இல்லையேல்
நாட்டை விட்டு கடத்து...!
பெண்களை பொருளாக்கும்
பொல்லா நாய்களை
தீயில் போட்டு பொசுக்கு...!

தன்னை பெற்ற தாயும்
ஒரு பெண் என மறந்த நாய்களை
தன்னுடன் பிறந்த சகோதரியும்
ஒரு பெண் என்பதை மறந்த ஈனப்பன்றிகளை
அழித்தெடுக்க தண்டனைகளை கடுமையாக்கு
குடிதனை அமல்படுத்தியிருக்கும்
ஆட்சிக்கும் சவுக்கடியை நீட்டு
அப்போதுதான் மாறும் இந்நிலை...

## எதுவுமே வேண்டாம்...!

என்னிடமிருந்து
அன்பு வேண்டாம்
அரவணைப்பு வேண்டாம்
துன்பம் வேண்டாம்
துயரம் வேண்டாம்
அழுகை வேண்டாம்
பொய்மை வேண்டாம்
பேதம் வேண்டாம்
ஆதிக்கம் வேண்டாம்
இவை எதுவுமே
எனக்கு வேண்டாமென்று
சொல்கிறாயே
அன்பொன்றிருந்தால்
அரவணைப்பு வந்துவிடும்!
இவையிரண்டும்
வந்துவிட்டால்
மற்றவை எல்லாம்
உன்னிடம் வாராமல் போய்விடுமே
அப்புறம் எப்படி
அதனை வேண்டாமென்று
சொல்வாய்...?

## வெட்கத்திற்கு விடுதலை தா...!

வெளிச்சத்தை
இருட்டிலடைத்து
வெட்கத்திற்கு
விடுதலை தா..!
உனை முழுதாய்
ரசிக்க வேண்டுமடி என்றேன்..!
முடியாது போடா என்றுவிட்டு
முகிலை இழுத்துப்
போர்த்தியபடி
மறைந்தே போனாள்
நிலா மகள்...
ஓ... இன்று அமாவாசை..!

## சிறை பிடிக்க முடியுமா?

மூச்சுக்காற்றை
சிறைபிடிக்க முடியுமா
என்று என்னிடம்
சவால் விட்டாள்!
எப்படி முயன்றும்
"என்னால் முடியவில்லை அன்பே"
என்று தோல்வி சிறையில்
அடைபட்டுக் கொண்டேன்!
சிரித்துக்கொண்டே
அவளுடைய மூச்சுக்காற்றை
காற்றடைக்கும் தலையணையில்
சிறை பிடித்தாள்
என் செல்ல மகள்!

## முடியாது...!

"தொலைதூரத்தில்
இருக்கும் உன்னிடம்
அலைபேசியில்
ஆர்ப்பரிக்கும் அலையைப்போல்
பேசமுடிகின்ற என்னால்
நேரில் சந்தித்தால்
ஒரு நொடிகூட
தைரியமாய் பேச முடியாது..!"
என அடிக்கடி சொல்லிக்
'கொல்கிறாய்'
"வாய் பேச முடியாவிட்டாலென்ன?
உன்னிரு கண்கள் போதுமே
பேசுவதற்கு" என்றேன்
"அதுவும் முடியாது
வெட்கத்தால்
கண்களை தாழ்த்திக்கொள்வேன்
மொத்தத்தில்
உன்னை நேரில் பார்த்தால்
என்னால் எதுவுமே முடியாது"
என்று சொன்னவளே
குங்குமப்பூவைப்போல்
வெட்கப்பட மட்டும் உன்னால்
எப்படி முடிந்ததாம்...!

## நினைவுச் சுமைகளை...

'உன் நினைவுகளை
மட்டுமே சுமக்க
எனக்கு உரிமையுண்டு'
என்று சொல்லிவிட்டு
எனது நினைவுகளை மட்டும்
எடுத்துச் செல்பவளே...
என்னையும் உன்னோடு
அழைத்துச்செல்...
இல்லையேல்
என் உயிரை எடுத்துக்
கொண்டு செல்...
நீயின்றி இங்கே நான்
சடலமாய்த் திரிவதை விட
சாம்பலாய்க் கரைவது மேல்..!

## தொலைந்து போ..?

நமக்கிடையே
நடக்கும்
அலைபேசி
உரையாடல்களில்
அதிகம் ஊடல்தான்
வெற்றி நடை போடும்..!
அதிலும் நீ
அடிக்கடி என்னிடம்
'தொலைந்து போ' என்று
சொல்லும் போது
என்னுள் தோன்றுவது
ஒன்றே ஒன்றுதான்
'தேடுவது நீ எனில்
மீளா இடத்தில் கூட
தொலைந்து போகத் தயார்!'

இரு பறவைகளின்
இல்லற இன்பத்தில்
ஒரு பறவை இறந்துவிட
மறு பறவை கட்டிய
வெண் பளிங்கு
வெள்ளைக் கூடு...!
- தாஜ்மகால் -

குளிரும் இரவு
கறுத்த வானம்
பனி இறங்கும் வேளை
மேகத்தின் நடுவில் - ஒரு
வட்ட பௌர்ணமி நிலா
வெளிச்சம் அள்ளி வீசுவதை - காண
ஆவலுடன் காத்திருந்தேன் !
அந்த ஆசை
ஒரு கணத்தில் மறைந்தது
உன் முகத்தைப் பார்த்ததும் !
உன் முகத்தில் நிலவைக் காண்கிறேன்
நிலவில் உன் முகத்தைக் காண்கிறேன்
உங்களுக்குள் என்ன ஒற்றுமை ?
நிலவின் தங்கையோ நீ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பொங்குதமிழ் பிரகடன நினைவுத்தூபி முற்றத்தில் மறுபடியும் வெளிப்பட்டது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை...!



'தனித்தேசிய இனம் - மரபு வழித்தாயகம் - சுய நிர்ணய உரிமை' தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் என்று பிரகடனம் செய்து. 01.03.2002அன்று வவுனியாவில் அமைக்கப்பட்ட 'பொங்குதமிழ்' நினைவுத்தூபி முற்றத்தில் ஒன்றுகூடிய. கையளிக்கப்பட்டு. கடத்தப்பட்டு. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் வவுனியா மாவட்ட சங்கத்தினரும். வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினரும். 'ஒற்றையாட்சி எங்களுக்கு வேண்டாம். சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஸ்டியே வேண்டும். தமிழ் மக்களை தேசிய இனமாக அங்கீகரி' என்று பதாதைகளை காட்சிப்படுத்தி. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை மறுபடியும் சர்வதேச சமுகத்துக்கும். சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கும் வெளிப்படுத்தியுள்ளனர்.

கையளிக்கப்பட்டு. கடத்தப்பட்டு. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் வடக்கு கிழக்கு மாகாண சங்கங்களின் ஒழுங்கமைப்பில். சிறீலங்காவின் 68வது சுதந்திர தினத்தை பகிஸ்கரித்து 'கரிநாளாக' நினைவுகூரும் கவனயீர்ப்பு போராட்டங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களிலும் சமநேரத்தில் பெப்ரவரி 4 அன்று நடத்தப்பட்டன.

இதன்போது கறுப்புக்கொடிகளை ஏந்தியவாறும். கறுப்புப் பட்டிகளை அணிந்தவாறும் ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்திய காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் வவுனியா மாவட்ட சங்கத்தினரும். வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினரும். 'நாங்கள் எங்கள் சொந்த ஊர்களுக்குப் போகவேண்டும் வழிவிடு. இராணுவமே எங்கள் காணிகளை விட்டு வெளியேறு. எமது நிலம் எமக்கு வேண்டும். எமது கடல்வளம் எமக்கு வேண்டும். தமிழ்இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும். நிலைமாறுகால நீதி வேண்டாம். பரிகார நீதியே வேண்டும். இனக்கலப்பு பௌத்த சிங்கள குடியேற்றங்களை நிறுத்து. போரின்போது கையளிக்கப்பட்ட எங்கள் உறவுகள் எங்கே. இரகசிய வதைமுகாம்களை அம்பலப்படுத்து. கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புக்கூறு. தமிழ் அரசியல் கைதிகளை மறுப்பேதுமின்றி விடுதலைசெய். தமிழ் கிராமங்களை பௌத்தமயப்படுத்தாதே.' என்று சிறீலங்கா அரசாங்கத்தின் மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள் - மீறல்களை அம்பலப்படுத்தும் சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

'ஒற்றையாட்சிஎங்களுக்குவேண்டர்ம். சுய நிர்ணய உரிமையுடன் கூடிய சமஸ்டியே வேண்டும். தமிழ் மக்களை தேசிய இனமாக அங்கீகரி' என்று அறிவிக்கும் வடக்கு கிழக்கு தமிழர் தாயக வரைபடங்களுடன் பதாதைகளையும் காட்சிப்படுத்தியிருந்தனர்.

**கூட்டமைப்புக்கும் கண்டனம் !!!**

இதேவேளை. சிறீலங்காவின் 68வது சுதந்திரதின நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன். யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோருக்கும் தமது பலத்தகண்டனத்தையும்எதிர்ப்பையும்



பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

'சுதந்திரம்இல்லாதமக்களின்பிரதிநிதி சுதந்திர தின நிகழ்வில். படித்தவனை நம்பினோம் படுகுழியில் தள்ளுகிறான் தமிழ் இனத்தை. உரிமைக்கான உயிர்த்தியாகத்தை விபச்சார அரசியல் ஆக்காதே' என்று சுமந்திரனின் உருவப்படங்கள் அச்சிடப்பட்ட சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

**அரசாங்க அதிகாரிகளுக்கும் கறுப்புக்கொடி காட்டப்பட்டது !!!**

குறித்த 'பொங்குதமிழ்' நினைவுத்தூபி முற்றத்துக்கு சமீபமாக அமையப்பெற்றுள்ள வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக வருகை தந்த அரசாங்க திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்கும் கறுப்புக்கொடி அசைத்து மக்கள் தமது எதிர்ப்பை காட்டினர்.

காலை 8.30 மணியிலிருந்து மாலை 3.30 மணி வரை இந்த அடையாள உண்ணாவிரத கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்திய மக்களுக்கு. வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் உவகையோடு நெல்லிரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடிவுறுத்தி வைத்தனர்.

**செய்தியறிக்கையிடல் மற்றும்**
**ஒளிப்படங்கள்**
**அ.ஈழம் சேகுவேரா**

---

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

பிரச்சினைகள் ஏற்படும்போது மௌனித்திருந்த இந்த சர்வதேச நாடுகள் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அபிவிருத்தி என்ற போர்வையில் நாட்டிற்குள் நுழைந்து. சர்வதேச அரங்கில் இலங்கையை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதே இந்நாடுகளின் முக்கிய நோக்கமாகும். தமிழ் மக்கள் தரப்பில் பல அமைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் பாராளுமன்றத்தேர்தலில் அதிகபட்சமாக 22 ஆசனங்களை மாத்திரம் பெறக்கூடியதாகவிருக்கின்றது. 03 தசாப்தங்களின் பின்னர் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிப் பதவி தமிழ் இனத்திற்குக் கிடைத்திருப்பது என்பது வரலாற்றில் பதிவுசெய்யப்படவேண்டியதொன்று. இவ்வொற்றுமையை சீர்குலைக்க வேண்டுமாகவிருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கெதிராக ஒருகட்சியையோ அல்லது அமைப்பினையோ உருவாக்கினால்தான் அது சாத்தியப்படும். அதுவும் தமிழ் மக்கள் மத்தியில் அதிகளவு அபிமானத்தைப் பெற்றிருக்கக்கூடிய ஒருவரே அவசியமாகின்றார். அத்தலைமையை பொறுப்பெடுத்துச் செய்யக்கூடிய வகை யில் வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள் அதற்குத் தகுந்தவர் எனத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இதன் பின்னணியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்ற பல புத்திஜீவிகள் இருந்தாலும் கூட இவர்களைப் பின்புலத்தில் இருந்து இயக்கப்போவது ரணில் அவர்கள்தான். விடுதலைப்புலிகள் வசமிருந்து கருணாவைப் பிரித்தெடுத்த பெருமை அவரையே சாரும். முதலமைச்சர் விக்னேஸ்வரன் அல்லது ஏனைய தலைமைகளை பிரித்தாளுவதில் அவருக்குச் சிரமங்கள் ஏதும் ஏற்படாது. பாராளுமன்றத்திலே எதிர்க்கட்சியாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு செயற்படுவதை சிங்கள இனவாதக் கட்சிகள் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதாகவில்லை. ஆகவே ஒவ்வொரு தமிழ்க்கட்சிகளையும் வேறுவேறாகப் பிளவுபடுத்துவதன் மூலம் தமிழரசுக்கட்சி தனித்து விடப்படும். குறைந்தது அவ்வாறு தனித்துவிடப்படும்போது 05 அல்லது 06 ஆசனங்களுக்கு மேல் பெற்றுக்கொள்ள இயலாது. இவ்வாறாக நிலைமைகள் தோற்றுவிக்கப்படும் போதுதான் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எதிர்க்கட்சிப் பதவி யில் இருந்து அகற்றப்படும். இதன்போது சிங்களக் கட்சிகளே எதிர்க்கட்சியாக வரவேண்டிய சூழ்நிலை உருவாகும்.

தமிழர் பேரவையினது முன்னெடுப்புக்கள் தாகவிருந்தாலும் அது தமிழரசுக்கட்சி அல்லது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஆதரவின்றி செயற்படுவது என்பது தவறானது. இத்தகைய நிலை மாற்றப்படவேண்டும்.

விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் 22 ஆசனங்களைக் கைப்பற்றியதைப்போன்று மீண்டும் 22 ஆசனங்களைப்பெறவேண்டிய நிலை மைகள் உருவாகவேண்டும். அதற்கு தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமை மிக அவசியம். உலக நடைமுறையில் விபச்சாரிகள் தான் இன்று ஒருவர். நாளை ஒருவர் எனச் சுற்றிவருவார்கள்: வருகின்றாரக்ள். எதிலும் அவர்கள் திருப்திகொள்வதில்லை. ஆகவே இதனைப்புரிந்துகொண்டு இந்தத் தமிழர் பேரவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினதும். தமிழரசுக் கட்சியினதும் ஆதரவினைப்பெற்று செயற்படுவதே சாலச்சிறந்தது. கிடைத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ளத்தவறினால் தமிழ் மக்களது பெரும்பான்மை சீர்குலைக்கப்பட்டு சிங்கள இனம் மீண்டும் எம்மை காலடியில் வைத்து மிதிக்கும் நிலைமை உருவாகும். அந்த சாபக்கேடு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களால் இத் தமிழினத்திற்கு வந்துவிடக்கூடாது என்பதற்கான ஒரு எச்சரிக்கையாக இந்தக் கட்டுரை அமைபட்டும்.

---

## மூதூர் கிழக்கு சம்பூர் பகுதிக்கு செல்லும் வீதி தார் வீதியாக மாற்ற நடவடிக்கை

கடற்கரைச்சேனை நாவலடி சந்தியில் இருந்து சம்பூர் வரையான 4.5. கி.மீற்றர் தூர மான கிரவல் வீதி தார் வீதியாக மாற்றப்பட உள்ளது. இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்ணாண்டோவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 57 மில்லியன் ரூபாய்கள்செலவிலான இவ்வீதி இலங்கை கடற்படையினரால் அமைக்கப்பட உள்ளது. இந்த நிகழ்வில் மாகாண ஆளுநருடன் கிழக்குமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் ஆரியவதிகலபதி. சுகாதார அமைச்சர் நசீர் அகமட். மாகாண சபை உறுப்பினர் கு.நாகேஸ்வரன். மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார. கிழக்கு மாகாண கடற்படை தளபதி ரியர் அட்மிரல் என்.பி. ஜே.ரொசைரோ ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இதனைத்தொடர்ந்து கிழக்கு மாகாண ஆளுநர் மீள்குடியமர்த்தப்பட்ட சம்பூர் மக்களைச் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்து கொண்டார். கடந்த வருடம் ஆவணி மாதம் 22ம் திகதி இம்மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மீளக்குடியமர்த்தப்பட்டனர். 5மாத காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆளுநர் பார்வையிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீக உலகம்



## விவேகானந்தரின் சிந்தனைகள்

தன்னை அடக்கப்பழகிக்கொண்டவன் வேறு எதற்கும் சிக்கமாட்டான். அத்தகைய தகுதி உள்ளவனே உலகில் நன்றாக வாழத் தகுதியுள்ளவன். பலமே வாழ்வு. பலவீனமே மரணம்.

தூய்மை. பொறுமை. விடாமுயற்சி இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாத வையாகும். அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

உறுதியுடன் இரு. அதற்கு மேலாகத் தூய் மையானவனாகவும். முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு. வலிமையின்மையே ஒருவனின் துன்பத்திற்கு காரணம். நாம் பலவீ னமாக இருப்பதாலேயே பொய்யும் திருட்டும் ஏமாற்று வேலைகளும் இன்னும் நம்மைவிட்டு அகலவில்லை.

வாழ்க்கையில் வெற்றிபெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஏதோ ஓரிடத்தில்| அளவற்ற நேர்மையும். அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். அந்த குணங்கள் தாம் அவர் அடைந்த சிறந்த வெற்றிகளுக்கு காரணமாகும்.

உலகில் உள்ள மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி இகழ்ந்தாலும் சரி நீ உண்மை என்னும் பாதையிலிருந்து அனுவளவேனும் பிறழாமல் கவனமாக இருக்கவேண்டும்.

மனிதப்பிறவிதான் பிரபஞ்சத்திலேயே மிகச் சிறந்ததாகும். எல்லா மிருங்களைக் காட்டிலும் எல்லாத் தேவர்களைக் காட்டிலும் மனிதர்களே உயர்ந்தவர்கள். மனிதர்களைக்காட்டிலும் உயர்ந்தவர்கள் யாரும் இல்லை.

பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. அதையும் தாண்டி மனிதன் அடையவேண்டிய அனுபவங்கள் பல உள்ளன. மன நிம்மதி. அன்பு. தவம். தியானம் முதலிய குணங்கள் எல்லாம் பணத்தால் வருபவை அல்ல. அவரவர் விதி. அவரவர் கையிலேயே இருக்கிறது.

மற்றவர்களின் தெய்வீக இயல்பை வெளிப்படுத்த உதவி செய்வது தான் நம்முடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழியாகும்.

பொய் சொல்வது சாதாரண விஷயம் அல்ல. அது ஒரு கலை. பொய் சொல்ல அசாத்திய திறமைவேண்டும். ஏராளமான ஞாபகசக்தி வேண்டும். ஆனால் பொய் சொல்லி பிறரை ஏமாற்றுபவர்கள்மற்றஏமாற்றுக்காரர்களாலேயே பாடம் பெறுவார்கள். துக்கம் என்பது அறியாமையின் காரணமாகத்தான் ஏற்படுகிறது. வேறு எதனாலும் அன்று.

கடலைக்கடக்கும் இரும்பு போன்ற மன உறுதியும் மலைகளையே துளைத்துச்செல்லும் வலிமை தோள்களுமே நமக்குத்தேவை. வலிமைதான் வாழ்வு. பலவீனமே மரணம். மிகப்பெரிய இந்த உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள். இருதயம் விரிவடைந்துள்ள இடத்தில்தான் உண்மை. ஞானம் உதிக்கும். அந்த உண்மை ஞானம்தான் நம்பிக்கை.

அடக்கப்படாமல் உள்ள மனமும், அற வழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச்சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும். அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலகபந்தயங்களில் இருந்து விடுதலையளிக்கும். கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான்.

காமம். பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட் படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர். எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ. அவரையே நான் மகாத்மா என்பேன்.

அன்பு நெறியிற்சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக்கூறும் முறை மதம் எனப்படும். கோழைகளே பாவ காரியங்களைப் புரிந்திடுவர். தைரிய முடையோர் ஒருக்காலும் பாவம் செய்யார். பலமற்ற மூளையில் நாம் எதையுமே செய்ய இயலாது. அதனால் நாம் அதைப் பலப்படுத்தவேண்டும்.

அச்சமே நமக்குத் துயரத்தைத் தருவது. அச்சமே கேட்டை விளைவிப்பது. அச்சமே மரணத்தைத் தருவது. நமது உண்மை இயல்பை நாம் அறிந்து கொள்ளாமல் இருப்பதனால்தான் நமக்கு அச்சம் ஏற்படுகின்றது.

## நபிமொழிகள்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மாண்பும் வலிவுமிக்க அல்லாஹ் கூறினான்: என் அடியான் ஒரு நன்மையைச் செய்ய எண்ணி, அதைச்செய்யாமல் இருந்துவிட்டாலும் அதை அவனுக்கு ஒரு நன்மையாகவே நான் பதிவு செய்வேன். அந்த நன்மையை அவன் செய்து முடித்தால் அதை நான் பத்து முதல் எழுநூறு மடங்கு நன்மைகளாகப் பதிவு செய்வேன். அவன் ஒரு தீமையைச் செய்ய எண்ணினான் ஆனால். அதைச் செய்யவில்லை என்றால். அதை நான் ஒரு குற்றமாகப் பதிவு செய்வதில்லை. அவன் அந்தத் தீமையைச் செய்து முடித்துவிட்டால் அதை ஒரேயொரு குற்றமாகவே நான் பதிவு செய்வேன்.
அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்.
நூல்: முஸ்லிம்.

"ஒருவன் தன் சமூகத்தை நேசிப்பது இனவெறியாகுமா?" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வினவினர். அதற்கு நபியவர்கள் "இல்லை. மாறாக. மனிதன் தன் சமூகத்தார் (பிறர் மீது) கொடுமை செய்ய முற்படும்போது அவர்களுக்கு துணை புரிவதுதான் இனவெறியாகும்" என்றார்கள் (அபூதாவூத்).

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒருவர் ஒரு சாலையில் நடந்துசென்று கொண்டிருந்தபோது பாதையில் முட்கிளை யொன்றைக்கண்டு அதை எடுத்து (எறிந்து) விட்டார். அவரின் இந்த நற்செயலை அல்லாஹ் அங்கீகரித்து அவருக்கு (அவர் செய்த பாவங்களிலிருந்து) மன்னிப்பு வழங்கினான்.
அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்.
நூல்: புஹாரி.

(கணவனை இழந்த) கைம்பெண்ணுக்காகவும் ஏழைக்காகவும் பாடுபடுகிறவர். 'இறைவழியில் அறப்போர் புரிபவரைப் போன்றவராவார்' அல்லது 'இரவில் நின்று வணங்கி. பகலில் நோன்பு நோற்பவரைப் போன்றவராவார்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்.
நூல்: புஹாரி.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எந்த உணவையும் ஒருபோதும் குறை சொன்னதை தான் பார்த்ததில்லை. உணவு பிடித்திருந்தால் உண்பார்கள். பிடிக்காவிட்டால் அமைதியாக இருந்துவிடுவார்கள்.
அறிவிப்பாளர்: அபு ஹுரைரா (ரலி) அவர்கள்.
நூல்:முஸ்லிம்.

'தம் வீட்டாரிடம் இருக்கும்போது நபி(ஸல்) அவர்கள் என்ன செய்வார்கள்? என்று நான் (அன்னை) ஆயிஷா(ரலி) அவர்களிடம் கேட்டேன். அவர்கள். 'தம் வீட்டாருக்காக (வீட்டு) வேலைகளை நபி(ஸல்) அவர்கள் செய்து வந்தார்கள். தொழுகை (நேரம்) வந்துவிட்டால் தொழுகைக்காக எழுந்து (சென்று) விடுவார்கள்' என்று பதிலளித்தார்கள்.
அறிவிப்பாளர் : அஸ்வத் இப்னு யஸீத்(ரஹ்).
ஆதாரம்: புகாரி.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் 'அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் அண்டை வீட்டாருக்குத் தொல்லை தரவேண்டாம். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தாளியைக் கண்ணியப்படுத்தட்டும். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் (ஒன்று) நல்லதைப்பேசட்டும். அல்லது வாய் மூடி இருக்கட்டும்'.
அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா(ரலி).
ஆதாரம்: புகாரி.

ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம். 'நான் (இந்த) அறப்போரில் கலந்துகொள்ளட்டுமா?' என்று கேட்டார். நபி(ஸல்) அவர்கள். 'உனக்குத் தாய் தந்தையர் இருக்கின்றனரா?' என்று கேட்டார்கள். அவர். 'ஆம் (இருக்கிறார்கள்)' என்று கூறினார். நபி(ஸல்) அவர்கள். '(அவ்வாறாயின் திரும்பிச்சென்று) அவர்கள் இருவருக்காகவும் பாடுபடு' என்றார்கள்.
அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அமர்(ரலி).
ஆதாரம்: புகாரி.

(பைஸாந்திய மன்னர்) ஹெராக்ளியஸ் என்னை அழைத்து வரச்சொல்லி ஆளனுப்பினார். (நான் அவரிடம் சென்றேன்.) அப்போது ஹெராக்ளியஸ். 'அவர் (நபி(ஸல்) அவர்கள்) உங்களுக்கு என்னதான் போதிக்கிறார்?' என்று கேட்டார். நான். 'தொழுகை. தர்மம். கற்பொழுக்கம். உறவைப் பேணி வாழ்வது ஆகியப் பண்புகளை எங்களுக்குக் கட்டளையிடுகிறார்' என்று பதிலளித்தேன். அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ்(ரலி). ஆதாரம்: புகாரி.

02ஆம் பக்கத் தொடர்ச்சி...

தமிழ் மக்களது உரிமைகளை வென்றெடுக்க தமிழ்க்கட்சிகளும். தமிழ் அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டாலே அது சாத்தியமாகும். பிரபாகரனின் போராட்டத்தை சிதைக்கும் வகையில் காட்டிக்கொடுப்புக்கள் இடம்பெற்றன. அதனது விளைவு என்னவென்பது அனைவருக்கும் தெரியும். அரசினது சூழ்ச்சிகளுக்கு எம்மினம் அகப்பட்டுப்போகாத வகையில் எமது அரசியலை முன்னெடுத்தால் தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொள்ள இயலுமே தவிர. அரசின் பேச்சுக்கெல்லாம் தலையாட்டினால் நாம் மீண்டும் ஒரு அடிமை இனமாக வாழக்கூடிய நிலைமைகள் உருவாகும். இதனைக்கருத்திற்கொண்டு த.தே. கூட்டமைப்பு செயற்படவேண்டும். இதற்கு உதாரண புருஷராக விடுதலைப்புலிகளின் தலைவர் செயற்பட்டார் என்பது சான்றாகும். அதனாலேயே அவர் இறுதிவரை தனது இலட்சியத்திலிருந்து மாறவில்லை என்பதேயாகும்.

04ஆம் பக்கத் தொடர்ச்சி...

அனுமதிவேண்டும் என மாறிமாறி விடயங்களைக் குறிப்பிடுவதென்பது தமிழ் மக்களுடைய தீர்வுகளுக்கு பொருத்தமற்ற செயலே. அரசாங்கம்சொல்வதைக்கேட்டு நாம் செயற்படுவோமாகவிருந்தால் எமது அரசியல் தீர்வுகளைப்பெற்றுக்கொள்ள இயலாத ஒரு சூழ்நிலையே உருவாகும். சர்வதேச விசாரணையை மழுங்கடிக்கும் நோக்கில் மைத்திரி-ரணிலின் கூட்டணி செயற்பட்டுக்கொண்டிருக்க. இதற்கான மாற்றுவழிகளைச் சிந்தித்து செயற்படுத்தவேண்டுமே தவிர, அதியுயர் சமஷ்டியை அரசிடம் பேசிப் பெற்றுத்தருவோம் எனக்கூறுவது முட்டாள்த்தனம். ஆகவே தமிழினத்தினுடைய இனப்படுகொலையை மையமாகக்கொண்டே நாம் எமது அரசியல் காய்நகர்த்தல்களை சர்வதேச மட்டத்தில் நகர்த்தவேண்டும். அதுவே தமிழ் மக்களுக்கு சிறந்த தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும். முதலமைச்சர் விக்னேஸ்வரன் நல்லவர் கெட்டவர் என்பதற்கப்பால் நீண்டகாலத்திற்கு அப்பால் ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றியிருக்கின்றார். அத் தீர்வுத்திட்டத்திற்கு ஆதரவு வழங்குவோமாகவிருந்தால் சர்வதேசத்திற்கு நாம் உரக்கக் கூறமுடியும். ஆனால் முதலமைச்சர் தமிழர் பேரவை என்ற அமைப்பில் இணைத்தலைவராக செயற்படுகின்றார். இவ்விடயத்தையும் அரசு தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முற்படலாம். இந்நிலையில் இலங்கையில் சர்வதேச விசாரணைகள் எவ்வாறான நிலையை நோக்கிப் பயணிக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

## பைபிள் கூறும் பொன்மொழிகள்

முட்டாளின் வழி அவனுடைய கண்களுக்குச் சீராகத்தான் தோன்றும். ஆலோசனைக்குச் செவி கொடுப்பவன் தான் அறிஞனாவான்.

நேர்மையாளனின் பாதை உதய ஒளி போன்றது. நடுப்பகல் வரை பரிபூரணமாக அதன் பிரகாசம் மென்மேலும் உயர்ந்துகொண்டே போகும்.

ஒன்றுமில்லாதவன் தன்னை ஏதோவென்று நினைத்துக்கொள்வானாகில் அவன் தன்னைத்தானே வஞ்சித்துக்கொள்கிறான்.

எந்தப் பறவையாயிருந்தாலும் அதன் கண்பார்வையின் முன்னால் வலை விரிப்பது வீணே!

மனிதனின் இருதயம் அவனுடைய வழியை வகுக்கும். ஆனால். அவனது காலடிகளை வழிநடத்துபவர் கடவுளே.

சிலரின் பாவச்செயல்கள் விசாரணைக்குப் போகுமுன்பே வெளியாகிவிடுகின்றன. மற்றும் சிலருடையதோ விசாரணைக்குப் பிறகு தான் பின் தொடர்கின்றன.

அநியாயத்தின் மூலம் கிடைக்கும் பெரும் வருமானத்தைவிட. நியாயமாய்ச் சம்பாதிக்கும் சொற்பமே மேலானது.

உன் மட்டில் கவனமாயிரு. உன் சகோதரன் உனக்கெதிராக மீறி நடந்தால் கண்டிக்கலாம். ஆனால். மனம் வருந்துவானேயானால் அவனை மன்னித்துவிடு.

கதிரவனும். கேடயமுமாய் இருக்கும் கடவுள் நமக்கு அருளையும். மேன்மையையும் அளிப்பார்.

மன ஒற்றுமை கொண்டிருங்கள். அமைதியுடன் வாழுங்கள். அப்போது அன்பும் அமைதியும் அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார்.

கடவுள் எத்தனை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள். அவரிடம் அடைக்கலம் புகுவோர் பேறுபெற்றோர்.

ஆண்டவர் மனிதருக்குத் தந்துள்ள ஆவி. ஒரு விளக்கு. அது அவர்களின் உள்ளத்தில் இருப்பதையெல்லாம் ஆய்ந்தறியும்.

இறையாட்சி என்பது நாம் உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக தூய ஆவி அருளும் நீதி. அமைதி. மகிழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

ஞானமும் அறிவும் உனக்கு இனிமையாய் இருக்கும். அவற்றை நீ அடைந்தால் முடிவில் உனக்குப் பயன்கிடைக்கும். உன் நம்பிக்கை வீண்போகாது.

தேனை மிகுதியாகச் சாப்பிடுவது எவ்வாறு நல்லது இல்லையோ. அதேபோல் புகழை மிகுதியாக விரும்புவதும் நல்லதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் உலகம்

## மமூத் யானையின் எலும்புகள் கண்டெடுப்பு



அமெரிக்காவில் விளையாட்டு மைதானத்தை விரிவுபடுத்தியபோது 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மமூத் யானையின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் ஒரேகன் மாநிலத்தில் ஒரேகன் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இந்த பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான கால்பந்தாட்ட மைதானத்தை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து அந்தப் பகுதியில் ஊழியர்கள் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அப்போது 10 ஆயிரம் ஆண்டுகள் பழமையான மமூத் யானைகளின் எலும்புகளை அவர்கள் கண்டெடுத்தனர். உடலில் அதிக ரோமத்துடனும் உருவத்தில் மிகப்பெரியதுமாக இருந்த மமூத் யானைகள் காலச் சுழற்சியில் அழிந்துபோயின என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் முன்னரே ஒட்டகம் மற்றும் பைசன் காட்டு எருமை ஆகியவைகளின் எச்சங்கள் கிடைத்துள்ளன. இதுகுறித்து பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் லோரென் டெவிஸ் கூறியதாவது. ஏராளமான எலும்புகள் கிடைத்துள்ளன. அவைகளில் சில சிதைந்து போயுள்ளன. எனினும் ஒரு சில எலும்புகள் பாதுகாக்கப்படும் வகையில் எந்த சேதமும் இல்லாமல் உள்ளது என்று தெரிவித்துள்ளார். நோய் காரணமாக பாதிக்கப்பட்ட விலங்குகள் நதிகளில் இறங்கி தங்களின் உயிரை விடுவது வாடிக்கைதான் எனவும் அதன் காரணமாக இப்பகுதியில் பழங்கால விலங்குகளின் உடல்கள் காணப்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

## புதிய மைல்கல்லை எட்டியது கூகுளின் ஜிமெயில் சேவை




இணையஉலகின் ஜாம்பவானாக திகழும் கூகுள் நிறுவனத்தினால் வழங்கப்படும் மின்னஞ்சல் சேவை ஜிமெயில் ஆகும். இம் மின்னஞ்சல் சேவையே இன்று உலகில் அதிகளவான பயனர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போதைய நிலையில் இச்சேவையை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 1 பில்லியனிலும் அதிகமாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த எண்ணிக்கை நாளாந்தமா அல்லது மாதாந்தமா என்ற தகவல் வெளியிடப்படவில்லை.

இந்த ஜிமெயில் சேவை 2004ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டிருந்த நிலையில் குறுகிய காலத்தில் ஏனைய மின்னஞ்சல் சேவைகளுக்கு சவால்விடும் வகையில் வளர்ந்துள்ளதுடன், இம் மின்னஞ்சல் கணக்கினை பயன்படுத்தியே அன்ரோயிட் மொபைல் இயங்குதளம், யூடியூப், கூகுள்மேப் போன்ற அப்பிளிக்கேஷன்கள் கையாளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மார்க் ஜுக்கர்பெர்க் பற்றிய ஆச்சரியத் தகவல்கள்



பேஸ்புக் சமூக வலைத்தளம் தொடங்கப்பட்டு 12 ஆண்டுகள் ஆகின்றன. பேஸ்புக்கின் பிறந்த நாளை நண்பர்கள் தினமாக கொண்டாடும்படி மார்க் ஜுக்கர்பெர்க் தெரிவித்திருந்தார். இந்நிலையில் மார்க் ஜுக்கர்பெர்க் பற்றிய சில ஆச்சரியத் தகவல்களைப் பார்ப்போம். மார்க் தனது 12வது வயதிலேயே புரோகிராமிங் எழுத தொடங்கிவிட்டார். அவரது ஆர்வத்தை பார்த்த பெற்றோர்கள் அவருக்கு கணணி தொடர்பாக பயிற்சி அளிப்பதற்காக ஒரு ஆசிரியரை நியமித்தனர்.

ஆனால் சில நாட்களிலேயே மார்க்கின் திறமையைக் கண்டுவியந்த ஆசிரியர் அவரை பெரிய மேதை என்று அவரது பெற்றோரிடம் தெரிவித்தார். உயர்கல்வியை முடிப்பதற்கு முன்பே மார்க்கை தங்களின் நிறுவனத்தில் பணியமர்த்த மைக்ரோசொப்ட் உள்ளிட்ட நிறுவனங்கள் போட்டிபோட்டன. ஆனால் மார்க் மறுத்துவிட்டார். 2004ஆம் ஆண்டு தான் படித்துகொண்டிருந்த ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் ஓய்வறையில் இருந்து பேஸ்புக்கை தொடங்கினார். பேஸ்புக் தொடர்பான ஆராய்ச்சிக்கே தனது நேரத்தை செலவிட்டதால் கல்லூரியில் இருந்து பாதியிலேயே வெளியேற்றப்பட்டார்.


## காரின் பெயரை மாற்றுகிறது டாடா நிறுவனம்



உலக நாடுகளை ஜிகா வைரஸ் அச்சுறுத்தி வருவதால், மிகப்பெரிய கார் நிறுவனமான டாடா நிறுவனம் தனது காரின் பெயரை மாற்ற முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. டாடா நிறுவனம் zippy carயினை சந்தையில் அறிமுகப்படுத்த திட்டமிட்டிருந்த வேளையில், சில காரணங்கள் அறிமுகப்படுத்த முடியாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கொசு மூலம் பரவும் ஜிகா வைரஸ் தொற்றின் அபாயம் குறித்து சர்வதேச அளவிலான எச்சரிக்கையை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள நிலையில், டாடா நிறுவனம், தனது புதிய காரின் பெயரை மாற்ற முடிவு செய்துள்ளது. அதேசமயம அந்த புதிய ரக காரின் பெயர் விபரங்களை டாடா வெளியிடவில்லை.

பிரேஸிலில் ஜிகா வைரஸ் காரணமாக, கருவில் இருக்கும் சிசுக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்கிற அச்சுறுத்தல் அதிகரித்துவரும் சூழலில், பாதிக்கப்பட்டவர்களுக்கான தமது அனுதாபத்தை பகிர்ந்துகொள்ளும் நோக்கில், தமது புதிய காருக்கு வைக்க திட்டமிட்டிருந்த ஜிகா எனும் பெயரை, டாடா மாற்ற உள்ளதாக அறிவித்துள்ளது.


## ஐபோனிற்கு சவால் விடும் சம்சுங்கின் புதிய Galaxy A9 Pro



ஸ்மார்ட் கைப்பேசி உற்பத்தியில் பல நிறுவனங்கள் ஈடுபட்டுள்ள போதிலும் சம்சுங் மற்றும் அப்பிள் நிறுவனங்களுக்கிடையிலேயே கடும் போட்டி நிலவுகின்றது. இந்நிலையில் அப்பிளின் ஐபோனிற்கு சவால்விடும் வகையில் Galaxy A9 Pro எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை சம்சுங் நிறுவனம் விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது. இக்கைப்பேசியானது 6 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், Snapdragon 652 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM என்பனவற்றினைக் கொண்டுள்ளது.

மேலும் Android 6.0 Marshmallow இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக இருக்கும். இக்கைப்பேசியில் 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா, 8 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கெமரா என்பவற்றினையும் கொண்டுள்ளது. இதேவேளை Window 10 மொபைல் இயங்குதளத்துடன் கூடியதாகவும் இக்கைப்பேசி அறிமுகம் செய்யப்படலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

## 5G இணைய சேவைக்காக கூகுளின் அதிரடித் திட்டம்



தற்போது காணப்படும் 4G இணைய வலையமைப்பினை விடவும் 40 மடங்கு வேகம் கூடியதே 5G இணைய வலையமைப்பு ஆகும். இதற்கான முதற்கட்ட சோதனைகள் வெற்றிபெற்றுள்ள நிலையில், கூகுள் நிறுவனம் 5G வலையமைப்பு சேவையினை வழங்க புதிய திட்டம் ஒன்றினை தீட்டியுள்ளது. அதாவது சூரிய சக்தியில் இயங்கக்கூடிய ட்ரோன் வகை சிறிய விமானங்களைப் பயன்படுத்தி இவ் இணைய சேவையினை வழங்கத் தீர்மானித்துள்ளது. செக்கனுக்கு ஜிகாபிட்ஸ் வேகத்தில் தரவுகளை பரிமாற்றும் இச்சேவையினை முதன் முறையாக மெக்ஸிகோவில் அறிமுகம் செய்ய தீர்மானித்துள்ளது.

தொலைக்காட்சி அலைவரிசைகளையும் இணையத்தின் ஊடாக எவ்வித தடங்கலும் இன்றி பார்த்து மகிழும் வசதியைத் தரும் இந்த 5G சேவையினை வழங்குவதற்கு Federal Communications Commission (FCC) அமைப்பிடம் கூகுள் நிறுவனம் அனுமதியும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போதையாக்கும் உணவுகள்



உணவுகளை உட்கொள்ளும் நாம் சில நேரங்களில் நமக்கு பிடித்தமான உணவுகளுக்கு அடிமையாகிவிடுகிறோம் (Addiction). ஆனால், நாம் எந்த உணவுக்கு அடிமையாகிவிடுகிறோமோ, அந்த உணவுகள் நம்முடைய செயற்பாடுகளை பாதிக்க வாய்ப்புள்ளது.

சமீபத்தில் மிச்சிகன் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆராய்ச்சியில், மாணவர்களுக்கு அதிகம் பிடித்த உணவாக முதலில் சொக்லெட், இரண்டாவதாக ஐஸ்க்ரீம், பீட்சா போன்றவை இடம்பெற்றுள்ளன. இவைகளை சாப்பிடுவது முக்கியமல்ல, ஆனால் இவற்றினைத் தொடர்ந்து சாப்பிட்டால் ஏற்படும் பிரச்சினைகளை தெரிந்துகொள்ளுங்கள்.

மனிதனின் மகிழ்ச்சி மற்றும் புத்துணர்ச்சி போன்ற உணர்வுகளுக்கு காரணமான ஹோர்மோன்களை சுரக்கச் செய்வதில் உணவின் பங்கு அதிகம். குறிப்பாக டோபமைன் (Dopamine) மற்றும் அட்ரினலைன் (Adrenaline) ஹோர்மோன்கள் சுரப்புக்கு உணவு காரணமாகிறது. உதாரணமாக சொக்லெட், ஐஸ்க்ரீம், மைதா உணவுகளான பிட்சா, பர்கர் மற்றும் கோலாவை, உருளைக்கிழங்கு, மது போன்றவற்றை உட்கொள்ளும்போது மகிழ்ச்சி உணர்வை ஏற்படுத்தும் டோபமைன் ஹோர்மோன் சுரக்கிறது.

சிலர் கோ(f)பி, டீ குடிக்கும்போதும் சிகரெட் பிடிக்கும்போதும் சோம்பல் நீங்கி சுறுசுறுப்பு கிடைப்பது போல உணர்வார்கள். கஃபைன், புகையிலைப் பொருட்கள் ஆகியவையும் சுறுசுறுப்பு தரும் அட்ரினைல் ஹோர்மோன் சுரப்புக்குக் காரணமாகின்றன. அதாவது, ஒரு வேலையை செய்து கொண்டிருக்கும்போது, உங்களுக்கு சலிப்பு ஏற்படுகிறது. எனவே சுறுசுறுப்பை தரும் உணவுகளை உட்கொள்ளும் நீங்கள், நாளடைவில் உங்களை அறியாமலேயே அந்த உணவுகளுக்கு அடிமையாகி விடுகிறீர்கள்.

சில வருடங்கள் இந்தப் பழக்கத்தை தொடரும்போது மூளையின் நரம்பு மண்டலத்தை தாக்கி உங்கள் செயல்களை முடக்கிவிடுகிறது. கட்டுப்பாட்டை இழக்கும் மூளை சுய நினைவை இழக்கிறது. பதற்றம், விரக்தி போன்ற விபரீத செயற்பாடுகளுக்கும் தூண்டப்படுகிறீர்கள் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள். மொத்தத்தில், நீங்கள் எந்த உணவினை எடுத்துக்கொண்டாலும், அதனை அளவோடு எடுத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு உற்சாகம் வேண்டும் என்பதற்காக நீங்கள் அதனை அடிக்கடி எடுத்துக்கொண்டால், அது உங்களுக்கு ஒருவித போதையைத் தருகிறது என்றே அர்த்தம்.

---

அப்பிள் நிறுவனம் அடுத்த வருடம் அறிமுகம் செய்யவுள்ள iPhone 7 Plus ஸ்மார்ட் கைப்பேசியில் பல புதிய அம்சங்கள் உள்ளடக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இதன் தொடர்ச்சியாக இக்கைப்பேசியின் கெமரா இரண்டு வில்லைகளை (Dual Lens) அடிப்படையாகக்கொண்டதாக இருக்கும் எனு புதியதகவல்ஒன்றுவெளியாகியுள்ளது. இதற்காக சீனா, ஜப்பான் மற்றும் தாய்வானின் Largan Technology நிறுவனம் என்பவற்றிலிருந்து இரட்டை வில்லை கெமராக்களைப்பெற்று அப்பிள் நிறுவனம் பரிசோதித்து வருகின்றது. இதேவேளை iPhone என்பவற்றில் பயன்படுத்தப்பட்டும் கெமராக்களில் 60 சதவீதமானவை தாய்வானைச்சேர்ந்த Largan Technology நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இதுதவிர இக்கைப்பேசியில் வேகம் கூடிய Apple A10 tif Processer இணைக்கப்படலாம் எனவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு உலகம்

## 100 குழந்தைகளுக்கு உதவும் முயற்சியில் யுவராஜ் சிங்



புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 100 குழந்தைகளுக்கு உதவும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார் அதிரடி வீரர் யுவராஜ் சிங். ஒருகாலத்தில் இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர்களில் ஒருவர் யுவராஜ் சிங். இவருக்கென்றே தனி ரசிகர்கள் பட்டாளம் உண்டு. சில ஆண்டுகளுக்கு முன் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மீண்டு வந்து அதிரடி காட்டத் தொடங்கியுள்ளார். இந்நிலையில் தன்னைப்போன்றே புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள 100 குழந்தைகளுக்கு நிண்டகால அடிப்படையில் கல்வி நிதி யுதவி வழங்க தீவிர ஆர்வம் காட்டி வருகி றார்.

இதுகுறித்து அவர். TogetherWeCan என்ற இயக்கத்தின் மூலம் 100 குழந்தைகளின் 5 ஆண்டுகால கல்விச்செலவை ஏற்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேலும் எனது அனைத்து சதங்களை விடவும், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மீண்டு வரும் இந்த 100 குழந்தைகளின் கல்விக்கு அளிக்கும் ஆதரவு குறித்து மிகுந்த பெருமை அடைகிறேன் என டுவிட் செய்துள்ளார். இந்தத் திட்டத்திற்கு லக்ஷ்மண், சச்சின் டெண்டுல்கர், ஜாகீர் கான், ரோஹித் சர்மா, கவாஸ்கர் மற்றும் விராட் கோஹ்லி போன்றோரும் தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

## பாலியல் புகாரை சட்டரீதியாக சந்திப்பேன் – அணித்தலைவர்



இங்கிலாந்து பெண் கொடுத்த பாலி யல் குற்றச்சாட்டு குறித்து சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன் என இந்திய ஹொக்கி அணித்தலைவர் சர்தார் சிங் விளக்கம் அளித்துள்ளார். இந்திய ஹொக்கி அணித்தலைவர் சர்தார் சிங், என்னை பாலியல் ரீதியாக அடித்து துன்புறுத்தியதாக பஞ்சாபில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஆஷ்கர் போகல் என்ற பெண் புகார் அளித்திருந்தார். இந்த புகார் குறித்து சர்தார் கூறியதாவது, ஆஷ்கர் போகல் கூறியதைப்போல எந்த சம்பவமும் நடக்கவில்லை. பெண்களை மதிக்கும் கலாச்சாரத்தில் இருந்து வந்த நான், எப்படி ஒரு பெண்ணை துன்புறுத்துவேன். என்னுடைய வரை முறையை நான் அறிவேன். பல இளைஞர்கள் கவனித்துக் கொண்டிருக்கும் இந்திய அணித்தலைவரான நான் எல்லை மீறி நடந்துகொள்ள மாட்டேன். என் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது.

2012ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் போது நாங்கள் இருவரும் சந்தித்துக்கொண்டோம். அதன் பின்னர் நட்பாக பழக ஆரம்பித்தோம். ஆனால், நாங்கள் இருவரும் திருமணம் செய்துகொள்ளப்போகிறோம் என்ற தவ றான தகவலை வெளியிட்டார், தற்போது என்மீது பாலியல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார், இதனை நான் சட்டரீதியாக சந்திப்பேன் என்று கூறியுள்ளார்.

## சூதாட்டத்தில் ஈடுபட்ட அவுஸ்திரேலிய வீராங்கனைக்கு தடை



சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றத்திற்காக அவுஸ்திரேலிய வீராங்கனை பைபா கிளியரிக்கு ஆறு மாதம் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்கு அவுஸ்திரேலியாவின் இளம் கிரிக்கெட் வீராங்கனையான பைபா கிளியரி, பிக்பாஷ் டி20 போட்டியில் பெர்த் அணிக்காக விளையாடுகிறார். இந்நிலையில் இவர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதாவது கடந்த 2015ம் ஆண்டு நவம்பர் அவுஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகள் மோதிய ஆண்கள் டெஸ்ட் போட்டி நடந்தது.

இந்தப் போட்டியில் ஆறுமுறை சூதாட்டத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. இதனைத்தொடர்ந்து பைபா கிளியரிக்கு ஆறு மாதம் சிறைத்தண்டனை விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் 18 மாதங்கள் சூதாட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிர்ப்பந்தம் காரணமாகவே ஓய்வு முடிவு - சந்தர்போல்



மேற்கு இந்திய கிரிக்கெட் வாரியத்தின் மறைமுக நிர்ப்பந்தம் காரணமாகவே ஓய்வு முடிவை எடுத்துள்ளதாக சந்தர்போல் விளக்கமளித்துள்ளார். மேற்கு இந்திய துடுப்பாட்ட அணிக்காக 20 ஆண்டுகளுக்கும் மேலாக விளை யாடியவர் சந்தர்போல். இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிப்பதாகக் கூறி வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் வாரி யம் அவரை நிரந்தரமாக ஒரங்கட்டியது. இதனால் கடந்த மாதம் அவர் சர்வதேச துடுப்பாட்டங்களில் இருந்து ஓய்வு பெறு வதாக அறிவித்தார். மேற்கு இந்திய அணிக்காக அதிக டெஸ்ட்களில் (164) ஆடியவர் என்ற பெருமைக்குரியவர் சந்தர்போல். இதனிடையே தமது ஓய்வு விவகாரம் குறித்து பல தரப்பில் சர்ச்சை எழுந்துள்ள நிலையில் அவரே அது குறித்து விளக்கமளித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் மாஸ்டர்ஸ் சாம்பியன்ஸ் லீக் போட்டிகளில் பங்கேற்பதற்காக மேற்கு இந்திய கிரிக்கெட் வாரியம் தமக்கு தடையில்லா சான்றிதழை வழங்கியுள்ளது என குறிப்பிட்ட அவர், ஜனவரி 23ஆம் திகதி தாம் அதிகாரபூர்வமாக ஓய்வு அறிவிப்பை வெளியிட்ட பிறகே அந்த சான்றிதழை அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [illegible] அந்த சான்றிதழை தந்து இருக்க [illegible] எனவும் அவர் தெரிவித்துள்ளார். மேற்கு இந்திய அணிக்காக நீண்டகாலம் விளையாடிய [illegible] தம்மை, இதைவிட நன்றாக நடத்தியிருக்கலாம் [illegible] தமது உணர்வு [illegible]

## ரோஹித் சர்மாவின் ஆசை



இந்தியாவின் முன்னாள் அதிரடி வீரர்களான சச்சின்-கங்குலி போன்று நானும், ஷிகர் தவானும் அதிரடியாக விளை யாடி வெற்றிகளை குவிக்கவேண்டும் என ரோஹித் சர்மா தெரிவித்துள்ளார். இந்தியாவின் தொடக்க வீரரான ரோஹித் சர்மா அதிரடியாக விளையாடி வருகிறார். இந்நிலையில் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது, ஒருகாலத்தில் சச்சின்-கங்குலி ஜோடி சிறப்பாக விளையாடி னர். அவர்களுடன் என்னையும், ஷிகர் தவானையும் ஒப்பிட்டு பேசுவது அளப்பரிய மகிழ்ச்சி.

அவர்களுக்கு இணையாக நாங்களும் வலம்வரவேண்டும். ஆனால் அதற்கு இன்னும் நிறைய தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இருவரும் இணைந்து பல்வேறு வெற்றிகளை குவிக்க வேண்டும். இதுவே எனது ஆசை என்று தெரிவித்துள்ளார். மேலும் நான் எத்தனையோ சாதனைகள் செய்தாலும் என்னுடைய சிறந்த ஆட்டம் இன்னும் விளையாடவில்லை என்றே மனதில் கூறிக் கொள்வேன் என்றும், முந்தைய சாதனை களால் நான் மனநிறைவு பெற்றால், அதன் பிறகு என்னால் ஒருபோதும் உயரிய நிலையை எட்ட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.


## 500வது கோலை அடித்தார் மெஸ்ஸி



உலகின் தலைசிறந்த கால்பந்தாட்ட வீரரான மெஸ்ஸி 500 கோல்களை அடித்து சாதனை படைத்துள்ளார். கோபா டெல் ரே கால்பந்து தொடரின் அரையிறுதி முதல் லெக் ஆட்டம் கேம்ப் நியு மைதானத்தில் நடந்தது. இந்த ஆட்டத்தில் பார்சிலோனா 7-0 என்ற கோல் கணக்கில் வாலென்சியா அணியை வீழ்த்தியது.

பார்சிலோனா அணியில் விளையாடிய மெஸ்ஸி மூன்று கோல்களை அடித்தார். இதில் ஒன்று மெஸ்ஸியின் 500வது கோலாகும்.

## அதிரடி சதம் அடித்த ஜெயவர்த்தன



ஓய்வுபெற்ற வீரர்கள் விளையாடும் மாஸ்டர் சாம்பியன்ஸ் லீக் டி20 கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி யின் ஜாம்பவான் ஜெயவர்த்தன அதிரடி சதம் அடித்துள்ளார். சகிட்டரியஸ் ஸ்ட்ரைக்கர்ஸ்- லிப்ரா லிஜெண்ட்ஸ் அணி கள் மோதின. சகிட்டரியஸ் ஸ்ட்ரைக்கர்ஸ் அணிக்கு கில்கிறிஸ்ட் அணித்தலைவராக இருக்கிறார். லிப்ரா லிஜெண்ட்ஸ் அணிக்கு கலிஸ் அணித்தலைவராக இருக்கிறார். கில்கிறிஸ்ட் அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. கில்கிறிஸ்ட் மற்றும் ஜெயவர்தன தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். கில்கிறிஸ்ட் 28 பந்தில் 3 பவுண்டரி, 3 சிக்சர்களுடன் 38 ஓட்டங்கள் சேர்த்தார்.

அடுத்து வந்த இம்ரான் பர்ஹாத் 18 ஓட்டங்கள் சேர்த்தார். ஆனால் ஜெயவர்தன அதிரடியாக விளையாடி னார். அவர் 60 பந்தில் 10 பவுண்டரிகள், 9 சிக்சர்களுடன் 124 ஓட்டங்கள் குவித்தார். இதனால் கில்கிறிஸ்ட் அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 227 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் 228 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கலிஸ் அணி களம் இறங்கியது. அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 164 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் கில்கிறிஸ்ட் அணி 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## எம்.சி.எல். லீக்கில் ருத்ரதாண்டவம் ஆடிய சேவாக்



சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும் எம்.சி.எல் லீக்கில் சேவாக் கலக்கிவருவது அவரது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற வீரர்களை வைத்து எம்.சி.எல். லீக் என்ற டி20 போட்டித்தொடர் சமீபத்தில் தொடங்கப்பட்டது. இதில் ஜாக் கலிஸ், விரேந்திர சேவாக், [illegible] பிரையன் லாரா, கில்கிறிஸ்ட் [illegible] உள்ளிட்ட [illegible] வீரர்கள் விளையாடுகின்றனர்.

[illegible]

ஜெமினி அரேபியன்ஸ் அணியின் தொடக்க வீரராக சேவாக் களமிறங்கினார். ஆட்டம் தொடங்கியது முதல் சேவாக் தனது அதி ரடியை காட்டத்தொடங்கினார். இதனால் 5 ஓவர்களில் ஐம்பது ஓட்டங்களை கடந்தது ஜெமினி அணி. சேவாக்கை கட்டுப்படுத்த முடியாமல் சகிட்டரியஸ் அணி தடுமாறியது. மேலும் 47 பந்துகளில் சதமடித்து சேவாக் சாதனை படைத்தார். சிறப்பாக ஆடிய அவர் 63 பந்துகளில் 134 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதில் பத்து பவுண்டரிகளும், பதினொன்று சிக் ஸர்களும் அடங்கும்.

இறுதியில் ஜெமினி - அரேபியன்ஸ் அணி 224 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் இறங்கிய சகிட்டரியஸ் ஸ்ட்ரைக்கர்ஸ் அணி 212 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது. சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக சேவாக் சமீபத்தில் அறிவித்தார். இதனால் அவரது ரசிகர்கள் அதிருப்தி அடைந்தனர். இந்நிலையில் எம்.சி.எல் லீக் உள்ளிட்ட போட்டிகளில் அவர் தனது அதிரடியை தொடர்வது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## சிரியாவுக்கு 10 பில்லியன் டொலர் நன்கொடை - உலக நாடுகள்




உள்நாட்டு யுத்தத்தால் சீர்குலைந்துள்ள சிரியாவில் இயல்பு நிலை திரும்புவதற்காக உலக நாடுகள் சுமார் 10 பில்லியன் டொலர் நன்கொடை வழங்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரித்தானிய தலைநகரமான லண்டனில் நடைபெற்ற முக்கிய கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் பங்கேற்ற பிரித்தானிய பிரதமரான கெமரூன் பேசிய போது, 'ஒருநாளில் இவ்வளவு பெரிய தொகை திரட்டப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.

சிரிய மக்களின் சீரமைப்பிற்காக இந்த நன்கொடையில் இருந்து சுமார் 6 பில்லியன் டொலர் நடப்பாண்டிலேயே செலவிடப்படும். எஞ்சிய 5 பில்லியன் டொலர் தொகையை எதிர்வரும் 2020ம் ஆண்டு வரை செலவிடப்படும்' எனத் தெரிவித்துள்ளார். சிரியாவில் தற்போது சுமார் ஒரு மில்லியன் பிள்ளைகள் பள்ளிகளுக்கு செல்ல முடியாமல் தவித்து வருகின்றனர். இதற்கு ஒரு தீர்வு ஏற்படுத்தி அடுத்த கல்வி ஆண்டிற்கு அவர்கள் அனைவரும் பள்ளிகளுக்கு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். அதே சமயம், சிரியாவிற்கு அருகே உள்ள சில நாடுகளும் சிரிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க சம்மதம் தெரிவித்துள்ளனர்.

சிரியாவிற்காக செலவிடப்படவுள்ள இந்த 10 பில்லியன் டொலர் தொகையில், பிரித்தானியா 1.75 பில்லியன் டொலரும், ஏற்கனவே செலவிட்டு வரும் தொகையுடன் கூடுதலாக 900 மில்லியன் டொலர் சேர்த்து மொத்தமாக 5 பில்லியன் டொலர் செலவிட அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளது. கடந்தாண்டு சுமார் 10 லட்சம் அகதிகளை ஏற்றுக்கொண்டு ஜேர்மனி தனது பங்கீடாக 2.5 பில்லியன் டொலர்களை சிரியாவிற்காக வழங்க முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸில் ஒரு நாளைக்கு 27 பேர் தற்கொலை



ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பிரான்ஸில் ஒருநாளைக்கு 27பேர் தற்கொலை செய்துகொள்வதாகவும், புகார் தெரிவிக்கப்படாத எண்ணிக்கை இதைவிட கூடுதலாக இருக்கும் என்ற அதிர்ச்சி புள்ளிவிபரங்கள் வெளியாகியுள்ளன. பிரான்ஸ் நாட்டின் தேசிய தற்கொலை மேற்பாவையகம் சுகாதாரத்துறை அமைச்சகத்துக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அதில், பிரான்ஸ் நாட்டில் ஒவ்வொருநாளும் 27பேர் தற்கொலை செய்துவருவதாக அதிர்ச்சித் தகவலை இணைத்துள்ளது.

குறிப்பாக, கடந்த 2012ம் ஆண்டில் மட்டும் நாடு முழுவதும் 9,715 பேர் தற்கொலை செய்துள்ளனர். ஆனால், அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்படாத எண்ணிக்கை 10,700 என்ற அளவில் இருக்கும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது, பிரான்ஸ் நாட்டு குடிமக்களில் 5ல் ஒரு நபருக்குதற்கொலை எண்ணம் ஏற்படுவதாகவும், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2,00,000 லட்சம் பேர் தற்கொலைக்கு முயல்வதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது. இவர்களில் 15 முதல் 20 வயதுடைய பெண்களே அதிகம் என தேசிய தற்கொலை மேற்பாவையகம் குறிப்பிட்டுள்ளது. இந்த அதிர்ச்சி அறிக்கையை படித்த சுகாதாரத்துறை அமைச்சரான Marisol Touraine பேசுகையில், 'நாடு ஒரு மோசமான சூழலில் போராடி வருகிறது. தற்கொலை எண்ணிக்கையை தடுக்க இனிமேலும் தாமதிக்கக்கூடாது' எனத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில் உள்ள 28 நாடுகளில் உள்ள 1,00,000 மக்கள் தொகைக்கு ஒப்பிடுகையில் தற்கொலை செய்துகொள்ளும் சராசரியான 11.7 என்ற சதவிகிதத்தைவிட கூடுதலாக பிரான்ஸில் தற்கொலை சதவிகிதம் 16.7 என்ற அளவில் அதிகரித்துள்ளது. பிரான்ஸ் நாட்டில் விவசாயம் மற்றும் காவல்துறை என இரண்டு துறைகளில் மட்டுமே அதிகளவில் தற்கொலை சம்பவங்கள் நிகழ்கின்றன. இதில் சிறைகளில் தான் கூடுதலாக தற்கொலை இடம்பெறுகிறது. தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் Technologia என்ற நிறுவனத்தின் இயக்குனர் பேசிய போது, 'தற்கொலையை தடுக்க பிரித்தானிய நாட்டில் 1950ம் ஆண்டுகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், பிரான்ஸ் நாட்டில் இதற்கான முயற்சிகள் 2000ம் ஆண்டில் தான் எடுக்கப்பட்டது. எனவே, தற்கொலைக்கு எதிராக அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## உயிருக்காக மன்றாடிய கடாபியின் கடைசி நிமிடங்கள்

லிபிய நாட்டை சர்வாதிகார ஆட்சியால் உலுக்கிய கடாபி துப்பாக்கி முனையில் ரத்த வெள்ளத்தில் இருக்கும் வீடியோ வைரசாகப் பரவி வருகிறது. லிபியா நாட்டை 42 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த கடாபி, 2011ஆம் ஆண்டு கிளர்ச்சியாளர்களால் கொலைசெய்யப்பட்டார். இந்நிலையில், கடந்த 2011 ஆம் ஆண்டு கிளர்ச்சியாளர்களின் மத்தியில் சிக்கிய கடாபி, அவர்களிடம், ரத்த வெள்ளத்தில், என்னை விட்டுவிடுங்கள் என்று கெஞ்சும் வீடியோ வெளியாகியுள்ளது. அந்த வீடியோவில், ஒருடிரக்வண்டியின்மீதுரத்தவெள்ளத்தில் கடாபி அமர வைக்கப்பட்டிருக்கிறார், அவரைச்சுற்றி கிளர்ச்சியாளர்கள் உற்சாகத்தில் கத்துகிறார்கள். ஒரு கிளர்ச்சியாளர், அவரது கழுத்தினை இறுகப்பிடித்துக்கொண்டு துப்பாக்கியை வைத்துக்கொண்டிருக்கிறார், கடாபியின் முகம் மற்றும் உடம்பிலிருந்து ரத்தம் ஊற்றுகிறது, அந்தத் தருணத்தில் கடாபி, உயிருக்காக மன்றாடுகிறார். இந்தக் காட்சியை Mr.Almani என்ற நபர் தனது கைப்பேசியில் புகைப்படம் எடுத்துள்ளார், கடாபி இறந்து 4 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பான வீடியோ வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அந்நபர் கூறியதாவது, இஸ்லாமிய மதத்தில் காழ்ப்புணர்ச்சி கொண்டு ஒருநபரை தண்டிப்பது குறித்துப் போதிக்கப்படவில்லை, ஆனால் அங்கு கூடியிருந்தவர்கள் யாரும் இந்த சம்பவத்தைத் தடுக்கவில்லை என்று கூறியுள்ளார். மேலும், அந்தக் கூட்டத்தில் Mohammed Elbibi என்ற 17 வயது நபர், கடாபியின் துப்பாக்கியை கையில் வைத்துக்கொண்டு அதனை உலகத்திற்கு காட்டுகிறார். துப்பாக்கி வைத்திருக்கும் அந்த நபரை, கிளர்ச்சியாளர்கள் சேர்ந்து தூக்கிப் பிடிக்கின்றனர். கடாபி, தான் பயன்படுத்தி வந்த துப்பாக்கியை தனது மகனுக்குக் கொடுத்துள்ளார் என்று கூறப்பட்டது. ஆனால், அத்துப்பாக்கி கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்டது, இத்துப்பாக்கியானது, கடாபியை கிளர்ச்சியார்கள் தாக்குகையில் தரையில் இருந்து எடுக்கப்பட்டது என அந்நபர் தெரிவித்துள்ளார். தற்போது, ரத்த வெள்ளத்தில் கடாபி உயிருக்காக மன்றாடும் காட்சிகள் அடங்கிய இந்த வீடியோ வெளியாகியுள்ளது.


## கற்பழிப்பு செயலை சட்டபூர்வமாக்கவேண்டும் – எழுத்தாளரின் கருத்து



உலகம் முழுவதும் ஆண்கள் பெண்களை கற்பழிக்கும் செயலுக்கு தண்டனை விதிக்காமல் அதனை சட்டபூர்வமாக்க அனுமதிக்கவேண்டும் என பிரபல எழுத்தாளர் ஒருவரின் கோரிக்கைக்கு பலத்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த எழுத்தாளரான Daryush Valizadeh(36) என்பவர் தான் இந்தக் கோரிக்கையை முன் மொழிந்துள்ளார். ஆண்கள் பெண்கள் மீது வன்முறையை பிரயோகித்து அவர்களை கற்பழிப்பதை தவிர்த்து இந்த செயலை சட்டபூர்வமாக அறிவித்தால், பெண்கள் தங்களுடைய உடலை பாதுகாத்துக்கொள்வதுடன் பணத்தையும், விலைமதிப்பில்லாத பொருட்களையும் பாதுகாக்கலாம்.

மேலும், போதை மருந்துகளை எடுத்துக்கொண்டு அறிமுகம் இல்லாத நபரிடம் விலைமாதுவாக பெண்கள் செல்வதையும் தடுக்கலாம். இதன் மூலம், கற்பழிப்பு குற்றத்திற்காக ஆண்கள் கைது செய்யப்படுவது குறைக்கப்படும் என அவர் கருத்து தெரிவித்துள்ளார். இதனை உலக அரசுகளுக்கு வலியுறுத்தும் வகையில், அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா, சிங்கப்பூர், ஜேர்மனி உள்ளிட்ட 43 நாடுகளில் உள்ள 165 நகரங்களில் கடந்த சனிக்கிழமை அன்று விவாத கூட்டங்கள் நடத்த முடிவு செய்திருந்தார். ஆனால், எழுத்தாளரின் இந்தக் கூட்டத்திற்கு பல நாடுகளில் உள்ள பெண்கள் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. 'எழுத்தாளரின் இந்தக் கருத்து பெண்களை அடிமைகளாகவும், பாலியல் எந்திரங்களாகவும் பார்ப்பது போன்று உள்ளது. 43 நாடுகளில் ஆயிரக்கணக்கான ஆண்கள் இதற்கு ஆதரவு தெரிவித்து விவாதக் கூட்டங்களில் பங்கேற்க உள்ளதாக தகவல்கள் வெளியானது. ஆனால், இந்தக் கூட்டங்களுக்கு எதிராக பெண்கள் அமைப்புகள் திரண்டு போராடுவோம் என தெரிவித்துள்ளனர். உலகம் முழுவதும் பெண்கள் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதால், எழுத்தாளரான அவர் அவசரமாக கூட்டங்களை ரத்து செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஐ.எஸ் தீவிரவாதிகளால் உளவாளி சிலுவையில் அறைந்து கொலை



தங்களுக்கு எதிராக உளவுவேலை பார்த்த உளவாளிகளை சிலுவையில் அறைந்து கொலை செய்யும் புகைப்படங்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர். உலகம் முழுவதுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருந்துவரும் ஐ.எஸ்.தீவிரவாதிகள் தங்களுக்கு எதிராகப் போராடுபவர்களை கொடூரமான முறையில் கொலை செய்துவருகின்றனர். இந்நிலையில் தங்களுக்கு எதிரான உளவு வேலை பார்த்த உளவாளிகள் இருவரை ஐ.எஸ்.தீவிரவாதிகள் கொலை செய்யும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. இந்த படுகொலைகள் லிபியா நாட்டில் நடந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த புகைப்படங்களில், முழங்காலிட்டபடி உள்ள உளவாளி அருகில், மூன்று சக்கர நாற்காலியில் ஐ.எஸ்.தீவிரவாதி ஒருவன் அமர்ந்திருக்கிறான். மேலும் அந்த புகைப்படத்தில் சிர்ட்டே நகரில் உளவாளிகளுக்கு மரணதண்டனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சில புகைப்படங்களும் வெளியாகியுள்ளன. ஐ.எஸ்.அமைப்பின் பிரச்சார ஆயுதம் மூலம் இப்புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. முன்னாள் சர்வாதிகாரி முகமது கடாபியின் சொந்த நகரமான சிர்ட்டே தற்போது ஐ.எஸ்.பிடியில் உள்ளது. ஒருவேளை சிரியாவின் ரக்காவை இழந்தாலும் மாற்று தலைநகராக சிர்ட்டேவை மாற்றும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மனநலம் பாதித்த பெண்ணை கொடூரமாக தாக்கிய பொலிசார்



பிரித்தானிய நாட்டில் மனநலம பாதித்த பெண் ஒருவரை பொலிசார் கொடூரமாக தாக்கியதால் அவரது பணி பறிக்கப்பட்டுள்ள நிலையில் சிறையில் அடைக்கப்பட்ட அந்தபெண்மனநோயாளி மர்மமான முறையில் உயிரிழந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானிய தலைநகரான லண்டனுக்கு அருகில் உள்ள Beckton என்ற பகுதியில் சாரா ரீட்(32) வசித்து வந்துள்ளார். திருமணமான இவருக்கு கடந்த 2003ம் ஆண்டு பெண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

ஆனால், குழந்தை பிறந்த சில தினங்களில் உடல்நலக்கோளாறு காரணமாக திடீரென உயிரிழந்துள்ளது. பெற்ற மகளை இழந்த துக்கத்தை தாங்க முடியாமல் அவருக்கு மனநலம் குன்றியுள்ளது. இந்த மனநல பாதிப்பு நோயுடன் அவர் ஒரு கடையில் திருட முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த சமயத்தில் சிகிச்சைக்காக மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதனை அறிந்த ஜேம்ஸ் கிட்டி என்ற பொலிசார் சாராவைக் கைதுசெய்ய மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கு சாராவிற்கும், பொலிசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்த பொலிசார் சாராவை மிகக் கொடூரமாக கைது செய்து இழுத்துச்சென்று ஹாலோவே சிறையில் அடைத்துள்ளனர். ஆனால், பொலிசார் சாராவை தாக்கிய காட்சிகள் அங்குள்ள கண்காணிப்பு கெமராவில் பதிவாகியிருந்தது. இதனை காவல்துறை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியதும் அவரது பதவி 2014ம் ஆண்டு பறிக்கப்பட்டது.

இந்த சூழலில் சிறையில் இருந்தசாராவிற்கு சரிவர சிகிச்சை அளிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் சாராவின் உடல் பலவீனமாகியுள்ளது. இந்நிலையில், கடந்த ஜனவரி 11ம் திகதி சிறை அறையை சோதனையிட்டபோது சாரா உயிரற்ற சடலமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. இதனை சாராவின் உறவினர்களுக்கு சிறை அதிகாரிகள் தெரியப்படுத்தினர். சிறைக்கு உறவினர்கள் வந்தபோது சாரா தன்னைத் தானே கழுத்தைநெறித்துக்கொண்டு தற்கொலை செய்துகொண்டதாக' சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், சாராவின் உடலை உறவினர்களிடம் காட்ட, அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக தகவல் வெளியிட்ட உறவினர்கள் 'சாராவின் இறப்பில் மர்மம் இருப்பதாகவும், இதனை விசாரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விந்தை உலகம்

## சென்றால் உயிருடன் திரும்ப முடியாத நகரம்

ரஷ்யாவில் ஒரு மலைசார்ந்த பகுதியில் உள்ளது தர்காவ்ஸ் என்ற அந்த மர்ம நகரம், இன்னும் ரஷ்யாவினராலே விடைகாணமுடியாத நெடிய புதிராக விளங்குகிறது. வாழ்பவர்கள் யாரும் இப்போது இல்லை, அங்கு காணப்படும் ஒரேமாதிரியான கட்டட அமைப்பு, வாழ்ந்தவர்கள் வீடுகளா, அல்லது கல்லறைகளா தெரியவில்லை, அவற்றில் எழும்புகளும், மண்டை ஓடுகளும் மட்டுமே மிச்சங்களாகக் கிடக்கின்றன. கணிசமான மக்களோடு இயங்கிக்கொண்டிருந்த இந்த ஊர் ஏன் காலாவதியானது? கடைசி உயிரை எப்போது பறிகொடுத்தது. தனது முழு சுவாசத்தை முடித்துக்கொண்ட இந்த நகரம் எப்படி வாழ்ந்தது? காகசஸ் மலைப்பகுதியில் புரியாத புதிராக ஆய்வுகளுக்கு பிறகும் காரணம் கண்டுபிடிக்க முடியாமல் திணறுகின்றனர். அங்கு காணப்படும் 100க்கும் மேற்பட்ட பிரமிட் அமைப்பிலான சிறு கல்லறைகள் அங்கு வாழ்ந்த மக்கள், தங்கள் அன்புக்குரியவர்கள் இறந்ததற்கு அடையாளமாகவும் கட்டியிருக்கலாம்.

அதேசமயத்தில் அங்கு மரணித்த எல்லோருக்கும் இப்படி கல்லறை உருவாகியிருக்க வாய்ப்பில்லை. இந்த காகசஸ் மலைப்பகுதியை ஒட்டி வாழும் ஊர்மக்கள், இந்த பகுதியை பற்றி சில வதந்திகளையும் கட்டுக்கதைகளையும் தங்கள் மக்களிடம் ஏற்படுத்தியிருந்தனர். அதன் விளைவாக, அங்கு சென்றால் யாரும் உயிருடன் திரும்பி வரமுடியாது என நம்பப்பட்டது. அந்த பயத்தின் காரணமாக யாரையும் அங்கு செல்ல அனுமதிப்பதில்லை. அதன் காரணமாக அருகாமையில் வாழ்ந்தவர்களுக்கு கூட அங்கு என்ன நடந்தது என தெரியாமல் போனது. தொல்லியல் ஆய்வுப்படி 16ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த நகரம் முற்றிலும் இடுகாடாக மாறியிருக்கிறது. தர்காவ்ஸ் ஊர் தெற்கு ரஷ்யாவில் உள்ள வடக்கு ஒசேத்தியா குடியரசில் அமைந்துள்ளது. இங்கிருந்து ஆபத்து மற்றும் முறுக்கலான சாலைகளில் மூன்று மணிநேரம் பயணிக்கவேண்டும். இது மலைக்கு இடையிலான பள்ளத்தாக்கின் ஒரு சரிவில் கண்டும் காணாததுபோல அமைந்துள்ளது. இதற்கு கீழ்ப்பகுதியில் பியக்டோன் ஆறு ஓடுகிறது. இந்த கிராமம் அமைந்துள்ள சரிவின் மேற்பகுதி 17 கி.மீ. உயரமுள்ள மலை சிகரம். புல்தரையுள்ள மலைப்பகுதியில்தான் இந்த இடைக்கால கிராமத்தின் வீடுகள் உள்ளன. சிறுவாசலுடைய அந்த வீட்டில் ஒரு மனிதரைக்கூட இப்போது உயிரோடு பார்க்க முடியவில்லை. இந்தப் பகுதியில் காணப்படும் முதல் குறிப்பு 14ம் நூற்றாண்டின் முற்பகுதியை சேர்ந்ததாக உள்ளது. கிழக்கு ஒசேத்தியாவில் நிலம் விலைமதிப்புடையதாக இருந்து. அதனால், வசதியற்ற ஒரு பகுதியினர் இங்கு வாழ தள்ளப்பட்டிருக்கலாம். வாழும் வசதிக்குரிய சரியான சூழல் இல்லாமல் படிப்படியாக அவர்கள் அழிந்திருக்கலாம். அங்கு காணப்படும் எலும்புகளும், மண்டை ஓடுகளும் பல நூற்றாண்டுகளுக்கு முன் இறந்தவர்களுடையது. புதைக்கப்பட்ட உடல்களுக்கு அருகே துடுப்பு, படகு போன்ற மரத்தாலான பொருளும், நாணயங்களும் வைக்கப்பட்டுள்ளது. இது எகிப்து, மெஸபடோமிய மக்கள் நம்பிக்கைபோல, இறந்த பிறகு சொர்க்கத்திற்கு ஆற்றை படகில் கடந்து செல்லவேண்டும், சொர்க்கத்துக்கு பணம் கொடுத்து செல்லலாம் என்ற நம்பிக்கையை இங்கு வாழ்ந்தவர்கள் பின்பற்றி இருப்பது தெரிகிறது. இந்த கிராமத்தின் அருகில் ஆறு ஓடுவதால் இவர்கள் மீன்பிடிக்கும் தொழில் செய்தும் வாழ்ந்திருக்கலாம். வெளியுலகின் தொடர்பில்லாமல் இவர்கள், தோன்றி வாழ்ந்து அழிந்திருக்க முடியாது. இவர்களை அறிந்தவர்களும் அழிந்திருக்கலாம், ஆனாலும், வரலாறு இல்லாமல் போனாலும், ஒரு புதிராக நின்றார்கள்.





## உலகின் அபாயகரமான பாலம்

ரஷ்யாவில் உள்ளூர் மக்களால் பயன்படுத்தப்படும் ரயில் தண்டவாளத்தை மிகவும் அபாயகரமான பாலம் என்று வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். ரஷ்யாவின் டிரான்ஸ் பைக்கல் பகுதியில் Kuandinsky என்ற பாலம் அமைந்துள்ளது. உறைந்துபோன நீர் நிறைந்த விட்டிம் நதியின் மேல் அமைந்துள்ள இந்த பாலம் உண்மையில் ரயில் தண்டவாளமாகும். எனினும் இந்த திட்டம் நிறைவேறாததால் இந்த தண்டவாளத்தை அப்படியே விட்டுவிட்டனர். இதையடுத்து அருகில் உள்ள குவாண்டா கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தங்களின் போக்குவரத்துக்காக பயன்படுத்த தொடங்கி விட்டனர். பாதுகாப்பு சுவர்கள் இல்லாதது, சேதமடைந்துள்ள மரக்கட்டைகள், வேகமான காற்று என பல்வேறு ஆபத்துகள் உள்ளபோதும் உள்ளூர் மக்கள் இதனை தைரியமாகப் பயன்படுத்துகின்றனர். மேலும் 30 ஆண்டுகளாக உள்ள இந்த மரப்பாலத்தில் சேதம் ஏற்பட்டாலும் அவர்களே சரி செய்து தங்களின் பயணத்தை தொடர்கின்றனர். அதேவேளையில் காற்று வேகமாக அடிக்கும் என்பதால் வாகன ஓட்டிகள் தங்கள் வாகனத்தின் கண்ணாடியை திறந்தபடியே செல்கின்றனர். எனினும் இந்த பாலத்தில் இதுவரை விபத்து ஏற்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஆபத்தானது என்பதால் குறைவான நபர்களே இப்பாலத்தை பயன்படுத்துவதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.



## முதியவர்கள் போல தோற்றமளிக்கும் சிறுவர்கள்

இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஒரே குடும்பத்தில் உள்ள 2 சிறுவர்கள் விசித்திர நோயால் பாதிக்கப்பட்டு முதியவர்கள் போல் தோற்றமளிக்கின்றனர். ஜார்க்கண்ட் மாநிலத்தில் ராஞ்சி எனும் பகுதியில் குடியிருந்து வருபவர் 40 வயதான ஷத்ருகன் ரஜக். இவரது 2 குழந்தைகள், பிறந்து 18 மாதங்களேயான கேஷவ் குமார் மற்றும் 7 வயதான அஞ்சலி குமாரி ஆகிய இருவரும் விசித்திர நோயால் தாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் முதியவர்கள் போன்று சுருக்கங்கள் விழுந்த தோலுடன், உப்பிய முகத்துடன், முதியவர்களுக்கு ஏற்படும் உடல் வலியுடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இவர்கள் இருவரது சகோதரியான 11 வயது ஷில்ப்பி என்பவருக்கும், தாய் தந்தைக்கும் இதுபோன்று எவ்வித குறைபாடும் இல்லை என கூறப்படுகிறது.

இந்தியாவில் உள்ள மருத்துவர்கள் இந்த நோய்க்கான சிகிச்சை எதுவும் நடைமுறையில் இல்லை எனத் தெரிவித்துள்ளதாக கூறும் இந்த குடும்பத்தினர், பொதுமக்களின் தேவையற்ற பேச்சுக்களும் கிண்டல்களும் தங்களை மிகவும் வருத்தமடைய செய்வதாக தெரிவித்துள்ளனர். Progeria எனப்படும் இந்த விசித்திர நோய் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உடல் வளர்ச்சி மிக விரைவில் நடைபெறுவதால் அவர்கள் 13 வயதினை தாண்டுவதில்லை என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். உலகில் 4 மில்லியன் பேரில் ஒருவர்தான் இதுபோன்ற அரிய வகை நோயால் பாதிக்கப்படுவதாக கூறப்படுகிறது. பிறக்கும் போது மிகவும் ஆரோக்கியத்துடன் இருக்கும் இந்த குழந்தைகள், பிறந்த முதல் ஆண்டிலேயே நோயின் அறிகுறிகளை வெளிப்படுத்துகின்றனர். [illegible] நோயால் பாதிக்கப்படும் குழந்தைளுக்கு தலை மற்றும் கண்கள் பெரிதாகவும், உடம்பின் நரம்புகள் புடைத்து காணப்படும், அதிக அளவு முடி உதிர்தலும் ஏற்படும். தமது குழந்தைகள் குறித்து மிகவும் கவலை கொண்டுள்ள ஷத்ருகன், இந்த அரியவகை நோயில் இருந்து குழந்தைகள் விடுபடும் என நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.



இலங்கையின் 68வது சுதந்திர தினத்தன்று காணாமல்போன உறவுகளுக்காக அவர்களின் உறவினர்களால் நீதிகோரி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.




முல்லைத்தீவில்...




கிளிநொச்சியில்...



மட்டக்களப்பில்...



யாழ். பல்கலைக்கழகத்தில்...



மன்னாரில்...

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 07.02.2016 அன்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org